# ஞான வள்ளல்கள்




ராஜம் பதிப்பகம்Ebook

# ஞான வள்ளல்கள்

(ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும்.)

மன்னார்குடி பானுகுமார்

ராஜம் பதிப்பகம்

EBOOK PUBLISHERS

# பொருளடக்கம்

யோகத்துக்கு யோகம் தந்த யோகராஜாக்கள்


1. இராமகிருஷ்ணர் வாழ்க்கை வரலாறு.
2. வேதாத்திரி மகரிஷி வாழ்க்கை வரலாறு.
3. அருளால் பிறந்த பிள்ளைகள்
4. தெய்வ மங்கள் தாங்கிய குழந்தைகள்.
5. விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா?
6. தேடிவந்த குருமார்கள்.
7. அமுதமொழியும் ஞானக்களஞ்சியமும்
8. ஆன்மீகச் சாதனையை எளிமையாக்கியவர்கள்.
9. இல்லறம்.
10. பக்தியும் ஞானமும்.
11. இத்தனை உருவங்களா?
12. அகங்காரம்
13. சித்திகள் ஆன்மீக வாழ்க்கைக்குத் தடை
14. பிரம்மஞானம்.....
15. ஞான வள்ளல்கள்
16. பொன்னும் மண்ணும்.
17. ஏட்டுக்கல்வி?
18. மாயை

19. முக்தியும் மோட்சமும்.
20. காமமும் அளவு முறையும்
21. தேவையற்ற மீன் வியாபாரம்.
22. உண்மை ஞானம்
23. சர்வம் சக்திமயம்.
24. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கதான் தாள்......
25. கடவுளைக் காணலாம்
26. ஆசைகள் பற்றி அருளாளர்கள்.
27. தியானம் எப்படி இருக்க வேண்டும்
28. கடவுள் கண்காணிக்கிறார்.
29. என் நிலமும் உன் நிலமும்
30. ஏன் அவதரித்தார்கள்
31. இவர்களல்லவோ மகான்கள்.
32. பேலூரும் ஆழியாறும்

# யோகத்துக்கு யோகம் தந்த யோகராஜாக்கள்

**"ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீசைதன்யர். புத்தர், இயேசுநாதர்" ஆகியோரைப் போல் ஸ்ரீராகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் அவரதார புருஷர்கள்.**

**மானுடம் ஆன்மிகப் பேரூணர்வில் நிலைத்து வளர வேண்டும் என்ற தெளிவான லட்சியத்ததுடன் தோன்றியவர்கள்.**

**"உண்மையான தேடல், அதில் நிலைபெறுதல், பின் எல்லா ஆன்மிக உண்மைகளின் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் அதன் ஒற்றுமையை நிலைநாட்டுதல்" என்ற இந்த நோக்கத்திற்காகவே தோன்றியவர்கள் இந்த மகான்கள்.**

**இந்த லட்சியத்தை அடைவதற்கான வழிமுறைகளிலும், மதங்களிடையே சமரசத்தை ஏற்படுத்துவதிலும், மனிதன் வகுத்த சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாமல் அவற்றுக்கு அப்பாற்பட்டவர்களாக இருந்தார்கள்.**

**அவர்கள் மானுடச் சூழ்நிலையில் தெய்விகத்தை வெளிப்படுத்துவதற்காகத் தமது உள்ளார்ந்த முயற்சியாலேயே அந்த உண்மையை நிலைநாட்டினார்கள்.**

**இதற்கான சாதனை முறைகளைப் பயில, பாரம்பரிய குரு-சிஷ்ய வழிமுறையிலான ஞானத்தேடல் என்ற விதிக்கு மதிப்பளிக்கவே அவர்கள் பல குருமார்களை ஏற்றார்கள்.**

**அளவற்ற ஆன்மீக சக்தியை வெளிப்படுத்தி நேரடியாக தெய்வீகப் பேருணர்வைப் பெறுவதாக அவர்களது வாழ்வு அமைந்தது.**

**இது தெய்விக சாம்ராஜ்யத்தைத் தீவிர முயற்சியால் அடைந்து, ஒன்றன் பின் ஒன்றாகப் பல நெறிகைளப் பின்பற்றி, அவற்றின்**

**சாரத்தை நேரடி அனுபவங்களால், இதுவரை இல்லாத வேகத்தில் ஆன்மிக மைய இதயத்தை அடைவதாக உள்ளது.**

**ஆன்மிக இதயம் என்பது இறையனுபவம். அதை அன்பின் சக்தியால் அடைந்து தம் இயல்பான ஆன்மிக நாட்டத்தின் வெளிப்பாடான அனுபவங்களைப் பெறுவதே உள்ளுணர்வு ஞானத்தில் இயல்பான வெளிப்பாடு.**

**இந்த மகான்களின் முழுச் சாதனைகளும் அவர்களது அளப்பரிய ஆன்மிக ஆற்றலின் அடிப்படையில் அமைந்தது.**

**அவர்கள் தீவிர வேகத்துடன் தங்களது சாதனையில் நிறைநிலையை அடைந்தார்கள்.**

**தாங்கள் சாதனை செய்த எல்லா நெறிமுறைகளையும் ஆன்மிகப் பேருணர்வின் மையத்தில் ஒன்றிணைத்தார்கள்.**

**இதன் மூலம் ஸ்ரீராமகிருஷ்ணர் மற்றும் வேதாத்திரி மகரிசி ஆகிய இருவரும் மனிதகுலத்திற்கான உண்மையான செய்தியைப் பற்றியும் இந்திய ஆன்மிகத்தில் அவர்களால் ஏற்பட்ட அரிய முன்னேற்றத்தைப் பற்றியும் நாம் அறியத் தொடங்குகிறோம்.**

**முரண்பாடுகளாகத் தோன்றும் பல்வேறு மதப் பிரிவுகளின் மத்தியில், அவை அடைவதற்குச் சிரமப்படும் அறுதியான உண்மையை, தங்களது சாதன - அனுபூதியின் வாயிலாக, மனித குலத்திற்கு அறுதியிட்டுக் காட்டுவதற்காகவே இந்த மகான்கள் தோன்றினார்கள்.**

**பல்லாயிரம் ஆண்டுகளாகப் பல சமயங்கள், பிரிவுகள் மற்றும் பாரம்பரியங்கள் எதை அடையதற்கு முயல்கின்றனவோ, எதை அடைய பல்வேறு முறைகள் மூலம் முயற்சி செய்கின்றனவோ, சமயங்கள், பிரிவுகள் எல்லாம் எந்த உண்மையின் பல்வேறு உருவப் பகுதிகளாக விளங்குகின்றனவோ, அந்த உண்மையின்**

**அறுதி அனுபவத்தின் அடிப்படை ஒற்றுமையை விளக்கிக் காட்டவே இந்த மகான்கள் தோன்றினார்கள்.**

**புத்தருக்குப் பின் கடந்த 2000 ஆண்டுகளும் இந்த அடிப்படை உண்மையின் சமரசத்தினை விளக்கப்போகும் தட்சிணேஷ்வரம் மற்றும் கூடுவாஞ்சேரி அவதாரத் தோற்றத்திற்குத் தயார்ப்படுத்தும் களமாகவே இருப்பதை காணலாம்.**

**இந்த மகான்கள் தோன்றியதிலிருந்து ஒரு புதிய யுகம் தோன்றியுள்ளது. இந்த யுகத்தில் கடவுளை உணர மனிதர்கள் மேல்நிலைக்கு எழுப்பபடுவர். ஆன்மிகம், மனித வாழ்வில் முக்கிய ஸ்வரமாக ஒலிக்கும்.**

**இந்த அற்புதமான எதிர்காலதிற்குத்தான் மகான்களின் அவதாரப் பணி அமைந்தது.**

**இத்தகைய அமர வாழ்வின் பரிமாணங்களான கர்மத்தின் ஒருங்கிணைப்பையும், ஆன்மிக ஒற்றுமையையுமே மகான்களின் உபதேசங்களும் செய்திகளும் நமக்கு எடுத்துக் கூறுகின்றன.**

## யோகத்துக்கு யோகம் தந்த யோகராஜாக்கள்

பக்தி யோகத்துக்குச் சிறந்த உதாரண புருஷர்களாகச் சைதன்யப் பிரபுவையும் நித்தியானத்தரையும் குறிப்பிடலாம்.

ஞானயோகத்துக்கு உதாரண புருஷராகச் சுகரைக் குறிப்பிடலாம்.

ராஜயோகத்துக்குச் சிறந்த உதாரண புருஷராகப் புத்தரைக் குறிப்பிடலாம்.

எல்லா யோகங்களுக்கும் சிறந்த உதாரண புருஷராக விளங்கியர்வர்கள் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் ஆவார்கள்.

இவர்கள் அனைவருடைய உள்ளமும் பரிசுத்தமே வடிவெடுத்ததாக இருந்தது.

சனகர் இல்லறத்திலிருந் கொண்டு ராஜ்ய பரிபாலனத்தையும் ஏற்று நடத்தி வந்தார். ஆனால் அவர் உள்ளம பெண்ணாசைக்கோ, மண்ணாசைக்கோ உட்படாததாக இருந்தது.

சைதன்யபிரபு. நித்தியானந்தர் ஆகிய இருவருடைய உள்ளங்களும் பக்தி உணர்வில் மூழ்கி யாண்டும் பரமானந்ததத்தில் திளைத்திருந்தன.

சுகர் முற்றிலும் தேகாத்ம புத்தியைக் கடந்திருந்தார். அவருடைய உள்ளத்தில் யாண்டும் சொரூப தியானமே நிலைத்திருந்தது.

கட்டழகே வடிவெடுத்த காளையாக அவர் திகழ்ந்தார். பிரம்மஞானத்தில் திளைத்தவராக நிர்வாணத்தோடு அவர் நடனமாடினார். 

ஒருசமயம் நதியில் நீராடிக் கொண்டிருந்த மங்கையர்கள் நிர்வாணத்தோடு வந்த சுகரைக் கண்டார்கள்.

ஆடவர்ஒருவர் வருகிறார் என்ற உணர்வே அம்மங்கயைர்களுக்கு உண்டாகவில்லை.

மங்கையர்கள் நீராடுகிறார்கள் என்பதை அவர் கவனிக்கவேயில்லை. அவருடைய உள்ளம் பிரம்ம சொரூபத்திலேயே நிலைத்திருந்தது.

புத்தருடைய உள்ளத்தைக் கலைப்பதற்கு மாரன் பல தடவை முயன்றான்.

பெண்ணாசையையும் மண்ணாசையையும் அவருடைய உள்ளத்தில் புகுத்திப் பார்த்தான். ஆனால் அவருடைய உள்ளம் மயக்கத்திற்கு உட்படவில்லை.

சமீபகாலத்தில் இராமகிருஷ்ணர் காசையே கையில் தொடாமல் வாழ்ந்தார். வேதாத்திரி மகரிசியோ "உறவிலே கண்ட உண்மை நிலைத் தெளிவே துறவு" என வாழ்ந்தவர்.

"ஞான வள்ளல்களை" வாசிக்கும் நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும் உடல் நலம், நீளாயுள் , நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என்று இறைநிலையோடு இணைத்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

குருவின் தொண்டில்

மன்னார்குடிபானுகுமார்

Mail Id. banukumar.v@gmail.com

# 1. இராமகிருஷ்ணர் வாழ்க்கை வரலாறு (1836-1886)

- சங்கரருடைய அறிவும் சைதன்யருடைய இருதயமும் கொண்ட ஒருவர் தோன்றுவதற்குக் காலம் பக்குவமுடைதாயிருந்தது. பிரதியொரு மதத்திடமும் ஒரே சக்தி, ஒரே கடவுள் இருப்பதைக் கணக்கூடிய ஒருவர் தோன்றுவதற்குக் காலம் பக்குவமுடையதாயிருந்தது. இத்தகைய ஒரு மனிதர் தோன்ற வேண்டியது அவசியமாயிருந்தது. அந்த மனிதர் தான் ஸ்ரீராமகிருஷ்ணர்.

- சுவாமி விவேகாந்தர்

**ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர்** எனப் பரவலாக அறியப்படும் **ஸ்ரீகதாதர சட்டோபாத்யாயர்** 19ஆம் நூற்றாண்டின் இந்தியாவின் தலைசிறந்த ஆன்மீகவாதிகளுள் ஒருவர்.

இவர் விவேகானந்தரின் குருவாவார். அனைத்து மதங்களும் ஒரே இறைவனை அடையும் வெவ்வேறு வழிகளே என்பதை தன் அனுபவங்கள் மூலம் உணர்ந்து அதையே வலியுறுத்தியவர்.

## இளமை

மேற்கு வங்காளத்திலுள்ள காமார்புகூர் எனும் சிறிய கிராமத்தில், க்ஷூதிராம் சந்திரமணிதேவி தம்பதியினருக்கு கதாதர் நான்காவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறு வயதில் ஆடல் பாடல்களிலும், தெய்வங்களின் படங்கள் வரைவதிலும், களிமண்ணில் சிலைகள் செய்வதிலும் ஆர்வமாயிருந்த கதாதருக்கு கணிதம் பிடிக்காத பாடமாய் இருந்தது.

கிராமத்தின் செல்லப்பிள்ளையாக அவர் விளங்கினார். சற்று வளர்ந்தவுடன் பள்ளிப்படிப்பு பொருள் ஈட்டுவதையே நோக்கமாக கொண்டிருப்பதாக கருதிய அவர் பள்ளி செல்ல மறுத்தார்.

சிறுவயதிலேயே அவருக்குத் துறவிகளின் தூய தொடர்பு கிடைத்தது.

ஆதிசங்கரர் “மானுடப் பிறவி, மோட்ச இச்சை, தூய துறவியர்களின் கூட்டுறவு ஆகிய இம் மூன்றும் கிடைப்பது அரிது” என்றார்.

புரிக்கு யாத்திரை செல்லும் துறவிகளின் சத்தசங்கம் நமது “பாலயோகி” க்கு கிடைத்து. அதனை அவரும் முறையாக பயன்படுத்திக் கொண்டார். அப்போது அவருக்கு வயது ஐந்து.

சிறு வயதிலிருந்தே அவரிடம் அருள்தாகம் ததும்பியபடி இருந்தது. கொக்குக் கூட்டம் கண்டபோதும், சிவவேடம் தரித்தபோதும், ஆனூருக்குச் செல்லும்போதும் அவருக்கு ஏற்பட்ட ஞானப் பரவச நிலைகள் தெளிவாக விளக்குகின்றன.

சிறு வயதிலேயே ஆன்மீக விஷயங்களில் ஆழ்ந்த ஞானம் உடையவராயிருந்தார்.

கதாதரர் மிகவும் சிறியவராக இருந்த போது அவரது தந்தை காலமாகி விட்டதால் தாய் சந்திரமணி, அண்ணன் ராம்குமார் ஆகியோரின் பராமரிப்பில் வளர்ந்து வந்தார். கதாதரை விட ராம்குமார் ஏறக்குறைய முப்பத்தொரு வயது மூத்தவர்.

ராம்குமாரின் திருமணம் கி.பி.1820 இல் நடந்தது.கி.பி.1849ஆம் ஆண்டில் ராம்குமாரின் மனைவி அழகிய ஆண்மகவு ஒன்றை ஈன்றாள். மறுகணமே அதன் முகத்தைப் பார்த்தவாறு உயிர் நீத்தாள்.

அந்தக் குழந்தைக்கு அட்சயன் என்று பெயரிடப்பட்டது. அதன்பின் ராம்குமாரை வறுமையும், துயரமும் வாட்டின. மனைவியின் நினைவுகளில் இருந்து விடுபடவும், பொருளீட்டவும் குடும்பப் பொறுப்பை சகோதரர் ராமேசுவரரிடம்ஒப்படைத்துவிட்டு கல்கத்தா சென்றார்.

அங்கு ஜாமாபுகூர் என்னுமிடத்தில் சமஸ்கிருத பாடசாலை ஒன்றைத் தொடங்கி சிறுவர்களுக்கு கல்வி கற்பித்து வந்தார்.

.

அத்துடன் திகம்பர மித்ரர் மற்றும் ஓரிரு செல்வந்தர்களின் வீட்டில் தினசரி பூஜையும் செய்து வந்தார். பள்ளியிலிருந்து மிகவும் குறைந்த வருவாய்தான் அவருக்குக் கிடைத்தது.

ராமேசுவரர், கதாதரனை மிகவும் நேசித்த போதிலும் அவனது படிப்பைப் பற்றி மட்டும் எந்தக் கவலையும் படவில்லை.

இயற்கையை ரசிப்பதிலும், பக்திப் பாடல்கள் பாடுவதிலும், புராணக் கதைகள் கேட்பதிலும், நண்பர்களுடன் விளையாடுவதிலும் கதாதரன் பொழுதைக் கழித்தார்.

ராம்குமார் தமது தம்பியிடம், “தம்பி! படிப்பதில் இப்படிக் கவனம் செலுத்த மறுக்கிறாயே. பிற்காலத்தில்எப்படிப் பழைக்கப் போகிறாய்?” என்று கோபித்துக் கொண்டார்.

அதற்கு இராமகிருஷ்ணர் பதிலாக, “ அண்ணா! தாங்கள் குறிப்பிடும் கல்வி கடவுளைக் காட்டுமா? வெறும் வயிற்றுப் பிழைப்புக்காக மட்டும் உபயோகப்படும் கல்வி எனக்கு வேண்டாம்” என்று கூறிவிட்டார்.

இப்படி ஏட்டுக் கல்வியே வேண்டாம் என்று மறுத்த இராமகிரஷ்ணரின் திருவடிகளில் அமர்ந்து மாபெரும் கல்விமான்கள் அறிவு வளர்ச்சி பெற்றதை வரலாறு நமக்கு தெரிவிக்கிறது.

கதாதரனும் தமது பள்ளி நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாடகக்குழு அமைத்து நண்பர்களுக்கு பயிற்சி அளித்தான்.

<u>கல்கத்தாவில்</u>

<u>கல்கத்தாவில்</u> இருந்த ராம்குமாரின் பள்ளியில் அதிக மாணவர்கள் சேர்ந்து பயில ஆரம்பித்திருந்தனர்.

வருடத்திற்கொரு முறை குடும்பத்தினருடன் தங்க வரும் ராம்குமார், கதாதரனின் போக்கில் ஏற்பட்டிருந்த மாற்றங்களைக் கண்டு கவலை கொண்டார்.

எனவே தாயுடனும் ராமேசுவரருடனும் கலந்து பேசி கதாதரனை கல்கத்தா அழைத்துச் சென்றார்.

கதாதரன் அவருடன் சென்றால் பாடசாலையை கவனிக்க உதவி செய்யலாம், மற்றவர்களுடன் படிக்கவும் செய்யலாம் என்று முடிவு செய்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் பதினேழு வயதில் அவர் கல்கத்தா சென்றார்.அண்ணனுக்கு உதவியாக வீடுகளில் சென்று பூஜைகளைச் செய்ததுடன் அவரிடம் சிறிது கல்வியும் கற்று வந்தார் கதாதரர்.

இவ்வாறுஅங்கு கதாதரர் 1852 முதல் மூன்று ஆண்டுகளைக் கழித்தார்.அடுத்த இரண்டு வருடங்களில் ராம்குமாரின் வருவாய் குறையத் தொடங்கியது.

## தட்சிணேசுவரம்

அச்சமயம் மீனவக் குடும்பத்தில் பிறந்த ராணி ராசமணி கட்டிய தட்சிணேசுவரம் காளி கோயிலில் அவர் அன்னைக்கு அன்ன நைவேத்தியம் செய்வதை சமுதாயம் ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலையில், வேதபாடசாலையில் இருந்த ராம்குமார் பிரச்சனைக்கு தீர்வு கூறினார்.

இதன்பின் ராணி ராசமணி கட்டிய கோவிலில் ராணியின் வேண்டுகோளின்படி ராம்குமார் அர்ச்சகராகப் பொறுப்பேற்றார்.

ராம்குமாரின் விருப்பப்படி தட்சிணேசுவரத்தில் இருந்து வந்தார் கதாதரர். ராணியின் மருமகனான மதுர்பாபு, கதாதரரைக் கண்டது முதலே ஈர்க்கப்பட்டு அவரிடம் அன்னை காளியின் திருவுருவத்தை அலங்கரிக்கும் பொறுப்பை ஒப்படைக்க எண்ணினார்.

ஒருமுறை மதுர்பாபு நேரடியாக பூஜைப்பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டினார்.ஆபரணங்களின் பொறுப்பை ஹிருதயர் ஏற்றுக்கொள்வதானால் தாம் பூஜைப் பணியை ஏற்றுக்கொள்வதாக கதாதரர் கூறினார்.

இது நிகழ்ந்த ஆண்டு 1855.ஏதோ வேலை நிமித்தமாக கல்கத்தாவின் வடக்கிலுள்ள சியாம்நகர் முலாஜர் என்ற ஊருக்கு சென்ற ராம்குமார் அங்கேயே காலமானார்.

காளி கோயிலின் ஒரு மூலையில் கங்கைக் கரையின் அருகில் கதாதரர் தங்குவதற்காக ஒரு அறை ஒதுக்கப்பட்டது. இங்கு தான் அவர் தம் வாழ்வின் பெரும் பகுதியைக் கழித்தார்.

தட்சிணேசுவரம் காளி கோயில் பவதாரிணி காளிக்கு தினந்தோறும் பூசை செய்து வந்த ஸ்ரீராமகிருஷ்ணருக்கு அன்னையை நேரில் காணும் ஏக்கமும் ஆவலும் தீவிரமாகி என்ன செய்தால் அன்னையின் திருக்காட்சி கிடைக்கும் என்ற எண்ணத்திலேயே இருந்தார்.

தனக்கு காட்சி அளிக்குமாறு காளியிடம் மனமுருக பிரார்த்தனை செய்தார். தினமும், இரவு நேரங்களில் கோயிலின் அருகில் இருந்த பஞ்சவடி என்ற காட்டுப்பகுதியில் காளியை நினைத்து தியானம் செய்தார்.

எனினும் அவருடைய முயற்சிகளுக்குப் பலனில்லை. ஒரு நாள் பொறுமையை இழந்த அவர், காளி சிலையின் கைகளில் இருந்த வாளினால் தன்னைத்தானே கொல்ல முயற்சித்தார்.

உடனே அவர் சுயநினைவு இழந்ததாகவும், ஒரு பேரானந்த ஒளி அவரை ஆட்கொண்டதாகவும் அவர் பின்னர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த காட்சிக்குப் பிறகு ஸ்ரீராமகிருஷ்ணரின் நடவடிக்கைகள் அசாதாரணமாக இருந்தது. இதைக்கண்ட அவர் தாயார் அவருக்கு பித்தம் பிடித்து விட்டது என்றெண்ணி, அவருக்கு திருமணம் செய்து வைத்தால் சரியாகிவிடும் என நினைத்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணரோ, இதற்கு மறுப்பளிக்கவில்லை. மாறாக, கமார்புகூரின் அருகில் இருந்த ஜெயராம்பாடி என்ற ஊரில் சாரதாமணி என்ற ஐந்து வயது பெண் இருப்பதாகவும், அப்பெண்ணே, தன்னை மணம் புரிய பிறந்தவள் என்று கூறினார்.

அதன்படியே அவர் திருமணம் நடந்தது. அனைத்துப் பெண்களையும் காளியின் வடிவங்களாக நோக்கும் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு, அவர் மனைவியும் விதிவிலக்கில்லை.

ஒருநாள் அவர் மனைவியை காளியாக நினைத்து அலங்கரித்து, பூசை செய்து, அவர் கால்களில் வீழ்ந்து வணங்கினார்.

ராணி ராசமணி 1861ஆம் ஆண்டு இறுதியில் காலமானார். அதன் பிறகு ஒருநாள் பைரவி பிராம்மணி என்ற தாந்தரிக பெண்மணி தட்சிணேசுவரத்திற்கு வந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் அவரிடம் தாந்தரிக சாதனைகள் கற்றுத் தேர்ந்தார். பின்னர் தோதா புரி என்பவரிடம் அத்வைத வேதாந்தம் கற்ற ஸ்ரீராமகிருஷ்ணர், ஆறு மாதங்கள் நிர்விகல்ப சமாதியில் திளைத்திருந்தார்.

அதன் பிறகு ராமர், கிருஷ்ணர், ஆகியோரைக் குறித்து பிரார்த்தித்து சீதை, ராதை ஆகியோருடைய காட்சி கிடைத்ததாகக் கூறியுள்ளார்.

. மேலும், கிறித்தவ, மற்றும் இஸ்லாமிய மார்க்கங்களிலும் சாதனை புரிந்து இயேசு, நபிகள் ஆகியோரின் காட்சிகளையும் தாம் கண்டதாக அவரே பின்னர் குறிப்பிட்டுள்ளார்.

## இறுதி நாட்கள்

ஸ்ரீராமகிருஷ்ணரின் இந்த சாதனைகள் பற்றி கேள்விப்பட்டு அப்போது கல்கத்தாவில் இருந்த பலர் அவரைப் பார்க்க வந்தனர். இவர்களுள் நரேந்திரநாத் தத்தா எனப்பட்ட சுவாமி விவேகானந்தர் குறிப்பிடத்தக்கவர்.

நாட்கள் செல்லச் செல்ல, அவரைப் பார்க்க வருவோரின் கூட்டம் அதிகரித்துக்கொண்டே சென்றது. அவர் நாள் முழுவதும் அவர் சீடர்களுடன் ஆன்மீகம் பற்றிய விவாதங்கள் புரிவது சர்வசாதாரணமானது.

அப்போது அவரை வந்து அடிக்கடி சந்தித்த மகேந்திரநாத் குப்தா, தினமும் அவர் கூறுபவற்றையும், அவர் புரிந்த விவாதங்களைப்

பற்றியும் வீட்டுக்குச் சென்றவுடன் தன் டயரியில் குறிப்பெடுத்துக் கொண்டார்.

இந்த குறிப்புகளே, பின்னாட்களில் *The Gospel of Sri Ramakrishna* என்ற பெயரில் தொகுக்கப்பட்டது. இது தமிழில் *ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள்* என்ற பெயரில் மூன்று பாகங்களாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் கடைசி நாட்களில் தொண்டைப் புற்றுநோய் அவரைத் தாக்கியது. அவருடைய சீடர்கள் அவரை கல்கத்தாவின் அருகில் உள்ள காசிப்பூர் என்ற இடத்தில் தோட்டவீட்டில் வைத்து வைத்தியம்,சேவை செய்தனர்.

1885 டிசம்பர் 11ஆம் நாளிலிருந்து 1886 ஆகஸ்டு 15 வரை இங்கு தங்கினார்.ஸ்ரீராமகிருஷ்ணரின் 1886 ஆகஸ்ட் 16 அன்று மகா சமாதி அடைந்தார்.

## 2 .வேதாத்திரி மகரிசி வாழ்க்கை வரலாறு.(1911-2006)

வேதாத்திரி மகரிஷி (ஆகஸ்ட் 14, 1911 - மார்ச் 28 2006) ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப் பணி ஆற்றி வந்தவர்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக்கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பசூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது,

இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்து பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனத்தை தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களை செய்து தனக்கும், தன்னை சுற்றியுள்ளவர்களின் துன்பத்தை போக்கவும் பாடுபட்டவர்.

தன் இரண்டு மனைவியருடைய மனத்தையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில் வறுமை என்றால் என்ன? கடவுள் என்பது எது? அதை ஏன் காண முடியவில்லை? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

## நூல்கள் இயற்றல்

இந்தப்பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களை பல கவிகளாகவும்,

கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு இவருக்கு கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.


மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958-ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர் மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1 வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2 வாழ்வியல் விழுமியங்கள்
3 பிரம்மஞான சாரம்
4 நான் யார் ?
5 ஞானக்களஞ்சியம்

மறைவு

அருட்தந்தை வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.


VETHATHIRI MAHARISHI BOOKS
FOR SPIRITUAL HEALTHY LIFE
GET YOUR COLLECTIONS NOW
BUY


மனவளக்கலை

## 3.ஆன்மீகச் சாதனையை எளிமையாக்கியவர்கள்.

ஆன்மீக சாதனை என்பது உயர்வர்க்கத்தினருக்கு மட்டுமே உரியது படித்த பண்டிதர்களுக்கு மட்டுமே என்றிருந்த காலக்கட்டங்களில் தோன்றியவர்கள்தான் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும்.

அவநம்பிக்கை மலிந்த இந்த நாட்களில் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் ஒரு நம்பிக்கை நட்சத்திரங்களாகத் திகழ்கிறார்கள்.

ஒளிமிக்கதும் உயிர்த்துடிப்புடன் கூடியதுமான நம்பிக்கை ஒளியை அவர்களது வாழ்க்கை வீசுகிறது.

பல்லாயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் அந்த ஒளியில் வழிகாண்கின்றனர்.

நம் நாட்டின் பண்பும் பழக்கங்களும் தனிச்சிறப்பானவை. இறைவனை அடைவதே வாழ்க்கையின் இலட்சியம்.

மரணமில்லாப் பெருநிலையை அடைய இதுவன்றி வேறு வழியில்லை என்று நமது முன்னோர்களான ரிஷிகள் வழி காட்டியுள்ளனர்.

ஆனால் தற்காலத்தில் மக்கள் பொருள் ஈட்டி போக வாழ்வில ஈடுபடுவதையே குறிக்கோளக்கிப் படாதபாடுபடுகின்றனர்.

தனிமை நிறைந்த துறவறத்திற்கும் இன்ப நாட்டம் மிகுந்த இல்லறத்திற்கும் இடையே ஒரு நடுநிலை வாழ்க்கை உண்டா? என்ற கேள்வி எழுகிறது.

இராமகிருஷ்ணர் வேதாத்திரி மகரிசி வாழ்வு இக்கேள்விகளுக்கு விடை தருகிறது.

இராமகிருஷ்ணர் வேதாத்திரி மகரிசி வாழ்ந்து வந்தது எல்லோரையும் போல சாதாரண வாழ்க்கைதான்.

ஆண்கள் வாழ வேண்டிய வாழ்க்கைக்கு ஓர் உதாரணமாக இருக்கிறது அவர்களது துறவு வாழ்க்கை.

இதே போன்று இறைவனை மையமாகக் கொண்டு வாழ்வைப் பெண்கள் வாழ முடியுமா? என்ற கேள்விக்கு அன்னை சாராதா தேவியாரின் வாழ்க்கை தெளிவான பதில் தருகிறது.

பெண்களையே ஞானாசிரியர்களாக உயர்த்திப் பெருமைப்படுத்தியவர் வேதாத்திரி மகரிசி.

அன்றாட வாழ்வின் ஒவ்வொரு செயலிலும் வேதாந்தக் கருத்துக்களை செயல்படுத்தி, மனதில் எழும் ஆசைகளை இறைவன்பால் திருப்ப வேண்டும். இதுதான் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் வழங்கும் செய்தி ஆகும்.

இதை இவர்கள் தங்களது ஆன்மிகச் சாதனைகளினால் தவசிகளுக்கும் சாதகர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடமாக்கினார்கள்.

ஒருவர் சாதாரண கோயில் புசாரியாகவும் மற்றொருவர் நெசவாளியாகவும் தங்கள் சாதனைகளைத் தொடங்கியவர்கள்.

இவர்கள் வாழ்க்கை பண்டிதர்களும், ஞானிகளும், சாதகர்களும் வியக்கும் வண்ணம் ஆன்மீக வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

ஒன்றுக்கொன்று முரணாகவுள்ள பல மதங்களும் இறைவனை நோக்கியே செல்கின்றன.

பாதைகள் வேறாக இருந்தாலும், செல்லும் இடம் ஒன்றே என்பதை அவர்கள் தங்களது அனுபவங்களில் கண்டார்கள்.

அதை எல்லோருக்கும் உபதேசித்தார்கள். இன்றைய மானுடத்திற்கு மிகவம் தேவையான கருத்துக்களில் இதுவும் ஒன்று.

துறவிகளுக்கும் இல்லறத்தாருக்கம் இறைவனை அடையும் சாதனங்கள், பாதையில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றை நீக்கும் வழி என்பது பற்றியெல்லாம் இவர்கள் தற்காலத்திற்கு ஏற்ற உபதேசங்களை அருளியுள்ளார்கள்.

இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் சாதாரண மனிதர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர்களா இருந்தார்கள்.

அவர்களது தொடர்புக்கு உள்ளானவர்கள்மீது அவர்கள் எப்படி ஆதிக்கம் செலுத்தினார்கள் என்பதை நினைக்கவே பிரமிப்பாக இருக்கிறது.

தொலைவிலிருந்து அவர்களைப் பார்த்தவர்கள், அவர்களைப் படிப்பறிவற்றகள் என்று கருதினார்கள். அருகில் நெருங்கியபோதோ, அவர்களை தெய்வ மனிதர்களாகக் கண்டார்கள், கைகூப்பினார்கள், வணங்கினார்கள்.

இராமகிருஷ்ணர் எளிய சொற்கள் மூலம் சாதாரண நடைமுறை உதாரணங்களையும், கதைகளையும் சொல்லி ஆன்மிகச் சாதனையை மக்களிடம் விதைத்தார்கள்.

வேதாத்திரி மகரிசியோ எளிமையான பல ஆன்மீகக் கவிகள், பல நூல்கள், உடற்பயிற்சி, காயகல்ப பயிற்சி, அகத்தாய்வு பயற்சி, பிரம்மஞானப் பயற்சி , தியானப் பயற்சி போன்ற பயிற்சிகளை மனவளக்கலை மூலம் மானுடத்திற்குத் தந்துள்ளார்கள்.

பைபிள், குரான், பகவத்கீதை போன்ற வேத நூல்களால் எல்லோரும் புரிந்து கொள்ள முடியாத வாழ்வியலை எம்மத்தவரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு ஒருவர் அமுதமொழிகளைத் தந்தார். மற்றோருவர் மனவளக்கலையைத் தந்தார்.

“கண்டவர் விண்டிலர்
விண்டவர் கண்டிலர்”

என்ற வாசகத்தை மாற்றி கண்டதை எளிய நடையில் ஒருவர் வங்க மொழியிலும் ஒருவர் தமிழ் மொழியிலும் சொல்லி, சொன்னதைக் காண வைத்தார்கள்.

வாருங்கள் அன்பர்களே! இவர்கள் தந்த வாழ்வியலைப் பயின்று நம் வாழ்க்கையில் பயன்படுத்தி, குடும்பத்தில் அமைதியையும் பேரின்பத்தைம் பெற்று உலக அமைதி காணலாம்.

# 3. அருளால் பிறந்த பிள்ளைகள்

- மகான்கள் வருவார்கள். அவர்கள் அந்த காலத்தின் தேவைக்கு ஏற்ப சமுதாயத்தை மாற்றி, மேலும் நல்ல வழிகளிலும் கடமைகளிலும் செலுத்துவார்கள். இத்தகைய நிலை இல்லையென்றால் சமுதாயம் தொடர்ந்து வாழ்வது என்பது முடியாமல் போய்விடும்.

- சுவாமி விவேகானந்தர்.

இயற்கைத் தகவமைப்பில் அவ்வப்போது சரி செய்ய வேண்டிய விநாடிகள் வருகிறபோது, இயற்கை, மகான்களை பிரசவிக்க பொருத்தமான கருவறையைத் தேடிக் கொண்டிருக்கும்.

சந்திரமணி அம்மையார் ஒருநாள் தனது பணிப்பெண்ணுடன் சிவன் கோயிலுக்குச் சென்றாள். சிவனை வழிபட்டபோது ஒரு ஒளி

வெள்ளம் சிவலிங்கத்திலிருந்து கிளம்பி, அந்த ஒளி அலைகள் தன்னை நோக்கி வருவதைக் கண்டாள்.

அந்தக் காட்சியைக் கண்டு அதிர்ச்சியும் அச்சமும் கொண்டு, சந்திரமணி மூர்ச்சையடைந்தாள்.

சந்திரமணி கோயிலில் மயக்கமடைந்து விழுந்ததும், அவளுடன் வந்த பணிப்பெண், அவளுக்கு மயக்கம் தெளிவித்தாள்.

சந்திரமணி தான் கண்ட காட்சியை பணிப்பெண்ணிடம் விவரித்தபோது, அவளும் ஆச்சரியமடைந்தாள்.

அவ்வாறு சிவலிங்கத்திலிருந்து ஒளி தன் வயிற்றில் தங்கிவிட்டதாக சந்திரமணி நினைத்தாள்.

கயைப் பகுதிக்கு புனித யாத்திரை சென்றிருந்த கணவர், ஊருக்குத் திரும்பி வந்தார்.

கணவரிடம் சந்திரமணி சிவன் கோயிலில் நடந்ததைக் கூறி அவருடைய கருத்தையும் கேட்டாள்.

அவரோ, "சந்திரா, கயையில் நான் தங்கியிருந்தபோது என் கனவில் ஸ்ரீ கதாதரர் தோன்றி, நமக்கு மகனாகப் பிறக்கப் போவதாகக் கூறியருளினார். தெய்வ அருளால் நல்லதே நடக்கும்" என்று உள்ளம் நெகிழ்ந்து கூறினார்.

சந்திரமணி தான் கருவுற்றிருப்பதை விரைவிலேயே உணர்ந்தாள. ஒளியுடன் உருவாகி வரும் கருவினால், அவளுக்கு தெய்வீகக் காட்சிகள் தோன்றின.

வயிற்றில் சுமக்கும் சிசுவின் உள்ளொளிப் பிரகாசத்தினால் உடலும் உள்ளமும் ஒளிபெற்றன.

ஞான வள்ளலாக, குரு தேவராக மானுடத்திற்கே ஒளி காட்டப் போகும் ஸ்ரீராமகிருஷ்ணர் அவதரிக்கப் போகிறார் என்பதற்கான

முன்னோட்டமாக. சந்திரமணி ஒளி பொருந்திய கருவைச் சுமந்து பொலிந்தாள்.

"மரம் வைத்தவன் தண்ணீர் ஊற்றுவான்" என்ற சமுதாயத்தில் வாழ்ந்த தம்பதியர்களில் கூடுவாஞ்சேரி வரதப்பன், சின்னம்மாவும் இருந்தார்கள்.

ஐந்து பெண் குழந்தைகளுடன் வாழ்ந்த ஏழை நெசவாளத் தம்பதியருக்கு ஒரு ஆண் மகன் வேண்டுமென்று நோன்பிருந்தார்கள்.

தரையை மொழுகி அதன் மேல் சாப்பாடு போட்டு குனிந்து வாயினால் சாப்பிடும் ஒரு நோன்பை சின்னம்மா செய்தார்கள்.

பக்தி பரவசமாய் பரமனிடம் பிரார்த்தனை செய்தார்கள். அரசமரச் செடியையும், வேப்பமரச் செடியையும் தேடிக் கொண்டு வந்து கூடுவாஞ்சேரி குளக் கரையில் மேற்குப் பக்கம் வைத்து வளர்த்தார்கள்.

அரசமரத்திற்கும், வேப்பமரத்திற்கும் திருமணம் செய்து வைத்தார்கள். பிள்ளை வேண்டி தவமிருந்தனர்.

"கோயில்குளம் சென்று பல நோன்பு நோற்றுக்

குலத்திற்கோர் மகன் வேண்டித் தவம் புரிந்த..."

"மனவளக்கலை மூலம் சமுதாயத்தில் ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தப்போகும் ஒளி பொருந்திய வேதாத்திரி என்ற கருவை சின்னம்மாள் சுமந்து பொலிந்தாள்.

உலக மானுட வாழ்வில் வளத்தைச் செழுமைப்படுத்த தேடிக்கொண்டிருந்த கருவறைகளை இயற்கை கண்டுணர்ந்தது.



## 4. தெய்வநாமங்கள் தாங்கிய குழந்தைகள்.

இராமகிருஷ்ணரின் தந்தை கயையில் இருந்த போது ஒரு கனவு கண்டார்.

கயையிலும் விஷ்ணுவின் பாதங்களில் அவர் பிண்ட தர்ப்பணம்செய்து கொண்டிருப்பது போலவும் அப்போது அவருடைய முன்னோர்கள் அவர் முன்னே தோன்றுவது போலவும் கனவு கண்டார்.

முன்னோர்களைக் கண்டு மகிழந்து வணங்கினார். அவ்வமயம் அந்த இடத்தில் தெய்வீகப் பேராளி சூழந்தது.

தம்மை மறந்த நிலையில் சசிராம் அவர் அருகே செல்கிறார். பக்தி மீதூர நின்றார்.

“சசிதிராம்! உன் பக்தியைக் கண்டு ஆனந்தமடைந்தேன். உன் அன்பான சேவையை ஏற்க உன் மகனாகப் பிறக்கப் போகிறேன்.” தெய்வத் திருவுருவம் பேசியதும் சசிராம் மகிழ்ந்தார்.

ஆனந்தக் கடலில் முழ்கியிருந்த சசிராம் இந்தக் கனவைப் பற்றி மனைவியைத் தவிர வேறு யாரிடமும் சொல்லவில்லை.

1936 ஆம் ஆண்டு ஆண் குழந்தை பிறந்தது. கயையில் தமக்கு காட்சி தந்த கதாதரனின் (விஷ்ணு) நினைவாகவே, தனக்குப் பிறந்த அண் கழந்தைக்கு கதாதரன் என்ற தெய்வ நாமத்தையே சூட்டி மகிழ்ந்தார்கள்.

கூடுவாஞ்சேரியில் சின்னம்மாவுக்கு குழந்தை பிறந்து சில நாட்களே கடந்தன.

அப்போது இரவு வேளையில் வந்த ஒரு பெரியவர் சின்னம்மாள் வீட்டுத் திண்ணையில் இரவுப் பொழுதைக் கழிப்பதற்காகத் தங்கினார்.

குழந்தையின் அன்னையும் தந்தையும் அவரை வணங்கி உபசரித்தனர். ஏழ்மையிலும் எளிய உணவை அளித்தனர்.

சாப்பிடும்போது “குழந்தை அழுகிற சத்தம் கேட்கிறதோ! யார் குழந்தை அது?” என்று விசாரித்தார்.

பெற்றோர்களும் சென்ற வாரம் ஓர் ஆண் குழந்தை பிறந்த செய்தியைக் கூறி மகிழ்கிறார்கள்.

உடனே அம்மகான் அக்குழந்தைக்கு "வேதாத்திரி" என்று பெயர் சூட்டுங்கள் என்று கூறுகிறார். பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

மகானிடம் மேலும் விபரம் கேட்க மறுநாள் காலை ஐந்து மணியளவில் பார்த்தபோது திண்ணையில் தங்கியிருந்த துறவி அங்கு இல்லை.

வேதம் என்றால் அறிவு. அத்திரி என்றால் அறிவு மலை.

கதாதரன், வேதாத்திரி என்ற தெய்வ திருநாமங்களுடனேயே குழந்தைகள் தோன்றினார்கள்.

## 5. விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா?

சந்திரமணி, இராமகிருஷ்ணரை பிரசவித்த போது பேருதவி புரிந்தவள் தனி என்ற கொல்லர் இனப் பெண்மணியாவாள்.

இராமகிருஷ்ணரை "கதாயீ" என்று அழைத்து அன்பு பாராட்டி வந்தாள். அவளுடைய பாசத்தையும் வாஞ்சையையும் இராமகிருஷ்ணரும் அறிந்திருந்தார்.

ஒருநாள் அப்பெண்மணி, ராமகிருஷ்ணரிடம், "கதாயீ, உன்னுடைய உபநயனத்தின் போது, என்னிடம் முதல் பிட்சையை நீ ஏற்று, என்னை அம்மா என்று அழைத்தால், நான் பேரூவகை எய்துவேன் குழந்தாய்" என்று வேண்டிக் கொண்டாள்.

அவளது அன்பான வேண்டுகோளை ஏற்ற இராமகிருஷ்ணரும், அவ்வாறே செய்தவதாக வாக்களித்தார்.

இராமகிருஷ்ணரின் உபநயனத்திற்கான ஏற்பாடுகளை, அவரது மூத்த சகோதரர் ராம்குமார் செய்து வந்தார்.

அச்சமயம் இராமகிருஷ்ணர், தாம் தனிக்கு அளித்த வாக்குறுதியைப் பற்றிக் கூறினார்.

"கதாயீ. தனி தாழ்ந்த கலத்தில் உதித்தவள். உபநயனத்தின்போது, அவளைப் போன்றவர்களிடம் பிட்சை ஏற்பது என்பது வழக்கத்திற்கு புறம்பானது" என்று கூறிவிட்டார், மூத்த சகோதரர்.

ஆனால், இராமகிருஷ்ணர் தமது வாக்கைக் காப்பதில் உறுதியாக இருந்தார். அண்ணாவிடம் அதற்காக வாதாடினார்.

"அண்ணா, சொன்ன சொல்லைக் கேட்காமல் சத்தியத்திலிருந்து வழுவிய பின்பு, நான் பூணூல் அணியும் தகுதியை இழந்து விடுவேனே" என்று வாதிட்டார்.

ஒன்பதே வயது நிறைந்த சிறுவனின் வாதம், ராம் குமாரை சிந்திக்க வைத்தது.

ராம்குமார், ஊர் பெரியவர்கள் சிலரை அணுகி ஆலோனை கேட்டதில், ராமகிருஷ்ணரின் விருப்பத்தை நிறைவேற்றுவதே உசிதம் என்றார்கள்.

உபநயனம் நாளும் வந்தது. ராமகிருஷ்ணர் பூணூல் தரித்ததும் முதன்முதலாக தனியிடம் பிட்சை பெற்று அவளை அன்பு பொங்க “அம்மா” என்று அழைத்தார். அந்தப் பெண்மணி ஆனந்தத்தின் மிகுதியால் கண்ணீர் உகுத்தாள்.

சிறுவயதில் தாய் உணவு ஊட்டும்போது சொல்லி வந்த கஜேந்திர மோட்ச கதை வேதாத்திரி மகரிசியின் மனதில் ஆழமாகப் பதிவாகியிருந்தது. ஏழு வயதான போது அந்தக் கதையில் சிறுவன் வேதாத்திரிக்கு சந்தேகம் வந்தது.

கூடுவாஞ்சேரியில், பத்தாவது நாள் மரணச் சடங்கு ஒருவருக்கு நடந்தது. அதை மோட்ச தீபம் என்றார்கள்.

மோட்சம் என்றால் என்ன? என்று சிறுவன் அன்னையிடம் கேட்டான். இறந்து விடுகிறார்களே அதைத்தான் மோட்சம் என்று சொல்கிறோம் என்று பதில் அளித்தார்கள்.

சிறுவனின் சிந்தனை வேகமாக ஓடியது. “அம்மா கஜேந்திர மோட்சத்தில் வரும் யானையும் செத்துத்தான் போனது” என்றான். தாயால் பதில்சொல்ல முடியவில்லை.

சிறுவன் விடவில்லை. முக்தி என்றால் என்ன? என்று கேட்டான், முக்தி, மோட்சம் எல்லாம் ஒன்றுதான் என்றார்கள்.

“முதலைக்கு முக்தி, யானைக்கு மோட்சம் என்று நீங்கள் சொன்னவை இரண்டுமே சண்டையில் செத்துப் போய்விட்டன என்றுதானே விளங்குகின்றது?” எனக் கேட்டான் சிறுவன்.

சின்னம்மாள் கூர்ந்த அறிவு படைத்தவள். தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாயின் உள்ளம் மகனின் மனநிலையைப் புரிந்து கொண்டது.

"எனக்குப் பெரியவர்கள் சொன்ன கதையை அப்படியே உனக்குச் சொன்னேன். மற்றவை எனக்குத் தெியாதப்பா" என்றார்கள்.

விளையும் பயிர் முறையிலேயே தெரியும். மானுடத்தை வழிநடத்த, இன்றைய மனித தர்மங்களை இந்த மண்ணிற்குத் தரும் மகான்களாக இவ்விருவரும் வடிவெடுக்கப் போவது குழந்தைப் பருவத்திலேயே தெரிந்தது.

# 6. தேடிவந்த குருமார்கள்.

"குரு பிரம்மா குருர் விஷ்ணு. குருர் தேவோமஉறஸ்வர.

குரு சாட்சாத் பரம்ப்ரம்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம."

குருவைப் பற்றிய பிரபலமான துதி இது. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகியோர் வடிவில் குரு உள்ளார் என்பது பொதுவான பொதுவான பொருள்.

இதற்கு சரியான பொருள் - குரு சீடனிடம் தெய்விகச் சிந்தனைகளை உருவாக்குவதால் அவர் படைக்கும் தெய்வமான பிரம்மாவுக்கு ஒப்பானவர்.

சீடனிடம் உள்ள, உயரிய பண்புகளை வளர்ப்பதால் காக்கும் தெய்வமான விஷ்ணுவுக்குச் சமமானவர்.

சீடனின் தீய குணங்களை அழிப்பதால் சம்உறார மூர்த்தியான ருத்திரனுக்குச் சமமாகிறார் என்பதாகும்.

குரு என்பவர் யார்? விளக்கம் தருகிறார் வேதாத்திரி மகரிசி.

“குரு என்றால் அவர் தன்னை அறிந்தவர். அவருடைய உதவி இவனுக்குக் கிடைப்பதற்கு இங்கே அவன் ஒரு நிமிடமாகிலும் சிந்தித்திருக்க வேண்டும். தேடி இருக்க வேண்டும்.

நான் பிறந்து வந்துள்ளேனே என்னைப் பற்றி எதுவுமே தெரியவில்லையே - தெரிந்து கொள்ள வேண்டும் என்று இவனாக நினைத்திருந்தாலும் சரி, அல்லது இவனுடைய பெற்றோர்கள் நினைத்து இருந்தாலும் சரி, அந்த எண்ணம் நிறைவேறாமல் தொடர்ந்து வந்து இருந்தாலும் சரி. அது கட்டாயம் அதற்குரிய ஒரு குருவைத் தேடிக் கொடுத்து விடும்.”

மகரிசியின் இந்த தத்துவத்தின் படியே, இராமகிருஷ்ணருக்கு பைரவி பிராம்மணி என்பவரும் தோத்தாபுரி என்பவரும் குருவாக வந்தார்கள்.

வேதாத்திரிக்கு பாலகிருஷ்ண நாயக்கரும், கிருஷ்ணராவும், பரஞ்சோதி மகானும், வள்ளலாரும் குருவாக வந்தார்கள்.

“பலநாட்கள் தவம்செய்து. கனல்மி குந்த

பக்குவமும் தனனையறிந்த நிலையும் கொண்டு

நலமொன்றே பலனான ஞான மார்க்கம்

நாடிநிற்கும் எவர்க்குமவர் அறிவிற் கேற்ப

சிலநாளில் சீவனையே சிவனாய்க் காணும்

சிந்தனையின் சிகரத்தில் கொண்டு சேர்க்க

உலகசமா தானத்தின் திட்டம் தந்து

உயர்ஞானம் எனதுகுரு உணர்த்தி நின்றார்,"

- வேதாத்திரி மகரிசி

பல நாட்களாக மெய்யுணர்வு நாட்டம் என்ற அறிவை அறிவால் நாடும், அறிவை ஒருமுகப்படுத்தும் முறையான கருதவத்தைச் செய்து, அதனால் விளைந்த உள்ளொளி இயக்கப் புரிப்பால் பேறறிவின் நிலை எய்தி தன்னிலையறிந்த எனது ஆசான் அவர்கள் தன்மையையே மனித இனத்திற்கு அளிக்கத்தக்க ஞானமார்க்கத்தை அறிய விரும்புவோர் அனைவருக்கும் தெரிவிக்கும் உன்னதமான ஒரு பெரு நோக்கத்துடன் மெய்யுணர்வு தீட்சை கொடுத்தார்.

- வேதாத்திரி மகரிசி

## குரு அவசியமா? விடையளிக்க வருகிறார்கள் ..........

இராமகிருஷணர். குரு பலருக்கு அவசியம். ஆனால் குருவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைக்கவேண்டும். குருவைக் கடவுளாக உணர்ந்தால் வெற்றிதான்.

சச்சிதானந்தம்தான் குரு. சவசாதனை செய்து, இஷ்ட தெய்வத்தின் காட்சி கிடைக்கும் வேளயில், குரு தோன்றி, இதோ பார்! உன் இஷ்ட தெய்வம் என்று கூறுகிறார்.

பிறகு இஷ்ட தெய்வத்தில் அவர் ஒடுங்கிவிடுகிறார். குரு யாரோ அவரேதான் இஷ்ட தெய்வம். இஷ்ட தெய்வத்தை நோக்கி நாம் செல்வதற்கு அடியெடுத்து கொடுப்பவர் குரு.

குரு ஒரு நண்பனைப் போல் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார். எல்லோரும் குரு ஆகிவிட முடியாது. பெரிய மரக்கட்டை தானும் மிதக்கும். பல மனிதர்களையும் மிருகங்களையும்கூட ஏற்றிச் செல்லும்.

ஆனால் உறுதியற்ற கட்டையின் மீது ஏறினால் கட்டையும் முழ்கும். ஏறியவனும் முழ்குவான்.

ஆகவே உலகை வழிநடத்த ஒவ்வொரு யுகத்திலும் இறைவனே குருவாக அவதரிக்கிறார்.

வேதாத்திரி மகரிசி - புலனறிவின் விரைவில் ஆழ்ந்துள்ள போது இறைநிலை விளக்கம் பெற முடியாது. இவ்விரைவு குறைந்து அறிவிற்கு நிலைபேறு கிட்ட வேண்டும். அதற்கு அகநோக்குப் பயிற்சி தேவை.

அகம்நோக்கி அறிவு நிலை பெற வேண்டுமெனில் உயிராற்றலை அறிவு உணர்தலாகப் பெற வேண்டும்.

உயிராற்றலோ ஒவ்வொருவருக்கும் வினைப்பயனுக்கேற்ப பிறவியை உருவாக்கும் நியதியின் கீழ் மூலாதாரத்தில் சுழற்சி விரைவாக ஆற்றி வருகின்றது.

உடலையும் அறிவையும் நடத்திக் கொண்டே பிறவிக்கும் வழி தேடிக் கொண்டிருக்கும் இந்த உயிராற்றலை யோகிகள் குண்டலினி சக்தி என்ற சிறப்புப்படுத்திக் கூறுகின்றார்கள். இங்கேதான் சீவகாந்த சக்தி மையம் கொண்டுள்ளது.

இவ்வுயிர் ஆற்றலின் விரைவை மேல்நோக்கித் திருப்ப வேண்டும். இதனை ஒருவர் தானே முயன்று பெருவதென்பது அரிது.

அகநோக்குப் பயிற்சியல் முழுமை பெற்ற ஆசானின் அருள் வேண்டும். இறையுணர்வு விளக்கம் பெற்ற பேரறிஞனை ஆசிரியனாக்கப் பெற்றுதான் அவன் வழிகாட்ட, தெளிவுரை கூற இறையுணர்வான இப்பெரும் பதம் அடைய வேண்டும்.

மானுடத்தை ஆன்மீகத்தில் திளைக்கச் செய்த இராமகிருஷ்ணரையும் வேதாத்திரி மகரிசியையும் குருவாகப் பெற்ற அனைவரும் பாக்கியவான்களே.


# 7.அமுதமொழியும் ஞானக்களஞ்சியமும்

- பகவத்கீதை, குரான், பைபிள் - தேவாரம் , திருவாசகம், திருவருட்பா என்ற வரிசையில், ராமகிருஷ்ணரின் அமுதமொழிகளும், வேதாத்திரி மகரிசியின் ஞானக்களஞ்சியமும் சிறப்பான இடத்தை வகிக்கின்றன.

அவதாரப்புருஷர் ஒருவரின் -வாய்மொழிகளை அவர் வாழ்ந்த நாட்களிலேயே- குறித்து வைத்துப் -பின்னர் பக்தர்களுக்கு- அங்ஙனமே அதனை புத்தக வடிவில் -அவற்றை வழங்கியிருப்பது ஆன்மீக வரலாற்றில்- இதுவே முதன் முறையாகும்.

எந்நாட்டவருக்கும். எச்சமயத்தவருக்கும் -இம மொழி பேசும் மக்கட்கு என்றில்லாமல் -மனித இனம் முழுமைக்கும் ஏற்றதாக விளங்கும் பெருமை ஸ்ரீராமகிருஷ்ணரின் உபதேசங்களுக்கு உண்டு.

நடமாடும் கோயிலாக -இம்மண்ணுலகில் வாழ்ந்த ஸ்ரீராமகிருஷ்ண தேவரின் அறிவுரைகள் அடங்கிய ஆன்மிகப்பேழைதான்- ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்.




அனைவரும் படிக்க வேண்டிய அருமையான நூல். சென்னை ராமகிருஷ்ணமடம் -மூன்று பகுதிகளாக வெளியிட்டுள்ளது.

ஒவ்வொரு பகுதியிலும்- சுமார் 650 பக்கங்கள். படிக்கும்போது ஸ்ரீராமகிருஷ்ணருடன் பேசுவது போல் இருக்கும்.

ராமகிருஷ்ண பரமஹம்சரின் - இல்லறச்சீடரான மகேந்திர நாத் குப்தர் - 'ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' நூலின் ஆசிரியர். இவர் - 1854 ஜுலை 14 ஆம் தேதி - கல்கத்தாவில் பிறந்தார்.

இவர் தேதி, நேரம் உட்பட எழுதி வைத்த நாட்குறிப்புகளின் தொகுப்பே - ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்' என்னும் நூல்.

இவர் - பிரம்ம சமாஜத் தலைவர் கேசவ சந்திர சேனின் - உறவுப் பெண்ணான நிகுஞ்ச தேவியை - திருமணம் செய்தவர். கல்கத்தா பள்ளிகளில் - தலைமை ஆசிரியராகப் பணியாற்றியவர்.

1882 பிப்ரவரியில் - ராமகிருஷ்ண பரமஹம்சரை சந்தித்தார். அப்போது - ஈசுவர சந்திர வித்தியாசாகரின் சியாம் பஜார் கிளைப் பள்ளியில் - தலைமை ஆசிரியராக இருந்தார்.

ம- என்பது இவரது பெயரின் சுருக்கமாகவும் - புனைப்பெயராகவும் அமைந்தது. அமுதமொழிகளில் - இவர் மாஸ்டர் என்று அழைக்கப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்**, ’-ம’ என்றறியப்பட்ட மகேந்திரநாத் குப்தரின் - டயரிக்குறிப்புகளின் தொகுப்பு நூல்.

ஸ்ரீராமகிருஷ்ணருடன் தொடர்பிலிருந்த - அவரது முக்கியச்சீடரான சுவாமி விவேகானந்தர், அன்னை சாரதா தேவி, மற்ற நேரடிச் சீடர்கள்,பக்தர்கள் ஆகிய அனைத்து தரப்பினராலும், படிக்கும்போது - மீண்டும் ஒருமுறை அந்த நாட்களுக்கே போய்விட்டதாகப் பாராட்டப்பட்ட நூல்.


இராமகிருஷ்ணரின் மறைவுக்குப் பிறகு - கிட்டதட்ட பத்து ஆண்டுகள் சென்ற பின்னரே - பக்தர்கள் பலனரின் வேண்டுகோளுக்கிணங்க, தாம் எழுதி வைத்திருந்ததை - அவர் நூல் வடிவில் கொண்டு வந்தார்.

எந்த நூலுக்கும் இல்லாத தனிச்சிறப்பு - இந்த அமுதமொழிகளுக்கு உண்டு. ஆன்மிகக் கருத்துகளுக்குப் பொக்கிஷமாகவும், ஆழ்ந்த தத்துவ விளக்கங்களுக்குக் களஞ்சியமாகவும் விளங்குகிறது.

அமுதமொழிகள் - உலக இன்பங்களைத் தேடியலையும் மக்களுக்கு - உண்மையான இன்பம் எதுவேன்று உணர்த்துவது மட்டுமல்லாமல் - அந்த இன்பத்தை அடைதற்குரிய வழியையும் காட்டுகின்றன.

உலக மாயையில் சிக்கி, உய்யும் வழி காணாது அல்லலுறும் மனித இனத்திற்குக் - கரைகாட்டும் கலங்கரை விளக்காய்த் திகழ்கின்றன.

இறைவனின் இயல்புகள், பக்தியின் பல்வேறு நிலைகள், பிரம்மத்தைப் பற்றிய பல்வகை விளக்கங்கள், அறக் கடமைகள், மாயையைப் பற்றிய தெளிவான விரிவுரைகள், வேத, வேதாந்த, சாஸ்திர, புராண, இதிகாச நூல்களில் புரியாதன, பொருந்தாதன என ஒதுக்கப்பட்ட கருத்துக்களில்அடங்கிக் காணும் தத்துவங்கள்- இவற்றை அன்றாட வாழ்க்கையில் நாம் காணும் சம்பவங்கள், எளிய உதாரணங்கள், கருத்தாழமிக்க கதைகள் வாயிலாகத் தெள்ளத் தெளிவாக விளக்குகின்ற - எளிமையும் இனிமையும் வாய்ந்தனவையாக உள்ளன.



மகேந்திரநாத் குப்தா

முதற்தொகுப்பில், 'ம' வின் டயரி எழுதும் பழக்கம் மற்றும் அவர் ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்திக்க நேர்ந்த சூழ்நிலை, சுருக்கமான அளவிலான வாழ்க்கை வரலாறு - ஆகியவையும், நூலின் வங்க மூலமான டயரி பக்கப் படம், ஆங்கில நூல், மொழிபெயர்ப்பு வரலாறு ஆகியவையும் - குறிப்பிடப்பட்டுள்ளன.

நூலின் முன்னுரையில், அமுதமொழிகள் - ஓர் தெய்வமனிதரின் அனுபவ வார்த்தைகள்; உலகப்பொதுமறை;

அமுதமொழிகளைப் படிப்போரின் அறிவுப்பின்னணி மற்றும் உணர்வின் விரிவைப் பொறுத்து - பல்வேறு பொருளைத் தர வல்லவை என்பதையும், மாக்ஸ்முல்லர், ரோமா ரோலா, ஆர்னால்ட் டாய்ன்பீ என்று மேலை நாட்டு அறிஞர்களும் - ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் உபதேச மொழிகளை - எவ்வளவோ விவரித்துக் கூறியுள்ளனர் என்பதையும், சுவாமி விவேகானந்தர் தமது குருவின் ஒரு உபதேசத்திற்கு மட்டுமே -மூன்று நாட்கள் பொருள் கூறக்கூடியவர் என்பதையும் - கருத்தில் கொண்டு, நூலைப் படிப்பவர்களுக்கு வழிகாட்டுதலும் வழங்கப்பட்டுள்ளது.

அமுதமொழிகள் முதற்பாகத்தில்- பலராம், நரேந்திரர் முதலான பக்தர்கள், ஈசுவரசந்திர வித்யாசாகர், பிரம்ம சமாஜத் தலைவர் கேசவர், விஜயகிருஷ்ண கோசுவாமி, வைணவ பக்தர்கள் என்று பலதரப்பட்டவர்களுடனான - ஸ்ரீராமகிருஷ்ணரின் உரையாடல் மற்றும் அறிவுரைகள் நூலாசிரியரால் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இராமகிருஷ்ணரின் பெயரையும் செய்தியையும் - உலகெங்கும் பரவச் செய்தவர்களுள் - முக்கியமான பங்கு வகிப்பவர் இருவர். ஒருவர் புகழ் பெற்ற சுவாமி விவேகானந்தர்.

மற்றவர் - தம்மை மறைத்துக்கொள்ள விரும்பும் - மகேந்திரநாத் குப்தர் அல்லது “ம” எனப்படுபவர்.

முன்னவர் - ஒளிவிடும் கதிரவன் என்றால், பின்னவர்- ஏழை - செல்வந்தர் வீட்டு மாடங்கள் அனைத்திலும் சடர்விடும் விளக்கு.

பின்னவரின் -ஒளி நமது கண்களைக் கூசச் செய்யாது. அது ஆரவாரமின்றி -அமைதியாக - குளிர்ந்து - ஆறுதல்அளிக்கும் ஒளியைக் குடிசைகள் மீதும்- மாட மாளிகைகள் மீதும் எந்த வேறுபாடுமினறிப் பொழிகிறது.

சுருக்கமாகச் சொன்னால், இராமகிருஷ்ண மிஷனை நிறுவிய விவேகானந்தரின பணி மகத்தானது. ம-வின் பணி -அதற்குச் சற்றும் குறைந்ததல்ல!

உபநிடதங்கள், கீதை, தம்மபதம், பைபிள், குரான் என்ற வரிசையில் வைக்கத்தக்கது -இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்.

## ஞானக்களஞ்சியம்

உலகில் அவ்வப்போது தோன்றிய மகான்கள் பலரும்-- தாங்கள் உணர்ந்த உண்மைகளைக் -கவிதைகளின் வாயிலாக வெளியிட்டு வந்துளாளார்கள்.

தமிழகத்தில் தோன்றிய திருவள்ளுவர், திருமூலர், தாயுமானவர், வள்ளலார் போன்ற மகான்களும்- இன்றும் உயிருள்ள கவிகளின் மூலம் -மக்களுக்கு தாங்கள் சொல்ல வேண்டிய உபதேசங்களைத் -தெளிவுபட விளக்கியுள்ளார்கள்.

அருள்தந்தை வேதாத்திரி மகரிசியும்- ஆயிரத்துக்கு மேற்படட அருட்கவிகள் மூலம்- மனிதகுல வாழ்விற்குத் தேவையான- பல கருத்துக்களை -அவ்வப்போது எளிய நடையில் இயற்றியுள்ளார்கள். அதனை் தொகுப்புதான்- “ஞானக்களஞ்சியம்.”

இராமகிருஷ்ணரின் அமுத மொழிகளைப் போன்று -மிகவும் எளிமையான நடையில் அமைந்தது ஞானக்களஞ்சியம்.

மனித வாழ்க்கைக்குத் தேவையான- அனைத்து அம்சங்களும் அடங்கியதே ஞானக்களஞ்சியம்.

மகரிசி -தமது கவிதைகளில் குறிப்பிட்டுள்ள பல கருத்துக்கள் -நாளைய சமுதாயத்தின் சிக்கல்களுக்குத் தீர்வாகவும், சமுதாயம் சீர்பெற எழுந்த -வடிகாலாகவும் விளங்குவன.

ஞானக்களஞ்சியம் எவற்றைக் கூறுகின்றன? இறைவன் யார்? அவரை உணர்வது எப்படி? நிலையற்ற துன்ப வாழ்க்கையிலிருந்து - பிறப்பு இறப்புச் சுழற்சியிலிருந்து - அறியாமையிலிருந்து எப்படி விடுதலை பெறுவது?



உலகக் கடமைகளைச் செய்து கொண்டே- இறைவனை உணர்ந்து ஆழ்ந்த அமைதியை- எவ்வாறு பெறுவது? இல்லறத்தில் இருந்துகொண்டே -துறவு வாழ்க்கை வாழ்வது எப்படி? ஆகியவற்றை ஞானக்களஞ்சியம் கூறுகிறது.

ஞானக்களஞ்சியத்தில் -ஒரு சிறு துளியயையாவது நாம் பருக முடிந்தால் -மரணமிலாப் பெருவாழ்வைப் பெற்றவர்கள் ஆவோம்.

மகரிசி தமது கவிதைகளில்- அழகும், ஆற்றலும் வாய்ந்த சொற்கைளைக் கையாண்டும், பொருள் புலப்பாடு என்ற நோக்கிலும், படிப்பார்க்கு அலங்காரம் ஆகி -இன்பம் பயக்கும் வகையிலும் அழகிய உவமை, உருவகங்களைக் கையாண்டும், சந்த நயங்களை மிகுதியாக பயன்படுத்தியும், கட்டுக் கோப்பாக இயற்றியுள்ளார்.

இதனால் ஆன்மீக வரலாற்றில் மட்டுமல்ல, தமிழக் கவிதை வரலாற்றில் மட்டுமல்லாது, தமிழ் இலக்கிய வரலாற்றிலும்- இவரது ஞானக்களஞ்சியக் கவிதைகள் இடம்பெறும் என்பதில் ஐயமில்லை.

“நான் மனிதனைப் பாடுகிறேன்” என்றார் -அமெரிக்காவின் வால்ட் விட்மன். மனிதர்கள் மாண்டுவிட்டால் -அவர்களைப் பாடிவைப்பேன் என்றார் கவிஞர் கண்ணதாசன்.

“மனிதன் சம்மபந்தமாக எதுவுமே இலக்கியத்திற்குப் புறம்பானதன்று” என்றார் -இரஷ்ய இலக்கிய மேதை மாக்சிம் கார்க்கி.

அலெக்சாந்தர் போப், விட்மன், கார்க்கி, கண்ணதாசன் போன்றவகளெல்லாம் மனித நேயத்தைப் பாடியவர்கள் ஆவார்கள். ஆனால்......

"சர்வதேச யுத்தம் ஒன்று தோன்றிவிட்டால்

சத்ருவாய் ஒருவர் மற்றோரை எண்ணி

கர்வமுற்று மதிமயங்கி மனிதப் புண்டைக்

கருவறுக்க எவ்விதமாய முயற்சிக்கின்றார்?

தர்மத்தை நிலைநாட்டி -என்றும் மக்கள்

தரணியிலே அமைதியாக வாழ்வதற்கு

நிர்வாகத் துறையில்ஓர் முயற்சி கொண்டால்

நிச்சயமாய் உலக சமாதானம் கிட்டும்"

என மனித நேயத்தோடு, உலக சமாதானம், ஒற்றுமை போன்ற உணர்ந்த மானுட நெறியினைச் - சமரசர நோக்கோடு மகரிசியைத் தவிர வேறு யாரும் பாடியதில்லை.

ஞானக்களஞ்சியத்தில் -மகரிசியின் கவிதைகள் கருத்தாழம் மிக்கவை.

மானுடத்திற்குத் தேவையான -கருத்தை அசைபோட்டு, அசைபோட்டு, எளிமையான மொழியமைப்பில் -தனது கருத்தைப் புகுத்தி, கவிதையாக்கி -நயத்தோடு வெளிப்படுத்தும் திறன் இந்த மகானின் சிறப்பாகும்.

கவிதை என்பது- சீர்களின் கோர்வை மட்டுமன்று. செவிக்கினிய ஓசை மட்டுமன்று. சில நாட்களுக்கே செல்லுபடியாகக் கூடிய - கருத்துக் கோவையுமன்று.

காலம், இடம், இனம் கடந்து எல்லாக் கலாத்திற்கும், எல்லா நாட்டவர்க்கும், எல்லா இனத்தவர்க்கும் பொருந்துவதாய்ப் பயனளிப்பதாய் என்றும் நின்று கவிதைகளே- சீவனுள்ள கவிதைகள் என்று- தனது ஞானக்களஞ்சியம் பாடல் 408 ல் பாடியுள்ளார்கள்.

மகரிசியின் கவிதைகள் எல்லாம் -இப்பண்புகள் சிறப்பாக அமையப் பெற்ற -சீவனுள்ள கவிதைகள். காலத்தை வென்ற நிற்கும் கவிதைகள்.

"பிறப்புரிமை சுதந்திரம் இப்பேறுகள் நம் உடல் உயிர்போல்

போற்றிடுவோம் காத்திடுவோம் புரையொழிந்து வாழ்ந்திடுவோம்"

"இன்றுள்ள சாதி, மத, மொழி, இன, தேச, பேதங்கள் போக்கி

என்றும் எங்கும் எவரும் இன்பமாய் வாழ்வதற்கேற்ப

ஒன்றுபட்டு உலகோர் அனைவரும் கூடி ஒரே ஆட்சி காண்பரோ

அன்றே ஆதி அறிவின் புரணத்தில் பொங்கும் நாள் ஆகும்"

தான் வாழ்கின்ற சூழல், சூழலில் நாடு மற்றும் மாந்தர்,நிகழச்சிகள், மனம், மனிதன் படைத்தவை போன்றவை மகரசியின் படைப்புகளில் வெளியாகின்றன.

"இறைநிலையை உணர்ந்தவர்க்கு மரணமென்பதில்லை

எனினும் போற்றலுள்ள இயற்கை நீதிகாண

மறைவதுண்மை மண்ணுலகில் பிறந்தவர் எல்லாரும்

மற்றபடி ஞானியர்கட்கு மரணம் எவ்வாறென்றால்

உறைய உயிர் உடலில் ஆம் உயிர் சமாதி ஒன்று

உற்ற நண்பர்போல் நடித்து பணம் பொருள் பறிக்க

இறைநிலையை உணர்வது போல் பாசாங்கு செய்து

இணைந்த நண்பர் கொன்றிடுவார் உலகிறந்த உண்மை”

இவ்வாறு- மகரிசியின் ஞானக்களஞ்சியக் கவிதைகளில் - மிகப்பெரும்பாலானவை கருத்துச் செறிவுள்ளவை. மொழிக் கட்டமைப்பைக் காட்டுபவை.

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துபவை. சிந்திக்கும் ஆற்றலை- மனிதனிடம் விதைப்பவை. போதனையை சாதனையாக மாற்ற - மனிதனை ஊக்கப்படுத்துபவை.

அவரவர் நூலறிவுக்கும்,பட்டறிவுக்கும் உண்மை அறிவுக்கும் ஏற்பப்- பற்பல நயங்களையும், நுட்பங்களையும் உணர்த்தும் வல்லமை வாய்ந்தது.

எதார்த்தமாகத் தன் மனதில் தோன்றியதை சொல்லங்காரத்தோடு விளக்குகின்ற திறனை -மகரிசியின் கவிதைகள் வெளிப்படுத்துகின்றன.

பல சான்றோர்கள், அருளாளர்கள், கவிஞர்களை தனது ஞானக்களஞ்சியத்தில் ஒப்பாய்வு செய்துள்ளார் மகரிசி.

கணியன் பூங்குன்றனார். திருவள்ளுவர். திருமூலர், தாயுமானவர். பட்டினத்தார். புத்தர், சாக்ரட்டிஸ், இயேசுநாதர், நபிகள் நாயகம், வள்ளலார் போன்ற சான்றோர்களின் கருத்துகளை மொழி, இனம், மத வேற்றுமையின்றி மகரிசி ஞானக்களஞ்சியத்தில் போற்றுகின்றார்.

யாதும் ஊரே! யாவரும் கேளிர்! என்ற

எண்ணத்தால் உயர்வடைந்த தமிழன்”

என்னும் இடத்தில்- கணியன் பூங்குன்றனாரின் எண்ணக் கொடையை நினைவு கூர்கின்றார். பட இடங்களில் - திருவள்ளுவரின் பெயர் சுட்டிப் போற்றும் மகரிசி,

“துயர்தந்து உளம்மகிழும் அன்பர் கட்கும்

துணைசெய்ய இறையருளை இறைஞ்சு கின்றேன்”

என்னும் இடத்தில் -”இன்னா செய்தாரை ஒறுக்க” வள்ளுவ வழி பின்பற்றி ஒழுகும் நிலையை- வெளிப்படுத்துகின்றார்.

“எல்லாரும் உலகெங்கும் இன்புற்று வாழந்திடுவோம்” (686) எனும் போதும், “சிந்தையை அடக்கியே சும்மா இருக்கிற சீரறியச் செய்த குருவே” எனும் போதும் (6) தாயுமானவரின் “எல்லோரும் இன்புற்றிருக்க” என்னும் எண்ணமும், “சும்மா இருக்கச் சுகம் சுகம் என்று கருதி எல்லாம் அம்மா நிரந்தரம் சொல்லவும்” எனும் பாட்டுப்பகுதியும் நம் நெஞ்சில் நிழலாடுகின்றன.

ஔவையாரின் “ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” என்னும் பாடல் அமைப்பை ஒரு பாடலும் (165) பாரதியாரின் “பாப்பா பாட்டை”, “பாடு பாப்பா” என்னும் பாடலும் (334) நமக்கு நினைவுட்டுகின்றன.

“எண்ணிறந்த மதங்களுண்டு மனித ருக்கு

எனினும்தெய் வம்என்ப தொன்றே ஆகும்”

என்ற ஞானக்களஞ்சிய வரிகள், **இராமகிருஷ்ணரின்** வாக்கையும் பாரதியின் ஆத்திச்சூடிக் கடவுள் வாழ்த்துப் பாடலையும் நமக்கு நினைவுட்டுகின்றன.

"தொல்லுலக மக்களெலாம் ஒன்றே" என்ற பாரதிதாசன் பாட்டுப் போக்கும், "அனைத்துலக மக்களும் ஓர் குடும்பமாக" என்ற மகரிசியின் பாட்டுப் போக்கும் ஒரே வழித்தடத்தில் பயணிப்பதை பார்க்கலாம்.

உலகப் பெரியோர்கள் உரைத்தவற்றை ஒப்பிட்டுப் பார்த்த மகரிசி, அந்த ஒப்பு நோக்கின் பயனைப் -பின்வருமாறு கூறுதல் ஞானக்களஞ்சியத்தின் சிறப்பாக அமைந்துள்ளது.

"புத்தனென்ற பெரியாரும் இயேசு நாதர்

பொதுநோக்கில் கவிபுனைந்த திருவள்ளுவர்

உத்தமராம் நபிகள்எனும் உயர்ந்த ஞானி

உண்மைக்கே உயிரளித்த சாக்கரட்டீஸ்

நித்தியமாம் நிலையறிந்த ஞானியர்கள்

நில உலக மக்களுக்கு எடுத்துச் சொன்ன

அத்தனையும் சேர்ந்துஒரு தொகுப்பாய்ச செய்தால்

அனைத்துமினைந்து ஒரே கருத்தாய் இருக்கக் காண்போம்.

உயர்ந்தோர் சிந்தனைகள் ஒத்திலங்கும் பான்மையை -மகரிசி பகர்ந்தது போலவோ, அவரின் சிந்தகைளும் -முன்னோரை அடியொற்றுகின்றன.

மானுடத்தை வாழ்வாங்கு வாழவைத்துக் கொண்டிருக்கும் மகரிசியின் படைப்புப் பனுவல்களுள் சிறப்பானது- “ஞானக் களஞ்சியம்” என்ற நூலாகும்.

உணர் கருத்து நலன்கள், அவற்றுக்கு ஊறு செய்யாத எளிய இனிய உவமை முதலிய அணிநலன்கள், நெஞ்சில் பதியும் யாப்பு வடிவங்கள், எளிமையான நடை நலன், ஆகியவற்றின் கலவையாய் அமைந்த -மகரிசியின் பாடல்கள் கருத்துப் பெட்டகமாகவும், கலைப்படைப்பாகவும் கவின்முகங்காட்டுகின்றமையை- “ஞானக்களஞ்சியம்” நமக்கு நன்குணர்த்துகின்றது.

அருட்தந்தை வேதாத்திரி மகரிசி அவர்கள் இந்த நூற்றாண்டின அருளாளர்களில்- முதன்மை பெற்றவர். அவர் சிந்தித்து வெளிப்படுத்தாத -துறையேயில்லை. அவரே- ஞானக்களஞ்சியமாக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை.

ஞானமோ, பக்தியோ, கர்மமோ என்று எந்த வழி நமதாக இருந்தாலும், எல்லோருக்கும் உத்வேகம் தரும் வழிகாட்டுதல் -அமுதமொழிகளிலும் ஞானக்களஞ்சியத்திலும் கிடைக்கிறது என்பதில்- ஏதும் சந்தேகம் இல்லை.



# 8. இல்லறமும் ஆன்மீக வாழ்க்கையும்.

ஒரு சமயம் இராமகிருஷ்ணர் ராஜேந்திர மித்ரரின் வீட்டுக்குச் சென்று பக்தர்களுடன் பேசிக் கொண்டிருந்தார்.

"இல்லறத்தில் இருந்து கொண்டு ஆன்மிக வாழ்க்கை ஏன் வாழ முடியாது?

ஆனால் அப்படி வாழ்வது கடினம். இன்று நான் வரும்பொழுது பாக்பஜார் பாலத்தைக் கடந்து வந்தேன். எவ்வளவு சங்கிலிகளால் அதைப் பிணைத்துக் கட்டியிருக்கின்றனர்.

ஏதாவது ஒன்று அறுந்து போனாலும்ஆபத்து இல்லை. எத்தனையோ பிணைப்புக்கள் இருப்பதனால் அவை காப்பற்றிவிடும்.

அது போல இல்லறத்தானுக்கும் ஏகப்பட்ட தளைகள் உள்ளன. இறைவனுடைய கருணையைத் தவிர்த்துத் தளைகள் அறுபடுவதற்கு வழி இல்லை.

"இறைவனுடைய காட்சி கிட்டிவிட்டால் பிறகு பயமே இல்லை. அவனுடைய மாயையில் வித்யை, அவித்யை இரண்டும் இருக்கின்றன.

இறைக் காட்சிக்குப் பிறகு பற்றற்ற நிலையை அடைய முடியும். பரமஉறம்ச நிலையில் இதை உணரலாம்.

பாலையும் நீரையும் கலந்து வைத்தாலும் அன்னம் பாலை மட்டும் எடுத்துக் கொண்டு நீரை விட்டு விடுகிறது. இது அன்னப் பறவைக்கு மட்டுமே முடிகிறது. பிற பறவைகளுக்கு முடிவதில்லை.

பக்தன் - "அப்படியானால் இல்லறத்தானுக்கு என்ன வழி?"

இராமகிருஷ்ணர் - "குரு வாக்கியத்தில் நம்பிக்கை வைத்து அவர் சொற்களைக் கடைப்பிடிப்பது. குருவாக்கியம் என்ற தூணை ஒரு கையால் பற்றிக்கொண்டு சுற்றுவது.

அதாவது இல்லறக் கடமைகளில் ஈடுபடுவது. குருவை ஒரு மனிதனாகக் காணக்கூடாது. சச்சிதானந்தமே குருவடிவில் வருகிறது. குருவின் கிருபையால் இஷ்டதேவதையின் தரிசனம் கிடைக்கிறது. அப்பொழுது குரு இஷ்டதேவதையில் மறைந்துவிடுகிறார்.

மேலும் இராமகிருஷ்ணர் சொல்கிறார்.......

“இல்வாழ்வில் கடவுளை அறிந்த பிறகு சேற்று மீனைப் போல இருக்க முடியும். இறைவனது காட்சி கிட்டிய பின்பு அவன் வாழுகின்ற உலகம் ஞான பூமியாக விளங்கும்.

அதில் பெண்ணும் இல்லை. பொன்னும் இல்லை. இருப்பதெல்லாம் பக்தன், பகவான்தான்.

எனக்கும் மனைவி இருக்கிறாள். ஒரு சில தட்டு முட்டுச் சாமான்கள் என் அறையில் இருக்கின்றன. ஒரு சில பிச்சைக்காரர்களுக்கு அன்னமிடுகிறேன்.

பக்தர்களைப் பற்றிக் கவலை கொள்கிறேன். உதாரணத்திற்கு உறரியின் தாயைச் சொல்லலாம். இங்கு வரும் பொழுது அவளை நன்கு கவனிக்குமாறு சொல்கிறேன்.”

“நீங்கள் உலக வாழ்க்கையில் தங்கியிருக்கிறீர்கள். அதே சமயத்தில் இறைவனிடமும் மனதைச் செலுத்துங்கள் என்று இவர்களிடம் கூறுகிறேன். வாழ்க்கையைத் துறக்கும்படிச் சொல்லவில்லை. இதையும் செய், அதையும் செய் என்கிறேன்.”

“பக்தியை அடைந்தபிறகு இல்லறத்தில் தங்கியிருக்கலாம். கையில் எண்ணெய் பூசிக் கொண்டு பலாப்பழத்தை வெட்டினால், கையில் பசை ஒட்டாது.”

தண்ணீர் போன்றது வாழ்க்கை. மனிதர்களின் மனம் பால் போன்றது. தண்ணீரில் பாலைச் சேர்த்தால் பாலும் தண்ணீரும் ஒன்றாகக் கலந்துவிடும்.

ஆகவே தனித்த இடத்தில் பாலை உறைகுத்தித் தயிராக்க வேண்டும். தயிரிலிருந்து வெண்ணெயைக் கடைந்து எடுக்க வேண்டும்.

கடைந்து எடுத்த வெண்ணேயைத் தண்ணீரில் வைத்தால் அது தண்ணீரோடு கலக்காது. தண்ணீரின் மேல் மிதக்கும்.

"ஜனகர் பற்றற்றவர் என்ற காரணத்தினால் தான் அவருக்கு "விதேகர் (உடல் அற்றவர்) என்ற மற்றொரு பெயரும் உண்டு.

உடல் இருந்தும் உடல் நினைப்பு இல்லாமல் இருந்தார். இல்லறத்தில் இருந்தும் ஜீவன் முக்தனாகத் திகழ்ந்தார்.

ஆனால் உடல் என்ற எண்ணம் தம்மை விட்டுப் போவது வெகுதூரக் கதையாகவன்றோ உள்ளது!. அதற்குத் தீவிரமான சாதனை அவசியம்.

ஜனகர் ஒரு பெரிய வீர புருஷர். அவர் இரண்டு கத்திகளைச் சுழற்றினார். ஒன்று ஞானம். மற்றொன்று கர்மம்."

இல்லறத்தில் உள்ள ஞானிக்கும், துறவறத்தில் உள்ள ஞானிக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா என்று கேட்டால் இரண்டும் ஒன்றுதான் என்றே சொல்ல வேண்டும். இவனும் ஞானி. அவனும் ஞானி. எல்லாம் ஒன்றுதான்.

ஆனாலும் இல்லறத்தில் ஞானிக்குப் பயம் இருக்கிறது. காமினி காஞ்சனத்தின் நடுவே தங்கினால் சிறிது பயம் இருக்கத்தான் செய்யும்.

கரி வைத்திருக்கும் அறையில் தங்கினால் எவ்வளவுதான் எச்சரிக்கையாக இருந்தாலும் உடம்பில் சிறிது கறை படியத்தான் செய்யும்.

“நீங்கள் பெண்களை அடியோடு துறக்க முடியாதுதான். மனைவியோடு வாழ்வது இல்லறத்தான் விஷயத்தில்தவறல்ல. ஆனால் ஓரிரு குழந்தைகளுக்குப் பிறகு இருவரும் சகோதர சகோதரியைப் போல் வாழ வேண்டும்.

பெண், பொன் மீது பற்று இருந்தால். நான் மேதை, நான் பணக்காரன், நான் உயர் பதிவி வகிப்பவன் என்ற ஆணவம் தானாகவே வந்து விடுகிறது.

“இல்வாழ்க்கையை நடத்துவது ஒரு தர்மம்!. அதில் எவ்விதத் தவறும் இல்லை. ஆனால் இறைவனுடைய பாதக் கமலங்களில் மனத்தை வைத்து ஆசைகளை நீக்கிக் காரியங்களைச் செய்வாயாக. ஒருவனுக்கு முதுகில் ஒரு கட்டி வந்தால் அவன் எல்லோருடனும் பேச முடியும். எல்லாச் செயல்களையும் செய்ய முடியும். ஆனால் அவனுடைய மனமோ எப்போதும் கட்டியையே நினைத்துக் கொண்டிருக்கும்.”

தீயொழுக்கத்தை மேற்கொண்ட பெண்ணின் மனப் போக்கைப் போன்று வாழ்க்கையில தங்கியிரு. அவள் மனம் கள்ளப் புருஷனையே நாடியிருக்கும். இருந்தாலும் வீட்டு வேலைகளை எல்லாம் சரிவரச் செய்வாள்.

இராமகிருஷ்ணரும் வேதாத்திரி ‘மகாசியும் இல்லறத்தில் இருந்து துறவறம் மேற்கொண்டு வாழ்ந்தார்கள். இவர்களது வாழ்க்கையே இல்லறத்திற்கும் துறவறத்திற்கும் உள்ள உறவினை சமதாயத்திற்கு காட்டியுள்ளது.

## இல்லறமும் துறவறமும் இணைந்த வாழ்வு

““இல்லறத்தில் துறவறத்தை அறிந்த கொள்ள

இயலாத காலமொன்று இருந்த துண்டு.

இல்லறத்தை விடடுப்பலர் துறவை நாடி,

எங்கெங்கோ சுற்றிஅலைந் தார்அந் நாளில்

இல்லறத்தில் கடமைசெய்தே தவம்ப யின்று,

இறைநிலையை அறியும்முறை கண்டு விட்டோம்.

இல்லறமும் துறவறமும் ஒன்று சேர்ந்து,

இணைந்தஉயர் அறம்கண்டோம். மகிழச்சி பெற்றோம்

- வேதாத்திரி மகரிசி

ஞானம் என்பது திருத்தமாக வாழ்வதற்கு மனிதனைத் தகுதியாக்கும் 'அறிவின் விளக்கமாகும். சிறப்பாக வாழ்வதற்கே ஞானம் வேண்டும். ஞானத்திற்காக வாழ்வை அர்ப்பணம் செய்யத் தேவையில்லை.

'அறம்' என்பது சிறந்த வாழ்க்கை நெறியாகும். இல்லம் கொண்டு பொருள் ஈட்டிக் 'காத்து உண்டு இட்டு கடமைபுரிந்து மனநிலைவோடு வாழும் 'இனிய வாழ்க்கை நெறி "இல்லறம்" ஆகும்.

**இல்லறமும் துறவறமும் இணைந்த வாழ்வு சிறந்த வாழ்வு என்று பகர்கிறார் மகரிசி.**

**மனிதர்களிடம் ஆராய்ச்சியறிவு குறைவாக இருந்த காலத்தில், இல்லறத்திலேயே துறவறம் என்ற அறிவின் தத்துவம் அறிந்து கடமையாற்றி வாழும் - முறையை அறிந்து கொள்ளும் திறம் இல்லாது போயிற்று.**

**இந்தக் காரணத்தால், துறவு என்ற ஞாபக உயர்வை அடைய வேண்டும் என்ற ஆவல் உள்ளவர்கள், பலவிடங்களில் துறவறம் என்ற எல்லையைக் காட்டுவோரை நாடி அலைந்தார்கள்.**

**இந்நாளில் இல்லறத்தில் வாழுவாத கடமையாற்றிக் கொண்டே, ஞாபக ஓர்மைக்காக கருதவம் என்ற மெய்யுணர்வு தியான முறை மூலம் தன்னிலையே சிவநிலை என அறிந்து, அவ்வகண்டாகார எல்லையில் கொள்ளும் ஞாபகத்துடனேயே வாழ்வை நடத்த முடியும் எனக் கண்டு விட்டோம்.**

**இல்லறமும் துறவறமும் ஒன்று சேர்ந்து இணைந்த பேரறமாக அறிவையும் வாழ்வையும் விரைவில் படிப்படியாக உயர்த்திப் பண்படுத்தி, அத்துவித நிலையைத் தப்பாது எய்துவிக்கும் ஒப்பற்ற மார்க்கம் ஒன்றை அறிந்து கொண்டோம். அதனால் மட்டில்லா மகிழ்ச்சியும் கொள்கிறோம்.**

**"உறவிலே கண்ட உண்மைத் நிலைத் தெளிவே துறவு" என்பதை உணர்ந்து வாழ்வோமாக.**

# 10. பக்தியும் ஞானமும்.

"கடவுளை அடைவதற்கு ஞானமார்க்கம் ஒரு வழி, ஞானம்-பக்தி இவையிரண்டும் கலந்தது மற்றறொரு வழி. இன்னொரு வழி பக்தி மார்க்கம்.

ஞானமார்க்கமும் உண்மை, பக்தி மார்க்கமும் உண்மை. எல்லா மார்க்கங்கள் வழியாகவும் இறைவனை அடையலாம். உணரலாம்.

ஆனால், கடவுள் எவ்வளவு காலம் "நான்" என்னும் உணர்வை நம்முள் வைத்திருக்கிறாரோ, அதுவரை பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுவது சுலபமானது"

இதுதான் பக்தி மார்க்கம் ஞானமார்க்கம் பற்றி இராமகிருகிருஷ்ணரின் உபதேசமாகும்.

பக்தி மார்க்கத்தின் மூலம் ஞான மார்க்கத்தை அடைவது எளிது.

இராமகிருஷ்ணர் சொன்ன "நான்" உணர்வை அறியச் செய்து ஞானமார்க்கத்திற்கு பயணிக்க வைக்கிறார் வேதாத்திரி மகரிசி.

"வாழ்வின் நோக்கத்திற்கும் முரண்பாடாக வாழ்வு அமையுமானால் அது துன்பம்தான் தரும். இயற்கையாகக் கிடைக்க வேண்டிய இன்பம் தடுக்கப்படுகிறது. "

வாழ்க்கையையும், வாழ்க்கையின் நோக்கத்தையும் , அந்நோக்கத்திற்கு ஏற்ப வாழும் முறை என்ன என்பதையும் அறிந்து கொள்வதுதான் "ஞானம்" என்கிறார் மகரிசி.

குண்டலின் யோகம் தனி மனிதன் முழுமைக்கும் உலக சமுதாய நலனுக்கும் ஏற்றதொரு உளப்பயிற்சி முறையாகும். இதுவரையில் ஞானம் என்ற துறையில் சில தவறான கருத்துகள் உலா வருவதை மகரிசி குறிப்பிடுகிறார்.

1. ஞானம் என்பது தனி மனிதனுக்கு கிட்டா.
2. ஞானம் இல்லறத்தாருக்கு ஏற்றதல்ல.
3. பெண்கள் ஞானத்திற்கு ஒவ்வாதவர்கள்.4. ஞானம் பெற்றதால் மனிதன் குடும்பத்தை மறந்து விடுவான்.
5. ஞானம் பொருளாதார துறைக்கு எதிரான ஒன்று.

இவ்வகையான ஐவகைக் கருத்துக்களையும் திருத்தி இன்று எண்ணிறந்த மக்களுக்கு உலகமெங்கும் மெய்விளக்கம் அளித்திருக்கின்றன மனவளக்கலை மன்றங்கள்.

பக்தி, ஞானம் பற்றிய தெளிவான சிந்தனைகளை நம் முன் வைக்கிறார் வேதாத்திரி மகரிசி.

- அறநெறியை பிறர் உணர்த்தி தான் பின்பற்றும்முறை பக்தி வழியாகும். தானே உணர்ந்து பொறுப்போடு ஆற்றி வாழும் வழி “ஞான” வழியாகும்.
- வளர்ப்போர் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பித்திருப்பச் சொல்லும் கிளியைப் போன்று தன் தாயார் சுட்டிக்காட்டிய ஒருவன் தான் தன் தகப்பன் என்று உறுதியாகச் சொல்லும் மகனின் மனோநிலை போன்ற பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள கருத்துக்களே சரி என்று நம்பி உறுதி கொண்டிருக்கும் நிலையே பக்தி.
- அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி. அறிவை அறிவால் அறியப் பழகுதல் யோகம். அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்.

- பெரியவர்கள் அறிவில் தெளிந்தவர்கள் சொற்படி அவர்கள் வழியில செயல்புரிந்து தன்னை ஆன்மீக வாழ்வுக்குத் தகதியாக்கிக் கொள்வது பகுதி பக்தி யோகம்.
- தத்துவ விளக்கமும் அவ்விளக்கத்தின்படி வாழும் ஒழுக்கமும் இணைந்த உடல் உள்ள சிறப்பியக்கமே ஞானம் எனப்படும்.
- ஞானியானவன் தான் வாழும் வகையறிந்து தெளிவோடு வாழ்வதோடு வாழத் தெரியாதவர்களையும் நல்வாழ்வு எனும் பாதையில் நடத்திச் செல்லும் பேரொளியாகவும் இருக்கிறான்.
- வாழ்வை விளங்கிக் கொள்ளாத உணர்ச்சி நிலையில் உள்ளவர்கள் மற்றவர்களுக்கும் தனது எதிர் காலத்திற்கும் துன்பம் விளைவிக்காமல் ஒழுங்காக வாழ ஒரு நல்ல முறையை முன்னோர்கள் உருவாக்கினார்கள். அதுதான் பக்தி நெறியாகும்.

- பக்திவழி, ஞானவழி என்னும் இருவழிகளில், குண்டலினி யோகமானது ஞான வாழ்வை விளக்கி, வழி நடத்துவது ஆகும். இதனால் இது பக்திவழியைப் புறக்கணிக்கின்றதாகாது.

துறவை உபதேசித்ததில் இராமகிருஷ்ணர் பட்டினத்தாருக்கு இணையாகத் திகழ்கிறார்.

## துறவு ராமகிருஷ்ணரின் தனிசிறப்பு.

இராமகிருஷ்ணரை நாடிய உலகப்பற்றுடையவர்களும், “இந்தப் பெருந்தகைக்குக் கடவுளைத் தவிர வேறு உலகம் இல்லை. நமக்கோ உலகத்தைத் தவிர வேறு கடவுள் இல்லையே!” என்று சிந்தித்து தெளிந்து ஞானமார்க்கத்தைக் கைக்கொள்ள ஆரம்பித்தனர்.

ஏற்கனவே சிறிதளவு ஞான உணர்வு பெற்றவர்களுக்கும் கடவுளைத் தரிசிக்க விரும்பிய சாதகர்களுக்கும் இராமகிருஷ்ண நெறி ராஜபாதை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கிவிட்டது.

எந்த விக்கிரக வழிபாட்டுக் கொள்கைகளை ஆரம்பத்தில் நரேந்திரர் தகர்த்துப் பேசி வந்தாரோ, அதே விக்கிரக வழிபாட்டுக் கொள்கைகளாலேயே பரிபூரணம் எய்திய இராமகிருஷ்ணர் திருவடிகளிலே நவீனக் கல்வி கேள்விகளில் மிகப் பெரும் புலமை பெற்ற நரேந்திரர் நாடி வந்தார்.

புராதன முனிவர்கள் கண்ட இந்தியத் தத்துவஞானம், நவீன விஞ்ஞானத்தை வென்று விட்டது. ஆம், நரேந்திரர் இராமகிருஷ்ணரின் சீடராகிவிட்டார்.

இராமகிருஷ்ணருடைய வாழ்க்கை, அவருடைய போதனைகளைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிகமானது.

உபநிடத்து வாக்கியங்களின் உயிருள்ள பாஷ்யமாக அமைந்தது. ஆம், உபநிடதங்களின் சாரமே இந்த மனித உருவத்தில் அவதரித்தது என்று சொல்ல வேண்டும்.

இராமகிருஷ்ணர் தமது எளிய இனிய உபதேசங்களால் பொதுமக்களிடையே ஞான எழுச்சியை உண்டாக்கியபடி இருந்தார்.

தமது ஒரு பார்வையாலும் ஒரு ஸ்பரிசத்தாலும் ஞானத்தைப் பிறருக்கு அவர் ஊட்டினார்.

நரேந்திரர் உட்படத் தூய்மையான சில இளைஞர்களைத் தமது அந்தரங்கச் சீடர்களாகத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கடுமையான ஞான வாழ்க்கையில் ஈடுபடுத்தினார்.

நரேந்திரரின் வாழ்வில் புதியதோர் அத்தியாயம் துவங்கியது. இராமகிருஷ்ணரின் அரிய கருத்துக்களும் ஆற்றல்களும் நரேந்திரரின் மூலமாக செயல்வடிவம் பெறத் துவங்கின.

நரேந்திரர் துறவு புண்டார். விவேகானந்தராக இமயம் முதல் குமரி வரை பாரதம் நெடுகிலும் பாத யாத்திரையை மேற்கொண்டார்.

கன்னியாகுமரியில் மூன்று நாள் தங்கித் தவம் புரிந்தார். அங்கே புதியதொரு பாரத்ததை உருவாக்க அவர் முடிவெடுத்தார்.

புத்தபெருமான் போதிமரத்தடியிலே ஞானம் பெற்றாற்போல, குமரி முனையிலே விவேகானந்தர் ஒரு புதிய ஒளியைப் பெற்றார்.

அதன் விளைவாக 1893 ஆம் ஆண்டு நடைபெற்ற சிகாகோ சர்வசமயப் பேரவையில் விவேகானந்தர் கலந்து கொண்டு வேதாந்த மத்திற்கு மகத்தான பெருமை தேடித் தந்தார்.

உலகம் அவரைப் புரிந்து கொண்டது. அதன் மூலம் இராமகிருஷ்ணரின் அவதாரப் பணி ஓர் உத்தவேகம் பெற்றது.

பட்டினத்தாரைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மிகப் பெரிய கோடீஸ்வரரான அவர், ஒருநாள் அத்தனை செல்வத்தையும் துறந்துவிட்டு துறவறம் பூண்டார்.

கோவணத்துடன் கிளம்பினார். கையில் திருவோடு வைத்திருப்பது கூட உண்மையான துறவுக்கு எதிரானது என்பது அவர் கருத்து.

ஒருமுறை ஒரு வயல் வழியாக நடந்து சென்றவர் மிகவும் களைப்படைந்தார். அப்படியே வரப்பில் படுத்து உறங்கினார்.

வளர்ந்திருந்த நெற்செடிகள் காற்றில் அசைந்து அவரின் சட்டை அணிந்திராத உடம்பில் குத்தி ரணப்படுத்தின. ஆனாலும் அதைப்பற்றி கவலைப்படாதவராக அவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தார்.

அப்போது பெண்கள் சிலர் அந்த வரப்பு வழியாக நடந்து வந்தனர். பட்டினத்தார் வரப்பின் மீது படுத்திருந்த காரணத்தால் அவர்களால் அவரைத் தாண்டி செல்வது கடினமாக இருந்தது. அவர்களுக்கு அவர் பட்டினத்தார் என்பது தெரியாது. யாரோ ஒரு சாமியார் என்று நினைத்தனர்.

அப்போது அதில் ஒரு பெண், ““யாரோ ஒரு மகான் உறங்கிக் கொண்டிருக்கிறார். அவரைத் தொந்தரவு செய்யக்கூடாது," என்று கூறி வரப்பை விட்டுக் கீழே இறங்கி நடந்தாள்.

இதைக் கேட்ட இன்னொரு பெண் மணியோ, ““இவரா பெரிய மகான்? ஆசையை அடக்க முடியாமல் தூங்குவதற்குக் கூட வரப்பை தலையணையாகப் பயன்படுத்திக் கொண்டு தூங்குகிறார் பாரு," என்று இளக்காரமாகவும், கோபமாகவும் பேசினாள்.

இதனைக் கேட்ட பட்டினத்தார் அதிர்ச்சி அடைந்தார். “அந்தப் பெண்ணுக்கு இருக்கும் புத்தி கூட தனக்கில்லாமல் போய் விட்டதே...' என்று வேதனைப்பட்ட அவர், அந்த பெண்கள் அங்கிருந்து கடந்து போனதும், வரப்பிலிருந்த தலையைக் கீழே வைத்துப் படுத்தார்.

சற்று நேரத்தில் அந்தப் பெண்கள் திரும்பி வந்தனர். அப்போது அந்த சாமியார் வரப்பிலிருந்து கீழே படுத்திருப்பதைப் பார்த்த அந்தப் பெண்மணி, “பார்த்தாயா, நீ சொன்னதை கேட்டு வரப்பிலிருந்து தனது

தலையைக் கீழே வைத்துப் படுத்துவிட்டார். இப்போது சொல், அவர் மிகப் பெரிய மகான்தானே?" என்று அகமகிழ்ந்து கூறினாள் ஒரு பெண்.

““இவரா பெரிய மகான்? இந்த வழியாகப் போகிறவர்கள் எல்லாம் தன்னைப் பற்றி என்ன பேசிச் செல்கின்றனர் என்று ஒட்டுக் கேட்டு, அதைப் பற்றிக் கவலைப்படுகிறார். இவரைப் போய் பெரிய மகான் என்று சொல்கிறாயே!" என்றாள் அந்த இரண்டாவது பெண்மணி.

இதைக் கேட்டு பட்டினத்தார் உண்மையிலேயே அதிர்ந்து போனார். இனிமேல் யாருடையே விமர்சனத்திற்காகவும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வது கூடாது என்று அப்போது முதல் அவர் திடமாக முடிவெடுத்தார்.

விமர்சனத்தில் இரண்டு வகை உண்டு. ஒன்று நேர்மறை விமர்சனம்; இன்னொன்று எதிர்மறை விமர்சனம்.

நேர்மறையான எண்ணம் கொண்டவர்களின் விமர்சனம் எப்போதும் திருப்தி அளிக்கும் விதமாகவே இருக்கும். அந்த முதல் பெண்மணி கூறியதைப் போலவே அது இருக்கும்.

எதிர்மறை எண்ணம் கொண்டவர்கள் செய்யும் விமர்சனம் எப்போதும் குற்றம், குறைகளைக் காண்பதாகவே இருக்கும். அதாவது அந்த இரண்டாவது பெண்மணியைப்போல.

நியாயமான விமர்சனம்தான் உண்மையானதாக இருக்கும். ஆனால், அந்த வகை விமர்சனம் கிடைப்பது என்பது மிகவும் அரிது.

அதில் குற்றம் குறைகள் சுட்டிக் காட்டப்படவும் செய்யும். நல்ல தன்மைகள் பாராட்டப்படவும் கூடும்.

எனவே, இதுபோன்ற நேர்மையான விமர்சனங்களுக்காக காத்துக் கிடக்காமல் உங்கள் உள்ளத்திற்கு எது நேர்மையானதாகத் தெரிகிறதோ, அந்த பாதையில் உங்கள் பயணத்தைத் தொடர்ந்துகொண்டே இருங்கள். விமர்சனங்களைப் புறக்கணித்து விடுங்கள்.

வாழ்க்கை என்பது இறைவன் நமக்குத் தந்திருக்கும் உரிமை. இந்த மண்ணுலகில் பிறந்து விட்டோம். நல்லதை செய்து நலமாக வாழ்வோம்!.

இராமகிருஷ்ணர் உபதேசித்த ஞானவாழ்வை வாழ்வது பற்றி மிகவும் எளிமையாக போதித்துள்ளார் மகரிசி.

“ஞானம் என்றால் அறிவின் தெளிவு என்பது பொதுவான விளக்கம். அறிவையறிந்த தெளிவு என்பது சிறப்பான விளக்கமாகும்.

உடலியக்கம், உயிரியக்கம் இரண்டும் இணைந்த ஒரு சிறப்பியக்கம் ஜீவன் எனப்படும்.

உடடே உயிர் சுழன்ற இயக்கும்போது அவ்வுயிரின் சிற்பானற்றலாக எழும் விளைவே உணர்ச்சிகள்.

உணர்ச்சிகளைத் துய்த்து உயிரானது வெறும் உண்மை நிலைத் தெளிவே அறிவு. ஜீவனின் பிறப்பிற்கும், இறப்பிற்கும் இடையே நடைபெறும் தொடரியகம் வாழ்வு ஆகும்.

1. இயற்கை விதி
2. சமுதாய அமைப்பு
3. இன்ப துன்ப உணர்ச்சிகள்

ஆகிய மூன்று கோணங்களின் இணைப்பிலே வாழ்வு நடைபெறுகின்றது. இம்மூன்று துறைகளையும் பற்றித் தெளிவாக அறிந்து அறிவிலே முழுமை பெற்று வாழ்வதே “ஞான வாழ்வு” ஆகும்.

வெளிச்சத்திலே பொருட்களைத் தெளிவாகப் பார்ப்பது போல, கொள்முதல் விலை தெரிந்தவன் விற்பனை விலையை நிர்ணயிப்பது போல், முறையாக அடக்கி வைத்த பொருட்களில் தேவையான ஒன்றைக் காலநீளமின்றி குறிப்போடு எடுத்துக்

கொள்வது போல், மனிதன் எளிதாகவும், செம்மையாகவம் வாழ்வதற்கு “ஞானம்” உதவுகின்றது.

பொருட்களால் உடலும், காமத்தால் குடும்பமும், அறத்தால் சமுதாயமும், தத்துவ ஞான விளக்கத்தால் சமாதான வாழ்வும் ஆக்கவும், காக்கவும் பெறுகின்றன.

ஆதலால், , வாழ்வில் “ஞானம்” இடம் பெறும் அளவிற்கே மக்களுக்குச் சிறப்பும், இன்பமும், அமைதியும் ஏற்படுகின்றன.

எனவே “ஞானம்” என்பது வாழ்க்கை விளக்கு ஆகும். தகுதியுடையோர் “ஞானம்” பெற்று வாழ்தல் வேண்டும். இயலாதோர் ஞானிகள் வழியைப் பின்பற்றி வாழ வேண்டும்.



# 11. இத்தனை உருவங்களா?

இறைவன் அருவமா, உருவமா என்ற கேள்வி தொன்று தொட்டே கேட்கப்பட்டு வருகிறது. அறிவு ரீதியாக சிந்திப்போர் பலருக்கும் விதவிதமான உருவங்களில் இறைவன் இருப்பான் என்பதை நம்ப முடிவதில்லை.

உருவ வழிபாடு காலங்காலமாக நம் நாட்டில் இருந்து வருகிறது. அப்படி வழிபடுபவர்கள், அறிவை அகற்றி வைத்தவர்களும் அல்ல என்பதால் , ஒரு குழப்பம் எழுகிறது.

எது சரி? இறைவன் அருவமா, உருவமா? எல்லாம் அறிந்த நம் முன்னோர்கள் இது பற்றி நிறையவே சொல்லி இருக்கிறார்கள்.

வேதங்களில் முதன்மையான ரிக்வேதம் சொல்கிறது. "உண்மையான இறைவன் ஒருவனே. ஞானிகள் அவனைப் பல விதங்களில் வர்ணிக்கிறார்கள்". (ரிக்வேதம் 1.64.46)

"இப்படியன், இந்த நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக் காட்ட" முடியாத பரம்பொருள் என்கிறார்



அப்பர் பெருமான்.

மாணிக்க வாசகரும் "உருவமும் அருவமும் ஆய பிரான்" என்று சிவபெருமானைப் போற்றுகிறார். உருவமாகவும், அருவமாகவும் இறைவன் இருப்பதாகச் சொல்கிறார்.



"உளன் எனில் உளன் அவன் உருவம் இவ்வுருவுகள். உளன் அலன் எனில் அலன் அவன் அருவமிவ்வருவுகள் உளனென இலனென அவைகுணமுடைமையில் உளன் இரு தகைமையோடு ஒழிவிலன் பரந்தே"

அவன் இருக்கிறான் என்பவர்க்கு உருவமான ஸ்தூல சரீரமாகவும், அவன் இல்லையென்பார்க்கு அருவமான சூட்சும சரீரமாகவும் இரு வகைப்பட்ட தன்மைகளை உடையவனாக அந்த

பரந்தாமன் இருப்பதால், என்றும் எங்கும் வியாபித்து இருக்கும் நிலை கொண்டவன் அவனே என்று நம்மாழ்வார் கூறுகிறார்.

பின் ஏன் உருவ வழிபாடு என்ற கேள்விக்கும் அப்பர் பெருமான் இன்னொரு இடத்தில் விளக்கம் கூறுகிறார்.

ஆரொருவார் உள்குவார் உள்ளத்துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்

அன்பால் நினைக்கின்றவர் எந்த உருவில் நினைத்தாலும் கடவுள் அவ்வுருவில் வந்து அருள் புரிவார் என்கிறார் அவர்.

அருவமான இறைவனை உள்ளத்தில் இருத்துவது மிகவும் கடினம். கூர் நோக்கு நிலையில் எண்ணக் குவியலுக்கு ஒரு உருவம் தேவை.

உள்ளம் பற்றிக் கொள்ள ஒரு உருவம் இருந்தால் வழிபடுதல் சுலபமாகிறது என்பதால் உருவ வழிபாடு ஆரம்பமாயிருக்கலாம்.

அதே நேரத்தில் ஒவ்வொர் இறை உருவத்திலும் ஆழ்ந்த பொருள் இருக்கின்றது என்பதை மறந்து விடக்கூடாது.

இறைவனின் தோற்றத்தில் ஒரு பொருள், அவன் வைத்திருக்கும் ஆயுதங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருள்.

அவன் வாகனத்திற்கு ஒரு பொருள் என்று பல நுண்ணிய பொருள்கள் அவனது திருவுருவத்தில் இருக்கும்படி ஆன்மிகப் பெரியோர் படைத்தனர்.

இறைவனின் எண்ணிலா உயர்குணங்கள் பலவற்றையும் ஒவ்வொரு திருவுருவும் விளக்கும்படி இருந்தபடியால் பக்தன் அந்த உருவத்தைக் காணும் போதே அத்தனை குணங்களும் மனதில் பதிய வணங்குதல் அவனுக்கு எளிதாகும்.

இந்த உயர்ந்த நோக்கத்தில் தான் உருவமில்லை என்று ஒத்துக் கொண்ட போதும் நம் முன்னோர் பல உருவங்களில் அவனைக் கண்டு மகிழ்ந்தார்கள். இந்த உண்மை திருவாசகத்தில் மிக அழகாகப் பாடப்பட்டிருக்கின்றது.

ஒருநாமம் ஒருருவம் ஒன்றுமில்லாற் காயிரந் திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ.

என்று அவர் திருவாசகத்தில திருத்தெளேணத்தில் கூறுகின்றார்.

ஒரு பெயரும், ஒரு வடிவமும், ஒன்றும் இல்லாத இறைவனுக்கு, ஆயிரம் திருப்பெயர்களைக் கூறி, நாம் தெள்ளேணம் கொட்டாமோ? என்று கேட்கிறார்.

அருவ நிலையில் உள்ள இறைவன் உயிர்களின் பொருட்டுத் தன் நிலையிலிருந்தும் இரங்கி அடுத்த நிலையாகிய அருவுருவத்தில், அருவமும் உருவமும் கலந்த நிலையில் அதாவது லிங்க வடிவத்தில் காட்சி தருகிறான் என்றும் சிவனடியார்கள் கூறுகிறார்கள்.

அருவம் கண்ணுக்குத் தோன்றாதது. உருவம் கண்ணுக்குப் புலப்படுவது. இந்த இரண்டும் சேர்ந்ததே லிங்கம் என்பர்.

“காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிலைலிங்கம்”

இந்த அருவுருவ வடிவாகியன சிவலிங்கமே நம் நாட்டில் எல்லா சிவன் கோயில்களிலும் மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

உண்மையான இலக்கு இறைவனை உள்ளுக்குள் நாம் உணர்தல். அது தான் மிக முக்கியம். உருவமா, அருவமா என்ற வாதங்களில் நம் வாதத் திறமைகளை வளர்த்துக் கொள்ளலாமே ஒழிய ஆன்மிகத்தை வளர்த்துக் கொள்ள முடியாது. இதை அருணகிரிநாதர் தெளிவாக விளக்குகிறார்.



“உருவெனவும் அருவெனவும் உளதெனவும் இலதெனவும் உழலுவன பரசமய கலையார வாரமற உரையவிழ உணர்வவிழ உளமவிழ உயிரவிழ உளபடியை உணருமவர் அநுபூதி ஆனதுவும்”

இப்பாடலில் அருணகிரிநாதர் கடவுளை உருவம் என்றும், அருவம் என்றும் கூறுகிறார்.

,மேலும் உள்ளது எனவும், இல்லை எனவும் தடுமாற வைப்பது மற்றைய சமயக் கூறுகளின் ஆரவாரங்கள்.

அதை ஒழித்து நம் அனுபவ அறிவுக்கு மெய்ப்பொருள் விளங்கி, உண்மை உணர்வு வெளிப்பட்டு, உள்ளம் நெகிழ, உயிர் உருகி உள்ளதை உள்ளபடி உணரவேண்டும் என்கிறார் அவர்.

நமது அனுபவ அறிவே நமக்கு கடவுளை உள்ளபடி உணர்த்தும். ஆதலால் சமயங்களைக் கடந்த கடவுளை நமக்குள்ளேயே தேடிக் கண்டுகொள்ளலாம்.

இறைவன் ஒருவனே என்றால் அவனுக்கு இத்தனை உருவங்கள் இருப்பது ஏன்? என்று கேட்ட ஒருவருக்கு இராமகிருஷ்ணர் பதிலளித்தாக அமைத்த கண்ணதாசன் ◌◌◌◌

கவிதையில்

“நீங்கள் ஒருவர். நிச்சயம் ஒருவரே!

ஆனால் நீங்கள் அன்னைக்குப் பிள்ளை,

பிள்ளைக்குத் தந்தை. பேரர்க்குப் பாட்டன்,

மாமிக்கு மருமகன், மனைவிக்குக் கணவன்.

தம்பிக்கு அண்ணன். தங்கைக்கும் அப்படி!

இந்த உமக்கே இத்தனை வடிவம்

இறைவனுக் கேனையா இருக்கக் கூடாது?"

என்று பாடியதிலிருந்து பல உருவங்களில் இறைவன் இருப்பதற்கான காரணத்தைக் கண்ணதாசன் விளக்குகிறார்.

"எந்தஒரு பொருளையோ சக்தி யையோ

எவரையொ ஒருமனிதன் தன்வாழ் விற்கு

சிந்தனையில் ஆதார மென்று கண்டால்,

சிறப்பெனவே மதித்துவந்தான், வணங்கி வந்தான்,

இந்தபெரும் மதிப்புணர்த்தும் இனிய சொல்லே

"இறைவன்"இவ் வுலகமிசை மனித ரெல்லாம்

பந்தமெனும் ஞாபகத்தின் உயர்வுக் கேற்ப

பலவிதமாய் இறைவன்களைத் தோன்று வித்தார்." ((ஞா.க.206)

- வேதாத்திரி மகரிசி

எந்த பொருளையாகிலும், நபரையாகிலும், சக்தியையாகிலும் தம் வாழ்விற்கு ஆதாரமாக இருக்கிறதென்று அறிந்தால், யூகித்தால், அல்லது அவரைச் சிறப்பாக மதிப்பதும், வணங்கி நிற்பதும் மனிதன் இயல்பு.

தன் வாழ்விற்கு ஆதாரப் பொருள் எனும் சிறப்பை உணர்த்துவதற்கு எடுத்துக் கொண்ட ஒரு சொல்தான் "இறை" அல்லது "இறைவன்" என்று யுகிக்கலாம்.

இவ்வுலகில் மனிதர்கள் தங்கள் அறிவின் உயர்வுக் கேற்றவாறு, தங்கள் வாழ்விற்கு ஆதாரமென எதை எதையோ கண்டார்கள்.

இப்படியாகப் பல இறைவன்களைக் கருத்தால் பண்டைய நாளில் வாழ்ந்த மனிதர்கள் தோற்றுவித்தார்கள் என்கிறார் மகரிசி.

## கடவுள் உருவமா? அருவமா

ஒரு சமயம் உபேன் என்ற அன்பர் இராமகிருஷ்ணரிடம்

"அய்யா, இறைவன் உருவம் உடையவரா? அருவமானவரா? இரண்டுமே உண்டு என்றால் எப்படி இந்த முரண்பட்ட இரண்டு இயல்புகள் ஒரே சமயத்தில் இறைவனிடம் இருக்க முடியும்?" என்று வினவினார்.

அதற்கு இராமகிருஷ்ணர் "இறைவன் உருவம் உடையவர். உருவம் அற்றவர் - இரண்டும் அவரே. பனிக்கட்டியையும் தண்ணீரையும் போல" என்று பதில் கூறினார்.

உபேந்திரர் கல்லூரியில் விஞ்ஞானம் படித்தவர். அதனால் இராமகிருஷ்ணர் கூறிய உதாரணம் அவருக்கு உடனே புரிந்து விட்டது.

மார்வாரி பக்தர் - "அய்யா, உருவ வழிபாடு என்றால் என்ன? குணமற்ற, உருவமற்ற வழிபாடு என்றால் என்ன?

இராமகிருஷ்ணர் - தந்தையின் புகைப்படம் எப்படி உன் தந்தையை நினைவிற்குக் கொண்டு வருகிறதோ,அதுபோல நீ தொடர்ந்து வடிங்களை வழிபட்டுவந்தால் உண்மை இறைவனை உணர்வாய்.

"பரந்துபட்ட நீர்ப்பரப்பிலே எழும் நீர்க் குமிழிகளைப் போன்றது உருவ வழிபாடு.

எல்லையற்றுப் பரந்து விரிந்து கிடக்கும் மகா சிதாகாசமாம் (அறிவு ஆகாயவெளியில்) ஞான வெளியில் பல்வேறுவகைப்பட்ட தெய்வ வடிவங்கள் உதிப்பதைக் காண்கிறாம்.

கடவுள் அவதாரமும் இப்பல வடிவங்களில் ஒன்றே. இத்தகைய அவதார புருஷர்கள் செய்து வரும் தெய்விக லீலைகள் வாயிலாகப் பராசக்தி தன் விளையாட்டை விளையாடி வருகிறாள்.

வெறும் நூலறிவில் என்ன இருக்கிறது? உள்ளம் உருகி அழுது அழைத்தால்தான் ஈசனைப் பெற முடியும். அப்படியிருக்கப் பல விஷயங்கள் அறிந்து கொள்ள வேண்டிய அவசியம்தான் என்ன?

வேதாத்திரி மகரிசியின் உருவவழிபாடு பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகள் இன்றைய வழிபாடு தொடர்பான சிக்கல்ளைப் போக்கி அறிவுபூ ர்வமான வழிபாட்டிற்கு வழிவகுப்பதை அறிய முடிகிறது.

இச்சையைத் ˙தொழிலாக உடைய ஆன்மாவை அதன் போக்கிலிருந்து திருப்பிவிட வேண்டும். அதற்கு உளப்பயிற்சி அவசியம். இப்பயிற்சி அனுபவத்தால் வருகிறது. அதனை

1ஓர்மை நிலை

2. அடக்க நிலை

3. ஒடுக்க நிலை

என்னும் மூன்று பிரிவுகளில் அடக்குகிறார் மகரிசி

அறிவு செம்மையாகி அடங்கி ˙லயமாகும் பயிற்சியே ஆலயம் ஆகும். ஆ – லயம் (ஆலயம்) என்பதில் மனத்தை ஒருமுகப்படுத்தும் பணி நடைபெறுகிறது. இப்பணிக்கு அடிப்படை ஆலயங்களில் உள்ள விக்கிரகங்கள் ஆகும்.

இவற்றை உருவப் படிமங்கள் என்பது பொருந்தும். இந்த உருவங்களை வழிபடுவது எனும் நிலை அதன் மூலம் மனத்தை ஒருமுகப்படுத்தும் மனநிலை இன்று பரவலாக வளர்ந்து வந்துள்ளது.

இந்த உருவ வழிபாட்டு வளர்ச்சியே சடங்குகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது. விக்கிரக வழிபாடு எவ்வாறு வந்தது என்பது பற்றிய அவரது விளக்கம் அறிவார்ந்த நிலையில் அமைந்திருக்கிறது.

மனிதன் அவனைவிட மனத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவோ அல்லது உயர்த்திக் கொள்வதற்காகவோ கடவுளைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தான். இவனுடைய எண்ணம் குணங்கள் இவை எல்லாவற்றையும் கடவுளுக்கு ஏற்றி வைத்தான். இவனது தேவைகளைக் கடவுள் தேவையாகக் கருதினான்

ஆதனால் உருவங்களைப் படைத்து அதில் அணிகலன்களை அணிவித்துச் சடங்குகளைப்ப படைத்தது அதில் அணிகலன்களை அணிவித்துச் சடங்குகளை இணைத்து வழிபடத் தொடங்கினான் என்று அறிவுபூர்வமான விளக்கத்தைத் தருகிறார் மகரிசி.

‘உடல்நலம் அறிவோடு செல்வம் கீர்த்தி

ஒழுக்கம் வீரம் அழகு காதல் ஞானம்

கடமை உணர்வினைப் பெற்று இனிது வாழ

கற்பனையால் கருத்துயர்த்த நினைத்த முன்னோர்

உடல்நலம் முதலான ஆற்றலெல்லாம்

ஒன்றிணைத்து உருவமைத்து நம்புதற்கு

கடவுள் கதைகள் பலவும் கற்பித்தார்கள்

கருத்துயர்ந் தோர்க்கு இச்சடங்கு தேவையில்லை’

என்று கூறுகிறார். உருவ வழிபாட்டின் மூலம் இறைவனை வழிபடுவதைவிட அகத்தவத்தனால் இறைவனை வழிபடுவதே சாலச் சிறந்தது எனக் கண்டுபிடித்துக் கூறுகிறார்.

‘இறைநிலையே அறிவாக இருக்கும்போது

இவ்வறிவை சிலை வடிவத் தெல்லை கட்டி

குறை போக்கப் பொருள் புகழ் செல்வாக்கு வேண்டி

கும்பிட்டுப் 'பலன் கண்ட 'வரையில் போதும்

நிறை நிலைக்கு அறிவு பிரிந்துண்மை காண

நேர்வழியாம் அகத்தவத்தைக் குருவால் பெற்று

முறையாகப் பயின்றுன்னில் இறையைத் தேற

முனைந்திடுவீர் காலம் வீணாக்க வேண்டாம்'

என்று அறைகூவல் விடுத்து உருவ வழிபாட்டை விடுத்து அகத்தவ நிலைக்கு மக்களை அழைக்கிறார் மகரிசி.

இராமகிருஷ்ணரிம் அவரது சீடர்கள், " உருவ வழிபாடு சிறந்ததா இல்லை அருவ வழிபாடு சிறந்ததா? என்று விளக்கம் கேட்டார்கள்.

"உருவ தியானத்தினும் அருவ தியானமே சிறந்தது. அதிலும் இருவகை உண்டு.

ஒன்று "பழுத்த பக்குவப்பட்ட தியானம்". மற்றொன்று "பழுக்காதது". ஆனால் பழுத்த நிலையை உருவ தியானத்தின் மூலம் தன் அடையவ முடியும்.

பழுக்காத அருவ தியானத்தில் கண்களை மூடினால் வெறும் இருட்டுத்தான் தெரியும், என்று இராமகிருஷ்ணர் சீடர்களுக்கு விளக்கினார்.

பின்பு மேலும் விளக்கமாகக் கூற வேண்டுமென்ற விருப்பத்தில் தொடர்ந்தார்.

"இறைவனுக்கு உருவம் உள்ளது என்பது உண்மை. அதுபோன்றே உருவம் இல்லாதவர் என்பது உண்மையே.

இதை மிகவும் எளிய உதாரணத்தால் விளக்கிக் காட்டுகிறேன். தண்ணீருக்கு உருவம் இருக்கிறா?" என்று சீடர்களிடம் வினவினார்.

"தண்ணீருக்கு உருவம் இல்லை. எனினும் எந்த வடிவில் நிறைந்துள்ளதோ அதன் வடிவை தண்ணீர் அடைகிறது" என்றார் ஒருவர்.

"ஆனால் அதே தண்ணீர் உறைந்தால் பனிக்கட்டி ஆகிறதே அதற்கு உருவம் உண்டு. பனிக்கட்டி என்பது நீர்தான். நீரைத் தவிர வேறு ஒரு பொருள் அதிலில்லை.

நீருக்கு வடிவமில்லை. ஆனால் நீரால் ஆன பனிக்பட்டிக்கு உருவம் உண்டு.

அதேபோன்றுதான் உருவமற்ற அகண்ட சச்த்திதானந்தக் கடலின் தண்ணீர். பக்தியினால் உறைந்து பனிக்கட்டி போல பலவகையான வடிங்களை எடுக்கின்றது.

இராமகிருஷ்ணர் கூறிய இந்த உவமையைக் கேட்பின்பு பலபேருடைய சந்தேகங்கள் அகன்றன.

இரு நிலைகளிலும் இறைவன் இருக்க முடியும் என்ற நம்பிக்கையை இராமகிருஷ்ணர் உருவாக்கினார்.

சாதாரணமானவர்கள் இறை அனுபவம் பெற்றிட உருவ வழிபாடு பெரிதும் துணைபுரிகிறது. கல்லூரி மாணவர்களுக்கும்அறிவியல் கருத்துக்களை விளக்க, மெய்ப்பிக்க கருவிகளின் துணை தேவை.

இறைவனைச் சிலை, சிறபம், ஓவியம் போன்றவற்றில் உருவமாக்கி வழிபட்டு வணங்கும் போது நாம் வணங்குகின்ற உருவிலேயே இறைவன் காட்சியளிக்கிறார்.

## அளவிடமுடியாது.

அளவிடமுடியாது. எல்லையில்லாத, பிரபஞ்சத்தை ஆய்வு செய்ய விண்ணில் உள்ள சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தின் மேற்பார்வையாளர் டிசம்பர் 9, 2006 அன்று விண்வெளி சென்று ஜீன் 22, 2007 அன்று அட்லாண்டில் விண்வெளி ஓடத்தினால் புவிக்குத் திரும்பிய வானவியல் அறிஞர்களுள் சுனிதா வில்லியம்ஸ் என்பவரும் ஒருவர்.

விண்வெளியில் 193 நாட்கள தங்கியிருந்த பெண்மணி, விண்ணில் 29 மணி 17 நிமிடங்கள் நடந்தவர். விண்வெளியில் முதன்முதலில் ஓடியவர் ஆகிய பெருமைகளையும் இவர் ஒருங்கே பெற்றார்.

20-072007 அன்று நாசா விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து "வீடியோ கான்பிரன்சிங்" என்ற கணினி வழி உரையாடலை சுனிதா வில்லியம்ஸ் இந்திய மாணவர்களுடன் நிகழ்த்தினார்.

சென்னை, மும்பை, டில்லி, கல்கத்தா நகரங்களில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரக அலுவலகங்களில்இந்திய மாணவர்கள் அவருடன் கலந்துரையாடினர்.

அந்த உரையாடலில்போது நம் மாணவர்கள் கேள்விகள் கேட்டனர். அதற்கு அவர் அளித்த பதில்கள் நம் சிந்தனைக்கு வெளிச்ச மூட்டுவதாய் இருந்தன. அதிலிருந்து ஒரு கேள்வி.

கேள்வி - விண்வெளிப் பயணத்தின் போது நீங்கள் எடுத்துச் சென்ற உங்களுக்குப் பிடித்தமானது எது?

சனிதா வில்லயம்ஸ் - “நான் என்னுடன் விரும்பி எடுத்துச் சென்றது சிறிய பிளையார் சிலையும், பகவத் கீதையும்தான்.” (தினமணி செய்தி)

ஒருவருக்கு எளிதாக இருப்பது இன்னொருவருக்குக் கடினமாக இருக்கலாம். அந்த இன்னொருவருக்கு எளிதாக இருப்பது இவருக்குக் கடினமாக இருக்கலாம்.

எந்த வழியிலும் குற்றமில்லை. அதனால் இந்த வழிதான் உயர்ந்தது இது தாழ்ந்தது என்று சொல்வது அறிவாகாது.

இறைவன் அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் அருள் புரியக் காத்திருக்கிறான்.

யாருக்கு எந்த வழியில் பிரார்த்திப்பது எளிதாக இருக்கின்றதோ, யாருக்கு எந்த வழியில் வணங்கினால் மனம் எளிதில் இறைவனிடம் லயிக்கிறதோ அவரவர் அந்தந்த வழியில் இறைவனை வழிபடலாம். அந்த சுதந்திரம் நமக்குத் தரப்பட்டிருக்கிறது.

எனவே நம் இயல்பிற்கு ஏற்ற வழியில் இறைவனை வணங்கி இறையனுபவம் பெற வேண்டுமே ஒழிய சர்ச்சைகளில் தங்கி இறைவனை இழந்து விடக்கூடாது.



(பேலூர் ஸ்ரீராமகிருஷ்ணமடம்)

# 12. அகங்காரம்

**ஆணவம்** என்பது "நான்", "எனது (என்னுடையது)" என்னும் நினைப்பு. எடுத்துக்காட்டாக, நான்தான் இந்நாட்டிலேயே மிகுந்த செல்வம் உடையவன்; அல்லது படித்தவன்; என்பது போல

அகங்காரம் என்பதற்கு விளக்கம் "செருக்கு, திமிர், மமதை" என்று அகராதியில் விளக்கம் தரப்பட்டுள்ளரது.

மலங்களுள் முதன்மையானது ஆணவ மலம். இதனால் இது மூல மலம் என்றும் அழைக்கப்படுவது உண்டு.

தமிழ் நூல்களில் இது *இருள்* என்ற பெயரிலும் வழங்கப்படுகிறது.

ஆணவம் இரு வகைகளில் உயிர்களைப் பாதிக்கின்றது. ஒன்று, உயிரின் அறிவை முற்றாக மறைத்தல்; இரண்டாவது, அவற்றின் அறிவைக் கீழ் நிலைக்குக் கொண்டு செல்வது.

உயிர்கள் உண்மையையும் பொய்யையும் பகுத்துணராது மயங்கும் நிலைக்குக் காரணம் இதுவே என்கிறது சைவசித்தாந்தம்.

ராமகிருஷ்ணர் - (டாக்டரிடம்) அகங்காரம் மறையாவிட்டால் ஞானம் உண்டாகாது.

ஒருவனிடமிருந்து "நான்" எப்போது நீங்குகிறதோ, அப்போது அவன் முக்தனாகிறான்.

"நான்", "எனது" ஆகிய இவை இரண்டும்தான் அஞ்ஞானம். "இறைவா நீ, இறைா உன்னுடையது" ஆகிய இவை இரண்டும் ஞானம்.

உண்மையான பக்தன் எவனோ அவன், இறைவா! நீதான் செய்பவன். நீதான் எல்லா வற்றையும் செய்கிறாய். நான் வெறும் கருவி மட்டுமே.

என்னை நீ எப்படி ஆட்டுவிக்கிறாயயோ அப்படி நான் ஆடுகிறேன். இவைகள் எல்லாம் உன்னுடையவை.

உன்னுடைய செல்வம். உன்னுடைய ஐசுவரியம். உலகம், வீடு, வாசல், சுற்றம் எல்லாம் உன்னுடையவை.

என்னுடையது என்று எதுவுமே இல்லை. நான் உன் அடிமை. நீ எப்படி ஆணை இடுகிறாயோ அப்படித் தொண்டு செய்வது என் கடமை" என்று சொல்வான்.

ராமகிருஷ்ணர் (சியாம்வசுவிடம்) தட்சிணேவரத்துக் காளி கோயிலில் தெருப் பெருக்குபவள் ஒருத்தி இருந்தாள், அவளுக்குத்தான் என்ன அகங்காரம்!

அவள் உடலின் மேல் இரண்டொரு நகைகள் இருந்தன. அவள் எந்த வழியாகச் சென்று கொண்டிருந்தாளோ அந்த வழியாக இரண்டு, மூன்று பேர் நடந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

அவள் அவர்களிடம், "ஏய். தூரப் போ!" என்று சொன்னாள். அவளுக்கே இவ்வளவு அகங்காரம் இருந்தால் மற்றவர்களின் அகங்காரத்தைப் பற்றி என்ன சொல்வது.?

"நான்" என்ற அகங்காரம் அழியும் போது கடவுள் தோன்றுகிறார்.

பழுத்த அகங்காரம் (நான்" என்ற எண்ணம்) என்னும் இத்தகைய அகங்காரம் பழுக்காதது.

"நான் ஆண்டவனின் அடிமை. நான் அவருடைய குழந்தை. நான் நித்திய முக்தன், எல்லாம் அறிந்தவன்" என்று நினைக்கும் அகங்காரம் பழுத்தது.

ஒருவனது அகங்காரம் அவன் உடல் இருக்கும் வரையில் அவனை விட்டு முற்றிலும் நீங்குவதில்லை. அதன் அடையாளம் சிறிதளவாவது எப்போதும் தங்கியிருக்கும்.

தென்னைமரத்தின் மட்டைகள் பழுத்து (காய்ந்து) விழுகின்றன. ஆனால் அவற்றின் வடுக்கள் மரத்தைவிட்டு அகலாமல் நிலைத்து

விடுகின்றன. அது போலவே ஒருவனுடைய அகங்காரமும் இருக்கும்.

என்றாலும் இந்தச் சிறிய அகங்காரம் முக்த புருஷர்களைக் கட்டுப்படுத்துவதில்லை.

அகங்காரத்தை “தன்முனைப்பு”என்று தமிழ்படுத்துவார் வேதாத்திரி மகரிசி. மகரிசி இந்த தன்முனைப்பை பற்றி அழகாகவும் எளிமையாகவும் விளக்குகிறார்.

“நிவர்த்தி மார்க்கம் மனிதனுக்கு உடனே வருமா என்றால் வராது.

ஏனென்றால் நீண்ட காலமாக, பல பிறவிகள் தோறும் செய்த வினையின் அழுத்தம் எல்லாம் ஒன்று சேர்ந்து மனிதனுடைய, குணநலனாக அமைந்திருப்பதனாலே.

குருவினுடைய உயிர்ச்சக்தியானது விதை போன்று அவனிடம் சிறுகச் சிறுக ஊறி, அது முதற் கொண்டு சிந்தனையோடு, செயல்புரிய, செயல் புரிய நல்லதை கெட்டதைத் தெரிந்து கொள்ள, தெரிந்து கொண்ட பின் இவைகளை எல்லாம் நாம் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று விளக்கம் பெற, அப்படி விளக்கம் பெற்ற பிறகு வாழ்க்கையிலே ஒரு பொறுப்புணர்ச்சி வருவது தான் நிவர்த்தி மார்க்கம்.

ஆணவம் , கன்மம், மாயை, இந்த மூன்றையும் அதிகரித்துக் கொண்டு போவது தான் பிரவிருத்தி மார்க்கம்.

இம்மூன்றுமே மனிதனிடமுள்ள களங்கங்கள், ஏன் இந்த ஆணவம் வந்தது? எல்லாம் வல்ல பரம்பொருள் மிகப் பெரியதல்லவா? அதுதானே மனிதனாக வந்துள்ளது?

அது உருவத்தோடு வந்து ஸ்பரிசம், சப்தம், ரூபம், ரசம், கந்தம் இந்த ஐந்தையும் கொண்டுள்ள நினைவில், உடல் வரையில் “நான்” என்று எண்ணிக் கொண்டு எல்லை கட்டி நிற்கும் போது, தன்முனைப்பையே ஆணவம், என்று சொல்கிறோம்.

தன்முனைப்பிலே இரண்டு எண்ண எழுச்சிகள் "நான்", "எனது" என்பதாக உள்ளன. "நான்" என்று சொல்லும்போதே "நான்தான் பெரியவன்.

எல்லோரும் எனக்கு அடங்கி இருக்க வேண்டும். என் சொல்படித் தான் நடக்க வேண்டும்," என்ற அதிகாரப் பற்று ஓங்கி நிற்கிறது.

அடுத்து, "எனது" . இது தான் பொருள் பற்று, உடைமைப் பற்று. பரம் பொருளானது தன்மை குறுகிப் புலன் அளவிலே, உடல் அளவிலே எல்லை கட்டியதன் காரணமாக, தனித்து நிற்கின்ற காரணத்தாலே, தனக்குக் கிடைத்ததைப் பெரிதாக எண்ணிக் கொண்டோ, அல்லது இன்னொன்றோடு தன்னை ஒத்துப் பார்த்து "பெரியது" மற்றும் "சிறியது என மாற்றம் பெறுகின்ற நிலையினை "ஆணவம்" எனச் சொல்கிறோம்.

## அவலக்குழந்தைகள் ஆறு

இந்த "நான்" – "தனது" என்ற இரண்டு எண்ண எழுச்சிகள் ஒரு விநோதமான தம்பதிகள் ஆவார்கள்.

இவர்களுக்குப் பிறக்கின்ற அவலக் குழந்தைகள் ஆறு. அவை - பேராசை, சினம், கடும் பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு - தாழ்வு மனப்பான்மை, வஞ்சம்.

இவற்றை முறையே நிறைமனம், பொறுமை, ஈகை, கற்பு, சமநோக்கு, மன்னிப்பு என்னும் நற்குணங்களாக மாற்றிக் கொள்வதே மனவளக்கலை."



## 13. சித்திகள் ஆன்மீக வாழ்க்கைக்குத் தடை

ஒரு முறை அமெரிக்க நண்பர்களுடன் வேதாத்திரி மகரிசி பேசிக் கொண்டிருந்த போது " சுவாமிஜி தாங்கள் எதாவது

சித்து செய்து காண்பிக்க முடியுமா?" என்று வேண்டுகோள் விடுத்தனர்.

"சரி செய்து காட்டுகிறேன். ஒரு ஆப்பிளும் ஒரு கத்தியும் எடுத்து வாருங்கள்"

அன்பர்கள் ஆப்பிளையும் கத்தியையும் எடுத்து வந்தார்கள். இதை வைத்துக் கொண்டு மகரிசி என்ன செய்யப் போகிறார் என்று அனைவரும் ஆச்சரியத்துடன் காத்திருந்தனர்.

மகரிசி கத்தியை எடுத்து ஆப்பிளை வெட்டினார். எல்லோர் முன்னிலையிலும் சாப்பிட்டார்.

எல்லோரும் அவர் கையையும் வாயையும் இமைக்காமல் பார்த்துக் கொண்டே இருந்தனர்.

"சுவாமிஜி! ஆப்பிள் முழுவதையும் சாப்பிட்டு விட்டீர்கள். ஆனால் சித்து எதுவும் செய்யவில்லையே?"

"நான் இப்போது சித்து தானே செய்தேன். ஆப்பிளை உடலாக மாற்றிவிட்டேன். இது எவ்வளவு பெரிய சித்து தெரியுமா?"

ஒரு பொருளை இன்னொரு பொருளின் உதவி இல்லாமல் யாரும் உண்டு பண்ணி விட முடியாது.

ஒரு நெல் மணியை மண்ணிலே போட்டு, முளைவந்து. பிறகு பயிராகிக் கதிர் வந்து, இவ்வாறு ஒரு தானியத்தை அந்தத் தானியம் தான் கொடுக்க முடியுமே தவிர, மனிதனால் முடியாது.

மடக்கி வைக்கப்பட்ட மாஞ்செடி எழுகிறது. "அங்கே" இருக்கிற பொருள் "இங்கு" வருகிறது. அவ்வளவே!

மனக்காந்தப் பயிற்சி வாக்குச் சாதுரியம், கையாட்கள் ஒத்துழைப்பு இவற்றால் வித்தை செய்து, பார்ப்பவரை வியப்புறக் காட்டிப் பணமும், பெண்டிர் நேசமும் பெறுகின்றனர்.

பிறர் கண்களுக்குத் தெரியாமல் சித்து செய்வதைப் பார்த்து அதிசியிப்பதை விடுத்து இயற்கை நடத்துகின்ற சித்துகளை கண்டு அதிசியிக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

அற்புதங்களைச் செய்து காட்டும் வல்லமை படைத்த "யோகி"களைப் பற்றி இராமகிருஷ்ணரின் சீடர்கள் கேட்டார்கள்.

"யோகசித்தியால் அற்புதம் செய்பவரைப் பற்றி தங்களுடைய கருத்து என்ன?" என்று வினவினார்கள்.

"யோகசித்தியால் வியாதியைக் குணமாக்குவதும், காரிய சித்தி பெற்றுத் தருவதும் மாந்திரீகமே அல்லது வேறில்லை.

பக்தியினால் ஏற்படுகின்ற "சக்தி" தானாகவே உண்டாகக் கூடியது. சித்திகளை அடைய வேண்டுமென்று விரும்பி காலத்தைக் கழிப்பது விணானது" என்றுரைத்த இராமகிருஷ்ணர் அதை விளக்க கதை ஒன்றை சீடர்களுக்குக் கூறினார்.

ஒருவன், பதினான்கு ஆண்டுகள் கடுந்தவம் செய்து நீரின்மீது நடக்கும் சிததியைப் பெற்றான்.

அவன் சித்தி பெற்றதைப் பற்றி தனது குருவிடம் பெருமையுடன் கூறினான்.

அதைக் கேட்ட பின்பு குரு கூறினார் "சீடனே, ஏன் இவ்வளவு உடல் வருந்தத் தவம் செய்ய வேண்டும். பதினான்கு ஆண்டுகளை வீணாக்கி விட்டாயே, நீரைக் கடந்து அக்கரை செல்ல ஓரணா காசு கொடுத்தால் போதுமே. ஓடக்காரன் உன்னைப் படகிலேற்றி அக்கரையில்கொண்டு விடுவானே. உன்னுடைய "சித்தி"யின் மதிப்பு "ஒரணா" தான் என்றாராம்.

ஆகையால் அற்புத சித்திகளை அடைய வேண்டும் என்பதற்காக, பொன்னான காலத்தை வீணாக்கக் கூடாது" என்று மொழிந்தார் இராமகிருஷ்ணர்.

இராமகிருஷ்ணரின் குருவாக இருந்து வழி காட்டியவர்களில் பைரவி பிராம்மணி என்பவரும் ஒருவர்.

பைரவி பிராம்மணிக்கு இராமகிருஷ்ணரைத் தவிரவும் சந்திரா, கிரிஜா என்ற இரண்டு ஆண் சீடர்கள் இருந்தார்கள்.

பைரவி பிராம்மணி தட்சிணேஸ்வரத்திற்கு சந்திராவையும் கிரஜாவைவும் அழைத்து வந்து இராமகிருஷ்ணருக்கு அறிமுகப்படுத்தினார்.

“சந்திரா, கிராஜா ஆகியவர்கள் இருவரும் மிகவும் உயர்ந்த நிலையைச் சேர்ந்த ஆன்மிக சாதகர்களாக இருந்தார்கள்” என்று இராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார்.

ஆன்ம சாதனையில் மிகவும் முன்னேறியிருந்தும் சந்திராவும், கிராஜாவும் இறையனுபுதி பெற முடியவில்லை.

காரணம், அவர்கள் இருவரும் சித்திகளில் நாட்டம் கொண்டு. விசேஷ சக்திகளைப் பெற்று, ஆன்மிகப் பாதையிலிருந்து தவறிவிட இருந்தார்கள்.

“சந்திரா ஒரு சிறந்த பக்தர்” என்று இராமகிருஷ்ணர் கூறினார்.

சந்திரா குளிகை - சித்தி பெற்றவர்.

மந்திர சக்தி பெற்ற அந்தக் குளிகையை அணிந்து கொண்டால், அவர் மற்றவர்களின் கண்களுக்குத் தென்படமாட்டார்.

அதனால் நுழைய முடியாத இடங்களுக்கும் அவரால் எளிதாகச் சென்று வர முடியும்.

“இறையனுபுதிக்கு முன்பு இத்தகைய சித்திகள் வாய்க்கப் பெற்றால், அற்பமனம் ஆணவ வெறி கொண்டுவிடுகிறது.

ஆணவம் மனிதனை ஆசை வலையில் சிக்க வைத்து, அவன் உயர்ந்த ஆன்மிக லட்சியத்தை நோக்கிச் செல்ல முடியாமல் செய்து விடுகிறது. இறுதியில் அவன் அழிகிறான்.

அகங்காரம் வளரும்போது நற்பண்புகள் அழிகின்றன. அகங்காரம் அழியும் போதுதான் இறையனுபுதி கிடைக்கிறது.

இந்த சித்திகள் மலத்திற்குச் சமமானவை என்று ஜகன்மாதா காளி எனக்குக் காட்டி அருளியிருக்கிறாள்.

சித்திகளில் கவனம் செலுத்தக் கூடாது. ஆன்மிக சாதனை சமயத்தில் சித்திகள் அவ்வப்போது தாமாகவே வந்து தலைநீட்டக் கூடும். அவற்றில் கவனம் செலுத்துபவன் அங்கேயே நின்றுவிடுவான்.

இறைவனை நோக்கி முன்னேறிச் செல்ல அவனால் முடியாது" - என்றெல்லாம் எத்தனையோ முறை இராமகிருஷ்ணர் தமது சீடர்களிடம் கூறியிருக்கிறார்.

## சந்திராவின் வீழ்ச்சி.

குளிகை - சித்தி பெற்றிருந்த சந்திராவிடம் அகங்காரம் மேலோங்கியிருந்தது.

அவரது மனதில் படிப்படியாக பெண்ணாசையும், பொன்னாசையும் வளர ஆரம்பித்தன.

ஒரு பணக்காரரின் மகள் மீது ஆசை கொண்டு தமது சித்தியின் உதவியால் அவள் வீட்டிற்கு சந்திரா அடிக்கடிச் சென்று வந்தார்.

நாளுக்கு நாள் அவரிடம் அகங்காரமும், சுயநலமும் அதிகரித்துக் கொண்டு சென்று, இறுதியில் இந்த சித்தி அவனைவிட்டு அகன்றது. அதன் பிறகு பலவகையான அவமானங்களுக்கும் உள்ளானார்.

கிரிஜாவின் சித்தி

கிரிஜாவிடம் இருந்த அற்புதமான ஆற்றலைப் பற்றியும் இராமகிருஷ்ணர் கூறியுள்ளார்.

ஒருமுறை கிரிஜாவுடன் சம்புமல்லிக்கின் தோட்டத்திற்குச் சென்றிருந்த இராமகிருஷ்ணர், நீண்ட நேரம் அங்கேயே பேசிக் கொண்டிருந்து விட்டார்.

அன்றைய தினம் இராமகிருஷ்ணர், சம்பமல்லிக், கிரிஜா ஆகியவர்கள் மூவரும் பேசிக் கொண்டிருந்ததில் நேரம் போனதே அவர்களுக்குத் தெரியவில்லை.

மாலை மறைந்து இருள் சூழந்த பிறகுதான், அங்கிருந்து திரும்ப வேண்டும் என்ற உணர்வு இராமகிருஷ்ணருக்கு வந்தது.

அவர் சம்மபுமல்லிக்கிடம் விடைபெற்றுக் கொண்டு. கிரிஜாவடன் காளி கோயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

அன்று கும்மிருட்டு, வழி தெரியவில்லை. அதனால் திசை தெரியாமல் இராமகிருஷ்ணர் தடுமாற வேண்டியதாயிற்று.

பேச்சில் தங்களை மறந்து முழ்கிவிட்டிருந்ததால், சம்புமல்லிக்கிடம் ஒரு விளக்கு கேட்டு வாங்கி வரவும் இராமகிருஷ்ணருக்கும், கிரிஜாவுக்கும் நினைவில்லாமல் போய்விட்டது.

இப்போது என்ன செய்வது?

எப்படியோ கிரிஜாவின் கையைப் பிடித்துக் கொண்டு இராமகிருஷ்ணர் நடக்க ஆரம்பித்தார்.

அப்போது இராமகிருஷ்ணர் சிரமம்படுதைப் பார்த்த கிரிஜா கொஞ்சம் நில்லுங்கள், உங்களுக்கு வெளிச்சம் காட்டுகிறேன்!" என்று சொல்லிவிட்டுத் திரும்பி நின்றார்.

அவர் முதுகிலிருந்து ஓர் ஒளிக்கற்றைக் கிளம்பி பாதையை ஒளி வெள்ளத்தில் ஆழ்த்தியது!

இதைப் பற்றி பிற்காலத்தில் இராமகிருஷ்ணர், “காளி கோயில் வாசல் வரையில் அந்த ஒளி பரவியது. அந்த ஒளி வெள்ளத்தில் பாதை மிகவும் தெளிவாகத் தெரிந்தது. அந்த வெளிச்சத்தில் நான் நடந்து வந்தேன்” என்று கூறினார்.

இவ்வாறு கூறிய பிறகு இராமகிருஷ்ணர் புன்சிரிப்புடன், “ஆனால் இந்த சித்திகள் அவர்களிடம் நீண்ட நாட்களுக்கு இருக்கவில்லை!” கிரிஜாவும் சந்திராவும் இதனுடன் (என்னுடன்) சிறிது காலம் வசித்தபோது அந்த சித்திகள் அவர்களிடமிருந்து அகன்றுவிட்டன” என்று தெரிவித்தார்.

# 14. பிரம்மஞானம்.....

இராமகிருஷ்ணரின் பக்தர்களில் வித்யாசாகர் குறிப்பிடத்தக்வராவார்.

வித்யாசாகர் மிகப் பெரிய படிப்பாளி. சமஸ்கிருத கல்லூரியில் படித்த காலத்தில் வகுப்பில் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார்.

படிப்படியாக உயர்ந்து சமஸ்கிருத கல்லூரியின் தலைமை ஆசரியர் பதவிக்கே உயர்ந்தவர்.

அவருக்கு சமஸ்கிருத இலக்கணத்திலும், காவியத்திலும் நல்ல பயிற்சி இருந்தது. ஆங்கிலத்திலும் புலமை இருந்தது.

"பிரம்மத்தை பற்றியும் பிரம்மஞானம் பற்றியும்" இராமகிருஷ்ணரிடம் விளக்கம் கோரினார்.

இராமகிருஷ்ணர் - "வித்யை, அவித்யை, ஞானம், அஞ்ஞானம் என்னும் இவைகளுக்கெல்லாம் அப்பாற்பட்டது பிரம்மம். பலவாகத் தோற்றமளிக்கும் மாயைக்கும் அப்பாற்பட்டது இந்த பிரம்மம்"

"விளக்கின் வெளிச்சத்தில் ஒருவன் பாகவதம் படிக்கிறான். மற்றொருவன் தருட்டுக் கையெழுத்துப் போடுகிறான். ஆனால், விளக்கு இந்த நன்மை தீமையினால் பாதிக்கப்படுவதில்லை. சூரியன் நல்லவனுக்கும் ஒளி தருகிறான். கெட்டவர்களுக்கும் ஒளி தருகிறான்.

அப்படி என்றால் துன்பம், பாவம்,வேதனை என்ற இவை இவ்வுலகில் இருக்கினறனவே! அவைகளைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள் என்று என்னை நீங்கள் கேட்லாம்.

அதற்கு விடை இதுதான். இவைகளால் பாதிக்கப்படுவன ஜீவன்களேயன்றிப் பிரம்மம் அல்ல. பிரம்மம் இவைகள் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை.

பாம்பின் வாயில் விஷம் இருக்கிறது. அந்த விஷத்தால் மற்றவர்கள் இறக்கிறார்களே யொழிய பாம்புக்கு ஒன்றும் நேர்வதில்லை. தன்னிடமுள்ள் விஷத்தினால் எந்தவிதத் தீமையும் பாம்பிற்கு உண்டாவதில்லை.

“அப்படியாயின், பிரம்மம் என்பதுதான் என்ன? இதைச் சொற்களால் விளக்க இயலாது.

உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் எச்சலாக்கபட்பட்டு விட்டன. வேதங்கள், புராணங்கள், தந்திரங்கள், ஆறு தரிசனங்கள் இவைகளெல்லாம் நாக்கால் தீண்டப்பட்டவையே.

ஆனால், ஒரு பொருள்மட்டும் எச்சிலாக்கப்படவில்லை. அதுதான் பிரம்மம். இதுவரை பிரம்மம் என்பது எது என்று யாராலும் கூறி முடிந்தபாடில்லை.

பிரம்மத்தை முழுதும் அறிந்து கொண்டதாக மனிதர்கள் அடிக்கடி நினைக்கிறார்கள்.

ஒரு முறை எறும்பு ஒன்று மலைபோல் குவிந்து கிடந்த சர்க்கரைக் குவியலிடம் சென்றது.

ஒரே ஒரு பொடி அதன் வயிற்றை நிரம்பிவிட்டது. மற்றொரு பொடியை வாயில் எடுத்துக் கொண்டு வீட்டை நோக்கித் திரும்பியது.

போகும் வழியில், “அடுத்த முறை நான் வரும் போது சர்க்கரை மலையையே வீட்டிற்குத் தூக்கி கொண்டு வந்துவிடுவேன்” என்று எண்ணிக் கொண்டது.

சாராண மனிதர்கள் அப்படித்தான் நினைக்கிறார்கள். பிரம்மம் என்பது மனம் வாக்கிற்கு அப்பாற்பட்டது என்பதை அவர்கள் அறிவதில்லை.

எவ்வளவுதான் பெரிய மகானாக இருக்கட்டுமே, பிரம்மத்தைப் பற்றி அவன் எவ்வளவு தெரிந்து கொண்டிருப்பான்.

சுகதேவர் முதலான மகத்தான ரிசிகளே. சொல்லப்போனால் சற்றுப் பெரிய கட்டெறும்பு போன்றவர்கள்தாம். அவர்களாலும் சுர்க்கரை மலையிலிருந்து அதிகப்பட்சம் எட்டு அல்லது பத்து

சர்க்கரைப் பொடிகளைத்தான் கொண்டு வர முடியுமே தவிர. முழுவதுமாக உண்ண முடியாது.

"ஆனால் வேதங்களிலும், புராணங்களிலும் பிரம்மத்தைப் பற்றிக் கூறியுள்ள அனைத்தும் எதைப் போன்றது தெரியுமா?

ஒருவன் கடலைப் பார்த்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். மற்றொருவன் "கடலை எப்படி இருக்கிறது?" என்று கேட்கிறான்.

முதல் மனிதன் தன் வாயைப் பெரிதாகத் திறந்து , "ஆ! என்னவென்று சொல்வேன்! அப்பப்பா! எவ்வளவு பெரிய அலைகள்! எப்பேர்ப்பட்ட பயங்கர ஓசை" என்று சொல்வான்.

சாஸ்திரங்களில் பிரம்மத்தைப் பற்றிச் சொல்லி இருப்பதெல்லாம் இதுதான். வேதங்கள், பிரம்மம் ஆனந்தமயம் என்று கூறுகின்றன. அதாவது பிரம்மம் சச்திதானந்த ரூபம் என்று கூறப்படுகிறது.

"சமாதியில் பிரம்ம ஞானம் ஏற்படுகிறது. ஒருவர் பிரம்ம ஞானத்தை அனுபவிக்கிறார். அந்த நிலையில் அவர் சிந்தனை நின்று போய்விடுகிறது. ஊமையாகி விடுகிறார். பிரம்மத்தை விளக்கிக்கூறும் ஆற்றல் அவருக்கு வருவதே இல்லை.

சங்கராச்சாரியார் பிரம்ம ஞானம் அடைந்த பின்னரும் மக்களுக்கு உபதேசம் செய்ய வேண்டி ஞான ஆணவமான "நான்" என்பதை தன்னிடம் வைத்திருந்தார்.

பிரம்மஞானம் அடைந்த பிறகு மனிதன் மௌனியாகி விடுகிறான். அதை அடையாத வரையில்தான் பெரிய பெரிய வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருப்பான்.

"பழங்கால ரிஸிகள் பிரம்ம ஞானத்தை அடைந்திருந்தனர். மிகமிகச் சின்னஞ்சிறு உலக ஆசைகள் மனத்தில் இருந்தாலும் பிரம்ம ஞானத்தைப் பெறமுடியாது." (அமுதமொழிகள் பாகம்1-பக்107)

# வேதாத்திரி மகரிசி

பிரம்மத்தை உணர்ந்த அறிந்த ஞானிகள் அதைப் பற்றி எடுத்துரைக்க அவர்களுக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை. ஒன்றிய நிலையில் பேசமுடியவில்லை.

ஒரளவு விளக்குவதற்கும் அதற்கான விஞ்ஞான சாதனங்கள் அக்காலத்தில் இல்லை. ஓரளவு வார்த்தைகளில் வடிக்க முடியவில்லை. ஓரளவு வார்த்தைகளில் வடிக்க முற்பட்டபோது அதை மற்றவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை.

இது நவீன கம்யூட்டர் காலம். சிந்தனைவாதிகள் மிகுந்த காலம். பிரம்மத்தை, பிரம்மஞானத்தை சாதாரண பாமரனும் உணரும்படி செய்தவர் வேதாத்திரி மகரிசி.

"பிரம்மஞானம்" "பிரம்மம்" என்பது என்ன என்று விளக்கியதோடு மட்டுமல்ல, அதை பாடமாக்கி பல்கலைக்கழகங்களிலும் கொண்டு சென்றுவிட்டார்.

"பிரம்மஞானத்தை உணர்ந்து அதனைப் புத்தகத்தில் பதிந்து " பேசுகிறார் வேதாத்திரி மகரிசி.. . . . .

"மாபெரும் அருட்பேராற்றலாக அமர்ந்திருக்கும் எல்லையற்ற பெருவெளியெ பிரம்மம் எனும் தெய்வநிலை.

இதன் உள்ளடக்கத் தன்மைகள் - பூரணம், விரைவு, அறிவு என்ற மூன்று பிரிக்க முடியாத தன்மைகள் ஆம். இது தன் தெய்வீக ஆற்றல்களான பரிணாமம், இயல்புக்கம், கூர்தலறம் எனும் முத்திறன்களாக மலர்ந்து ஒழுங்கமைப்போடு இயங்கிக் கொண்டிருக்கும்.

பேரியக்க மண்டலமான நந்தவனத்தில் இறுதியாகப் பூத்த மலர்களே மனித குலம்.

இறைவெளியிலிருந்து மனித மனம் வரையிலான பிரம்ம நிலையின் சரித்திரத்தை உணர்ந்து நிறைவுபெறும் அறிவே பிரம்ம ஞானம் ஆகும்.

மனிதப் பிறவியின் முழுமைப் பேறான பிரம்ம ஞானத்தை அடைந்து உய்ய வேண்டும் என்ற பெருநோக்கோடு ஆர்வமுடன் படிக்கும் அன்பர்களுக்கு இந்த மதிப்புமிக்க தத்துவ நூலான "பிரம்ம ஞான மறையை" மதிப்போடும் அன்போடும் அர்ப்பணித்து நிறைவு பெறுகிறேன்." அருள்தொண்டன், வேதாத்திரி.

ஆதிசங்கரர், திருமூலர், வள்ளுவர், வள்ளலார் கண்ட அத்வைதத்தின் அற்புத விளக்கமாகவும், நியூட்டன், ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன், ஸ்டீபன் உறாக்கின்ஸ் போன்ற விஞ்ஞான மேதைகளால், தொடங்கப்பட்டு, ஆனால் தெளிவு பெற முடியாத சில விஞ்ஞானக் கோட்பாடுகளின் தெளிவுரையாகவும் மகரிசியின் "பிரம்மஞானம்" அமைகிறது.

"மெய்ஞ்ஞானமும், விஞ்ஞானமும் கலந்த ஞானக் கலவையே இந்தப் பிரம்மஞானம். 

இயற்கை, இருப்பு நிலையிலிருந்து இயக்க நிலைக்கு வந்த பரிணாமத்தைப் பற்றிய சரித்திரமே இந்த நூல்.

ஒரு சாயலில, இது விஞ்ஞானப் புர்வமான மெய்ஞ்ஞானம், மற்றொரு சாயலில் இது மெய்ஞ்ஞானம் புசிய விஞ்ஞானம்.

"மெய்பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர். யோகப் பயிற்சியினாலும். தியானப் பயிற்சியினாலும் அக அறிவு, புறத்தே

உள்ள பரஅறிவோடு ஒன்றித்து, அந்த ஒன்றித்த விளைவறிந்த விழிப்பு நிலையான சமாதி நிலையில், தாம் கண்ட அகக் காட்சிகளை மகரிசி அவர்கள் இந்த பிரம்மாஞானத்தில் தந்திருக்கிறார்கள்.

“உய்வதனைத்திலும் ஒன்றாய்-எங்கும்

ஓர் பொருளானது தெய்வம்”

என்றார் பாரதியார். அந்த ஓர் பொருளான , இருப்பு நிலையான அந்த இறைவெளியைப் பற்றிய விளக்கமே மகரிசியின் பிரம்மஞானம்.

மகரிசியின் பிரம்மஞானம் என்ற நூல், மெய்ஞ்ஞானத்திற்கு தத்துவ விளக்கமாகவும், விஞ்ஞானத்திற்கு வழிகாட்டியாகவும் அமைந்திருப்பதோடு. பாமரமக்களுக்கும் எளிமையாக அமைந்திருப்பது இதன் தனிச்சிறப்பாகும்.

இங்கு, ஸ்டீபன் உறாக்கின்ஸ் உடைய கீழ்க்காணும் வாசகம் நினைவு கூறத்தக்கதாகும்.

- However, if we do discover a complete theory. It should in time be understandable in broad principle by everyone, not just a few scientists. Then we shall all, philosophers, scientists, and just ordinary people, be able to take part in the discussion of the question of why it is that we and the univers exist. If we find the answer to that, it would be the ultimate triumph of human reason - for then we would know the mind of God

Ultimate Triumph”

என்று சொல்லக் கூடிய அந்த இறுதி வெற்றியை நோக்கி மனித குலத்தின் பயணம் ஆரம்பமாகி விட்டது.

அதற்கு சாட்சியே இந்த பிரம்மஞானம்.

# 15. ஞான வள்ளல்கள்.

ஆன்ம முன்னேற்றத்தின் வாயில், மையம் எல்லாமே மனம் தான்!. இந்த மனம் மாசில்லாதிருத்தல் ஆத்ம சாதனையின் முதற்படி.

“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற”

ஆனமாவிற்கு எங்கிருந்து தூய்மைக் கேடு வருகிறது? தூய்மைக்கேடு முதலில் புலன்களால், ஆணவத்தின் விளைவால் வரும்.

"நான்" என்ற தன்முனைப்பு, புறத்தேயிருந்து பொறிகள் வாயிலாக வரும் தீமை. இவற்றால் தூய்மைக் கேடு வருகிறது. இந்தத் தூய்மைக் கேட்டினை

"அழுக்காறு, அவா வெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்ற தறம்"

என்று வள்ளுவர் முறைப்படுத்தி கூறுகிறார்.

மார்க்கஸ் அரேலியஸ் என்ற சிந்தனையாளன்,

- "நான் வீதி வழpயே செல்லும்பொழுது வீதியின் புழுதியால் உடலில் அழுக்குப் படிகிறது. உடல் தூய்மைக்கேடு அடைகிறது. ஆன்மாவும் மனமும் வீதியில் பார்த்த பொருள்களின்மீது தோன்றிய ஆசையால் தூய்மைக்கேடு அடைகின்றன."

என்றான்.

"நான்" என்னும் ஆன்மாவைப் பற்றிய தூய்மைக்கேடும், "எனது" என்னும் உடைமை பற்றிய தூய்மைக்கேடும் அவை தொடர்புடையனவும் மாசுகளாகும்.

"யான் என தென்னும் செருகறுப்பான் வானோர்க்

குயர்ந்த உலகம் புகும்."

என்று மீண்டும் திருக்குறள் கூறும். ஆன்மிகச் சிந்தனைகளுக்கு நாடு, மொழி, எல்லையில்லை.

இந்தத் திருக்குறள் சிந்தனை அப்படியே இராமகிருஷ்ணர் மற்றும் வேதாத்திரி மகரிசி ஆகியவர்களின் உபதேசத்தில் அமைந்தருப்பது படித்ததும் அனுபவித்தும் மகிழ, புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

- மனதில் படிந்திருக்கும் மாசுகளெல்லாம் அகன்று போகும்பொழுது ஈசுவர அனுபுதி கிட்டுகிறது,"

என்பது இராமகிருஷ்ணரின் வாக்கு.

வேதாத்திரி மகரிசியும் மனத்தூய்மையின் அவசியத்தை வலியுறுத்துகிறார்........

- மனம் ஒரு மாயக் காந்தம். மனம் தூய்மை அடைந்தால் அந்த விநாடியே இறையுணர்வு கிட்டும்.
- மனம் தூய்மையில் பூரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதே முழுமைப்பேறு.

அவர்கள் உயர்ந்த ஞானச் சிந்தனைகளையும் அனுபூதி சார்ந்த அனுபவங்களையும் எளிய உவமைகள் மூலம் விளக்குவதில் புகழ் பெற்றவர்கள்.

ஒரு இரும்பு ஊசி! ஆனால், இரும்பு ஊசியை களிமண் மூடி இருக்கிறது.! அதனால், காந்தத்தால் இரும்பு ஊசியை இழுக்க, எடுக்க முடியவில்லை!.

காந்தத்தால் கவரத் தக்கது இரும்பு ஊசியேயானாலும் அந்த ஊசி, மண்ணால் மூடப்பட்டுக் கிடப்பில் கிடந்தால காந்தத்தால் கவர்ச்சிக்கப்பட மாட்டாது.

இரும்பு மட்டுமே காந்தத்தால் கவரத்தக்கது. இழுக்கப்படும் இரும்பு ஊசியைக் களிமண் மூடியிருப்பதால் காந்தத்தால் இழுக்க முடியவில்லை!

“இரும்பு ஊசியை மூடியுள்ள களிமண்ணை, மாசினை அகற்றினால் காந்தத்தால் ஊசி கவரப்படும்.

அதுபோல ஆன்மாவின் மாசுகளை , மனதிலுள்ள மாசுகள அருள்தாக மெடுத்ததுச் சிந்துகின்ற கண்ணீர் கழுவிக் கொண்டு போகிறது.

அதன்பின் அந்த ஆன்மாவில் ஈசுநுவரானுபதி தங்குகிறது. ஒளி வீசுகிறது.” என்று இராமகிருஷ்ணர் அருளிச் செய்கிறார்.

ஆன்மா என்ற நமது கருமையத்தை தூய்மை செய்ய வேதாத்திரி மகரிசி வழிமுறைகளையும் மானுடத்திற்கு எளிமையாகத் தந்துள்ளார்கள்.

1. பெற்றவர்கள், குரு, ஆட்சித்தலைவர், தெய்வம் இவர்களை மதித்து வாழ்தல்.

2) ஒழுக்கம் கடமை ஈகை மூன்றும் இணைந்த அறநெறியை பின்பற்றுதல்.

3) அகத்தவப் பயிற்சியை முறையாகச் செய்து வருதல்.

4) இரத்தம், காற்று, உயிர், சீவகாந்தம் இவை தடையின்றி ஓடி உடலைக் காத்துக் கொள்ள ஏற்ற உடற்பயிற்சிகளை அளவோடு செய்து வருதல்.

5) பெற்றோர்கள், வாழ்க்கைத் துணைவர், பெற்ற குழந்தைகள் இவர்களை பொறுப்போடும் அக்கரையோடும் காத்து உதவி வருதல்.

6) இறைநிலை உணர்ந்து அந்நிலையோடு அடிக்கடி ஒன்றி பழகுதல்.

7) மனித முயற்சியால் உற்பத்தி செய்த பொருட்களையும் இயற்கை வளத்தையும், பிறர் உபயோகிக்கும் பொருட்களையும் சேதப்படுத்தாது மதித்து நடத்தல்.

8) நாம் பார்க்கும் ஒவ்வொரு உடலும் இயற்கை என்ற பேராற்றலால் கட்டப்பட்டிருக்கும் பெருமையை உணர்ந்து உடலுக்குள் அறிவாக விளங்குவது தெய்வத்தின் ஒளியே என்று மதித்து ஒத்தும் உதவியும் வாழ்ந்து வருதல்.

9) உள்ளத்தில் பகை வஞ்சம் எதையும் வைத்துக் கொள்ளாமல் மன்னிப்பும், கருணையும் கொண்டு எல்லோருடனும் இன்முகத்தோடும் அன்போடும் பழகுதல்.

10) தேசம், மதம், சாதி, இனம், மொழி இவற்றால் மனிதரை வேறுபடுத்திக் காணாமல் எல்லோரும் இயற்கையின் மக்கள் என்ற நினைவில் வாழ்தல்.

"கருமையம்" இறைநிலையின் பிரபஞ்ச பரிணாமச் சரித்திரம் முழுமையாக அடக்கம் பெற்றுள்ள தெய்வீகப் பெட்டகம்.

காந்த ஆற்றலின் திணிவு பெற்ற பிரபஞ்சப் பிரதிபலிப்பு கண்ணாடி.

'கருமையம்' தான் சீவ இனங்களில் 'ஆன்மா' எனப்படுகிறது. கல்வியறிவு பெறாதவர்களும், சிந்திக்கும் திறம் குறைந்தவர்களும் கூடக் கருமையத் தூய்மை பெறுவதற்கு எளியவழி உண்டு

இது போன்ற ஞானானுபவத்தைத் திருவாசகமும் கூறுகிறது. ஆன்மா தன்னைச் சார்ந்துள்ள் மாசுகளை, பொய்களை அறவே அகற்றிக் கொள்ள அழுதல் வேண்டும்.

"யானே பொய். என் நெஞ்சும்

பொய். என் அன்பும் பொய்.

ஆனால் வினையேன் அழுதால்

உன்னைப் பெறலாமே. தேனே

அமுதே கரும்பின் தெளிவே

தித்திக்கும் மானே அருளாய்

அடியேன் உனைவந் துறுமாறே!"

என்பது திருவாசகம்.

ஆன்மாவை, ஆன்மாவின் மனதைக் கழுவிச் சபலம் இல்லாத துணிவும் தூய்மை உடையதாக ஆக்குதல் வேண்டும். ஆன்மா தூய்மையும் துணிவுமுடைய ஆன்மா இரும்பாக விடுகிறது!.

ஆன்மா இரும்பனையதாக, சாதனையால் வலிமையுடையதான நிலையில் இறையருள் காந்தமாகி ஆன்மாவை ஈர்த்து ஈர்த்து அணைத்துத் தன் ஆனந்த வெள்ளத்தில் திளைத்தின்புறச் செய்கிறது.

"இரும்புதரு மனத்தேனை

ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்

கரும்புதரு சுவை எனக்குக்

காட்டினையுன் கழலிணைகள்

ஒருங்குதிரை உலவுசடை

உடையானே"

என்பதும் திருவாசகம்.

இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் பல தலைமுறைகளின் ஞான அனுபவத்தை நமக்கு எளிமையாக வழங்கி எடுத்தாண்டு- ஞானகுருவாக விளங்குகிறார்கள்.

உயர்ந்த தத்துவங்களையம் அனுபுதி அனுபவங்களையும் எளிமையாக விளக்குவதில் இராமகிருஷ்ணருக்கும் வேதாத்திரி மகரிசிக்கும ஈடு யாரும் இல்லை.

# 16. பொன்னும் மண்ணும்.

**கங்கை** இந்தியாவின் முக்கிய ஆறாகும்.கங்கை இந்தியாவின் தேசிய நதி ஆகும்.

இமய மலையில் உத்தராகண்டம் மாநிலத்திலுள்ள கங்கோத்ரியில் தொடங்கும் பாகிரதி நதியானது, தேவப்பிரயாக் எனுமிடத்தில் அலக்நந்தா ஆற்றுடன் கலந்து கங்கையாகிறது.

பிறகு உத்தரப் பிரதேசம், பீகார் ஆகிய மாநிலங்கள் வழியாகச் சென்று, ஹூக்லி, பத்மா என இரு ஆறுகளாக பிரிந்து முறையே மேற்கு வங்காளம், வங்கதேசம் வழியாகச் சென்று மிகப்பெரிய வளமான கழிமுகத்தை உருவாக்கி வங்காள விரிகுடாவில் கலக்கிறது.

கங்கை ஆறு மொத்தம் 2525 கி.மீ ஓடுகிறது. ரிஷிகேஷ், ஹரித்வார், அலகாபாத், வாரணாசி, பாட்னா, கொல்கத்தா ஆகியவை இவ்வாற்றின் கரையில் அமைந்த முக்கிய நகரங்களாகும்.

வங்கதேசத்தில் கங்கையானது பத்மா என அழைக்கப்படுகிறது.

கங்கை இந்துகளின் புனித நதியாக திகழ்கிறது. இது இந்து மத கடவுள் கங்கா எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்த நதியினை சார்ந்து மனிதன் உட்பட பல்லாயிரக்கணக்கான உயிர்கள் வாழ்கின்றன.

கங்கை நதி எப்போதும் போல் பிரவாகத்துடன் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது. இராமகிருஷ்ணருக்கு கங்கை நதியையும் அதன் பிரவாக ஓட்டத்தையும் கண்டு மகிழ்வதில் தனி இன்பம் உண்டு.

கங்கை அவரது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்திருந்தது. கங்கைக் கரைக்குச் செல்வதும் கங்கா மாதாவை நினைந்துருகுவதும் அவருக்கு வழக்கமான ஒரு பவித்ரச் செயலாகும்.

அகன்ற கங்கை கரைக்குச் சென்ற இராமகிருஷ்ணர் ஒரு கையில் பணம் வைத்தருந்தார். மறுகையில் மண்ணை எடுத்து வைத்துக் கொண்டார். கங்கையின் ஜீவஓட்டத்தில் தம்மையே மறந்தவராக நின்று கொண்டபடியே இருந்தார்.

ஒரு கையில்பணம், மறுகையில் மண். பொன்னும் மண்ணும் கரங்களில் ஏந்திய வண்ணம் நின்ற அவர். இரண்டையும் கங்கையில் வீசி எறிந்தார். பணத்தாசையை வென்றவராக காட்சி தந்தார்.

அதற்குப் பின்னர். அவருக்கு பணத்தைத் தொட்டாலே, தேள் கொட்டியது போன்ற வலி ஏற்படலாயிற்று.

கங்கைக் கரையிலிருந்து கம்பிரமாக நடந்து வந்து கொண்டிருந்த இராமகிருஷ்ணரை பலரும் அதிசயப்பார்வையுடன் நோக்கினார்கள்.

ஒரு சமயம் நரேந்திரர், இராமகிருஷ்ணர் படுக்கையடியில் குருதேவருக்குத் தெரியாமல் ஒரு நாணயத்தை மறைந்து வைத்தார்.

இதை அறியாத குருதேவர், படுக்கையில் உட்காரப் போனால். அவர் படுக்கையில் உட்கார்ந்தாரோ இல்லையோ, நாணயத்தின் ஸ்பரிசம் அவருக்குத் தேள் கொட்டியது போல் இருக்கவே பதறி எழுந்தார்.

உடனிருந்த ஓர் அன்பர் படுக்கையை எடுத்து உதறினார். நாணயம் வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

தம்மை சோதிக்க நரேந்திரர் செய்த காரியம் இது என்பது தெரிந்து இராமகிருஷ்ணர் பரம சந்தோஷம் அடைந்தார்.

பணத்தின் மீது பற்று வைத்தால் அது ஆத்மாஞானத்தைத் தடைப்படுத்தும் என்று உபதேசித்தார். உபதேசித்தப்படியே வாழ்ந்து காட்டினார்.

வேதாத்திரி மகரிசியும் தனது வாழ்நாளில் பிற்பகுதியில் தனது கையால் பணத்தை தொடாமலேயே வாழ்ந்தார்கள்.

பண ஆசையே ஒழிக்கத் தகுந்தது எனக் கூறுகிறார் வேதாத்திரி மகரிசி.

"மண், பெண், பொன் மூன்றாசை மனிதர்தம்மை

மதிமயக்கி, துன்பங்கள் விளைக்கும் என்பார்.

பெண் இல்லையெனில் பேசும் நீயே ஏது?

பிறந்தவர்கள் இறக்கும் மட்டும் வாழ்வதற்கு

உண்ணும் உணவும், உலக இடமும்-இந்த

உலகம் என்ற மண் இன்றேல்-உனக்கு ஏது?

எண்ணத்தால் எழுப்பிவிட்ட பணம் ஒன்றேதான்

இயற்கைக்க முரண். அதனால் அதை ஒழிப்போம்."

மண்ணாசை, பெண் ஆசை, பொன் ஆசை என்ற இம்மூன்று ஆசைகளையும் ஒழிப்பதுதான் ஆன்மீகம் என்பது தவறான கருத்து ஆகும்.

பெண் இல்லை என்றால் பெண் ஆசையை ஒழிக்க வேண்டும் என்று கூறுகின்ற ஆண் மகன் பிறந்தே இருக்க மாட்டான்.

ஆணோ, பெண்ணோ பிறகு தோன்றவும் முடியாது. வாழ்க்கை வளங்களைத் தருவது மண் .

அப்படி இருக்கும் போது வாழ்க்கை வளங்களை அனுபவித்துக் கொண்டு மண் ஆசையை எப்படி ஒழிக்க முடியும்?

இந்த இரண்டு ஆசைகளும் இயற்கையானவை. பின்னால் வந்த பணத்தாசையை மட்டுமென்றால், ஒழித்து நலம் காணலாம்.

ஏனெனில் பணத்தாசை மனித இனப்பண்பாட்டில் மிகவும் பின்னால் தோன்றியது. தீமை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

குடும்ப வாழ்வில் இருந்து முழுமையான துறவு மேற்கொண்ட மகரிசி பணத்தின் மீதும் துறவு புண்டார்கள். தனது கையால் பணத்தை தொடாமலேயே வாழ்ந்தார்கள். பணத்தை ஒழிக்கும் வழி பற்றி......

"ஒருவரோ சிலபேரா முனைந்து நின்று

ஒழித்துவிட முடியாது பணத்தை இன்று.

பெருமதிப்புப் பெற்றதிது மனிதராலே

பேருலக மக்கள் கூடி ஒழிக்க வேண்டும்.

வருங்கால மக்களுக்கு வாழ்வதற்கு

வாணிபமோ பணமோ இவ்வரண்டும் வேண்டாம்.

பொருள்களே போதும். அவை உழைப்பால் பெற்று,

பொதுவாக நிரவி அனுபவிப்போம் கூட்டாய்."

பொன் வேண்டாம் என்று தலைப்பில் “உலக சமாதானம்”பாடல் எண்.163 ல் வேதாத்திரி மகரிசி தனது கருத்தை அழுத்தமாக பதிவு செய்துள்ளார்கள்.

பொன் என்ற உலோகம் மனித வாழ்க்கையில் எந்தவிதமான பயனும் அளிப்பதில்லை.

அதைப் பூமியிலிருந்து எடுக்க, சுத்தம் செய்ய. நகைகள் செய்ய, வியாபாரம் செய்ய எண்ணிறந்த மக்களின் உடல் சக்தியும், அறிவுச் சக்தியும் வீணாகின்றன.

மேலும் மனிதனை மனிதன் இம்சிக்கப் பலவிதமான சூழ்நிலைகளும் இந்த தங்கத்தால் உருவாகிறது.

“பொன் என்ற உலேகத்தைஎவரும் எங்கும்
புவுலகில் அணிகலனாய்க் கொள்ளமாட்டார்.
மின்என்று காணுமதில் ஆசைகொண்டு
மேதினியில் மக்கள் எல்லாம் பட்டதுன்பம்
என்னென்று சொல்வதென்ன, இன்னாள் மக்கள்
இயல்பான அறிவுநிலை பற்றிப் பேசி,
அன்றுள்ள மக்கள் ஆராய்ச்சி மன்றம்
அனைவருக்கும் சரித்திரமாய் எடுத்துக்காட்டும்.”

இரும்பால் செய்த ஒரு சிறு ஆணிகூட, எத்தனையோ காலத்திற்கு மரங்களை இணைத்துப் பிடித்துக் கொண்டு இருக்கிறது. மனித வாழ்வில் பயன் தருகிறது.

ஆனால் பொன்னால் மனித சமூகத்திற்குப் பல வயிலும் துன்பமே தவிர, எந்தவித நற்பயனும் இல்லை.

உடல் சக்தி நன் முறையில் பயன்படவும், அவை வீணாவதைத் தடுக்கவும் வேண்டுமெனில், பொன் என்ற உலோகம் மனிதனுக்குத் தேவையில்லை. அதை மனிதர்கள் வைத்திருக்கவோ, உபயோகிக்கவோ மாட்டார்கள்.

அதில் உள்ள மினுமினுப்பால் கவரப்பட்டு மனிதர்கள் அக்காலத்தில், பலவிதமானத் துன்பங்களை அடைந்தார்களாம் என்று வருங்கால மக்களின் ஆராய்ச்சி மன்றத்தில் பேசம் அளவுக்கு ஒரு சரித்திரக் குறிப்பாகவே மாறிவிடும்.



# 17. ஏட்டுக்கல்வி

“கடவுளைக் காட்டமுடியாத கல்வி எனக்குத் தேவையில்லை” என்று பள்ளிக்கூடம் போகதவர் இராமகிருஷ்ணர். ஏட்டுக்கல்வியைப் பற்றி கூறுகிறார். . . . . . . . .

“எந்த அறிவைப் பெற்றால் இறைவனை அடையலாமோ அதுதான் மெய்யறிவு. பிற எல்லாம் வீணே.”

“ஆயிரக்கணக்கான புத்தகங்களை ஒருவன் படித்திருக்கலாம். இறைவனிடம் பக்தி உண்டாகாவிட்டால் எல்லாம் வீண்தான். விவேக வைராக்கியம் இல்லையெனில் அவன் வெறும பண்டிதன் மட்டும்தான்.

இப்படிப்பட்ட வெற்றுப் பண்டிதனின் மனம் பெண்-பொன் இவற்றில்தான் நாட்டம்கொள்ளும்.

கழுகு உயரப் பறக்கும் இருந்தும், அதன் நோக்கமெல்லாம் தரையில் விழுந்து கிடக்கும்அழுகிய மாமிசத் துண்டின் மேல்தான் இருக்கும்."

"ஞானத்ததைப் பற்றி எவ்வளவோ பேசுகின்ற பண்டிதர்கள் பலர் உள்ளனர். எல்லாம் வெறும் வாய்ப்பேச்சுத்தான். செயலில் ஒன்றும் இல்லை.

கழுகு வெகு உயரத்தில்தான் பறக்கிறது. ஆனால் அதனுடைய பார்வை கீழே அழுகிய பிணங்களின்மீதே உள்ளது.

அதாவது இவர்களுக்குக் காமினி, காஞ்சதனத்தின் மீதுதான் பார்வை. உலக வாழ்வில்தான் பற்று.

எந்தப் பண்டிதராவது விவேக வைராக்கியத்தோடு வாழ்கிறார் என்று அறிவேனாயின் அவரிடத்து எனக்கு மதிப்புப் பிறக்கும். அவ்விதம் இல்லையெனில் அவர்களை ஆடு. நாய் போல விலங்குகளாகவே கருதுவேன்.- - - -

"வெறும் நூலறிவு ஒன்றுக்கும் உதவாது. இசைக்கருவி வாசிப்பது பற்றி மக்கள் வக்கணையாக வாயினால் பேசலாம்.

ஆனால் அதைக் கையில் எடுத்து வாசித்துக் காட்டுவதற்கு மிகவும் திறமை வேண்டும்.

மிக உயர்ந்த தத்துவங்களைக் குறித்துப் பேசுவது சுலபம். ஆனால் அந்தத் தத்துவங்களை நடைமுறையில் கொண்டு வருவது மிகவும் கடினமானது."

"வெறும் படிப்பினால் என்ன பிரயோஜனம்? சாதனை செய்ய வேண்டும். தவம் பழக வேண்டும். இறைவனைக் கூவிக் கூவி அழைக்க வேண்டும்.

"சித்தி, சித்தி"என்று சொன்னால் மட்டும் பயனில்லை அப்பானகத்தைச் சிறிதேனும் பருகவேண்டும்?"

"சாத்திரத்தின் மூலம் இறைவனை அடைய முடியாது. சாத்திரம் படிப்பதால் " இறைவன் இருக்கிறான்" என்ற உணர்வு ஏற்படுகிறது. அவ்வளவே.

இறைவனைக் காணவேண்டும் என்ற தீவிர வெறியை நாம் கொள்ளாவிட்டால், அதில் மூழ்காவிட்டால் அவன் காட்சி அளிக்க மாட்டான். மூழ்கிய பிறகு இறைவனே நமக்கு அறிவைத் தருவான். சந்தேகங்கள் அகலும்."

"ஆயிரம் நூல்களைப் படிக்கலாம். ஆயிரக்கணக்கான சுலோகங்களை வாயினால் சொல்லலாம். அவனைக் காண ஏங்கி அவனுக்குள் மூழ்காவிட்டால் அவனை அடைய முடியாது. வெறும் புலமையினால் மனிதர்களை மயக்க முடியுமே தவிர இறைவனை அடைய முடியாது."

"சாத்திரங்கள், நூல்கள்தானம் என்ன செய்யும்? அவனுடைய அருள் இல்லாவிட்டால் ஒன்றும் பயனில்லை. எதனால் அவனுடைய அருள் கிட்டுமோ, அதற்காக ஏங்கிப் பாடு படு. அருள் உண்டானால் அவனுடைய காட்சி கிடைக்கும். அவன் உங்களுடன் பேசுவான்."

"எவ்வளவுதான் சாத்திரங்கள் படிப்பாய்? வெறும் ஆராய்ச்சி செய்வதால் என்ன பயன்? முதலில் அவனை அடையப் பாடுபடு. குரு வார்த்தையில் நம்பிக்கை வைத்துச் சிறிது செயல்படு. "குரு கிடைக்காவிட்டால் கடவுளிடம் ஏங்கிப் பிரார்த்தனை செய். தான் எத்தகையவன் என்பதை அவனே அறிவிப்பான்."

"சாத்திரத்தைப் படித்து என்ன தெரிந்து கொள்வாய்? சந்தைக்குள் போகாமல் தொலைவில் இருக்கும் வரை "கோ,கோ" என்ற வெறும் இரைச்சல்தான் கேட்கிறது."

"சந்தையை அடைந்து விட்டால் வெவ்வேறு விதமான ஒலிகள் கேட்கின்றன. அப்பொழுது எல்லாவற்றையும் தெளிவாகப் பார்க்க முடியும், கேட்க முடியும். "உருளைக்கிழங்கை எடுத்துக் கொள், பைசா கொடு" என்றெல்லாம் தெளிவாக ஓசை கேட்கிறது."

கடல் தூரத்தில் இருக்கும்போது “ஓ ஓ ஓ” என்று ஓசை கேட்கிறது. அருகில் சென்றால் அதன்மேல் பல கப்பல்கள் போவதையும், பறவைகள் பறப்பதையும், அலைகள் ஓயாமல் வீசுவதையும் பார்க்கலாம். “

“ புத்தகம் படிப்பதால் மட்டும் இறை அனுபவம் கிடைப்பதில்லை. படிப்புக்கும் அனுபவத்துக்கும் வெகு தூரம்.

இறைவனைக் கண்ட பிறகு புத்தகம், சாத்திரம், விஞ்ஞானம் இவைகளெல்லாம் வெறும் வைக்கோல் குப்பை என்ற உணர்வு ஏற்படும்.”

கல்வி என்றால் என்ன? விடையாக வருகிறார் மகரிசி.

கல்வி என்றால், அதில் நான்கு அங்கங்கள் இருக்க வேண்டும்.

1. எழுத்தறிவு
2. தொழிலறிவு
3. இயற்கைத் தத்துவ அறிவு
4. ஒழுக்க பழக்கங்கள்

இந்த நான்கு உறுப்புகளைக் கொண்டதே முழுமையான கல்வியாகும்.

இத்தகைய கல்வியைப் பெற்றுத் தங்களைச் சிறப்பான ஒளி மிக்க வாழ்விற்குத் தகுதியாக்கிக் கொள்ளும் பயிற்சியே இளமை நோன்பாகும்.

இத்தகைய கல்விதான் வேண்டும் என்பதை வேதாத்திரி மகரிசி உபதேசம் செய்ததோடு நிறுத்தவில்லை. செயலிலும் செய்து காட்டியுள்ளார்கள்.

ஆம். மெய்விளக்க கல்வியை மனவளக்கலையாக்கி அதனை பள்ளி, கல்லூரிகளில் பாடங்களாக கொண்டு சென்றுள்ளார்கள.

சுமார் 15க்கு மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் (இராமகிருஷ்ணர் விரும்பிய கல்வியை ) பட்டயப்படிப்பு, பட்டபடிப்பு, பட்டமேற்படிப்பு, ஆராய்ச்சி படிப்பு என்று தற்போது மாணவர்கள் ஆர்வத்ததுடன் பயின்றுவருகின்றன.



# 18. மாயை.

வேதாந்ததில் மாயை என்றொரு வார்த்தையை அடிக்கடி சொல்வதுண்டு.

" மாயை என்றால் என்ன? மயக்கம் என்று சாதரணமாகத் பொருள் கொள்ளலாம். உள்ளததை சாதாரணமாகத் தெரிந்து கொள்ளாத கற்பனையிலேயே இருப்பது மாயை." என்பது வேதாத்திரி மகரிசியின் விளக்கமாகும். மகரிசி மேலும் கூறுகிறார்.

உதாரணமாக நாம் இங்கே உட்கார்ந்து ஒரு மணி நேரம் ஆகிவிட்டது. முன்பு இருந்த இடத்திலிருந்து இந்த உலகம் ஆயிரம் மைல் நகர்ந்து சென்று விட்டது.

ஆனால் நாம் உட்கார்ந்த இடத்திலேயே அப்படியே இருப்பதாக நினைக்கிறோம். இதுதான் மாயை.

இன்னொரு உதாரணம் கூட கொள்ளலாம். பழம் என்பது அணுக்களால் ஆகிய கூட்டு. ஒவ்வொரு அணுவுக்கும் இடைவெளி இருக்கிறது.

அணு என்றால் சுழற்சி உண்டு. ஆனாலும் அதற்கு இடையில் உள்ள இடைவெளி நமக்குத் தெரிவதில்லை. அதனால் அது அப்படியே கெட்டிப் பொருளாக இருக்கிறது என்று நினைகிறோம். இதுதான் மாயை.

பழத்தை நன்றாக எரியும் நெருப்பில் போட்டால் ஒரு நிமிடத்தில் பொலபொலவென்று சாம்பலாகி விடும். ஒவ்வொரு

அணுவும் சூடு உண்டாகிற போது சழல் விரைவு அதிகமாகி ஒன்றையொன்று தள்ளி நிறுத்ததுகிறது.

அதனால் அணுக்கள் விலகிப் போய்விடுகின்றன. ஆனால் அவை சேர்ந்திருக்கின்றன என்ற நினைப்பதுதான் மாயை.

"இன்பத்தை மாத்திரமே விரும்பி என்றும்,

எண்ணம்சொல் செயல்விளைவை யுகிக் காமல்,

இன்பத்திற் கேமுரணாய்ச் செயல்கள் ஆற்றி,

இயற்கையே கம்விளைவை மறந்தி ருந்தும்,

இன்பதுன்பம் எவைஎன்றே அறிந்தி டாமல்

இரண்டையுமே கற்பனையால் மாற்றிக் கண்டும்

இன்பமென்ற நிறைசெல்வ ஊற்றி ருக்கும்

இடமறியா மயக்கமுமே மாயை ஆகும்."

இயற்கை செயற்கை நிகழ்ச்சி தன், விளைவுகள் இவைகளையறியாமல், இன்பம் எது துன்பம் எதுவெனக் கண்டறியாமல், எப்போதும் இன்பமே வேண்டும் என்று விரும்பியும்,

இன்பம் பெறவேண்டிய வகைக்கு முரணாகச் செயல்கள் ஆற்றியும், இயற்கைத் தத்துவத்ததையே மறந்தும், இன்பத்தைத் துன்பமாகவும், துன்பத்தை இன்பமாகவும் அறிவின் மயக்கத்தால், ஆராய்ச்சியின்மையால், தவறாகக் கருதிக் கொண்டும்,

எது வேண்டும், என்ன செய்வது என்ற தெளிவு இல்லாமல் திகைப்புடன் செயல் ஆற்றி,

கற்பனையால் கொண்ட இன்பத்தை நாடி உண்மையான துன்பத்தையும், சிறிது நேர இன்பத்தை நாடி நீண்டகால துன்பத்தையும், ஒருவர் இன்பத்தை நாடிப் பலரின் துன்பத்தையும், விளைவித்தும் - அனுபவித்தும் - வருகிற திகப்புற்ற அறிவின் மயக்க நிலையே மாயை எனப்படும்.




மாயைப் பற்றி இராமகிருஷ்ணர் சொல்கிறார்.......

."இறைவனுடைய மகாமாயையால் இவ்வுலக வாழ்க்கை நடந்து வருகிறது. இந்த மாயை இருவகைப்படும். ஒன்று வித்யா மாயை. மற்றொன்று அவித்யா மாயை.

விதயா மாயிடம் சரணடைந்தால் நல்லார் இணக்கம், ஞானம், பக்தி, அன்பு, வைராக்கியம் ஆகியவை உண்டாகின்றன.

அவித்யா மாயை என்பது நிலம், நீர், தீ. காற்று, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களும், அவற்றின் அடிப்படையில் தோன்றும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பனவுமாகும்.

அதாவது பொறிகளின் இன்பத்திற்குக் காரணமாக இருக்கும் பொருட்கள் இவைகள் நம்மிடம் ஈசனை மறக்கும்படிச் செய்கின்றன."

பிரம்ம பக்தர் - "அறியாமையை உண்டாக்கும் அவித்யா மாயையை இறைவன் ஏன் படைத்திருக்கிறான்?"

இராமகிருஷ்ணர் - "அது அவனுடைய விளையாட்டு. இருள் இல்லாவிட்டால் ஒளியின் பெருமையை அறிய முடியாது.

துன்பமில்லாவிட்டால் இன்பத்தின் அருமையை அறிய முடியாது. அஞ்ஞானமாகிய அவித்யை இருப்பதனால்தான் ஞானத்தின் பெருமையை அறிய முடிகிறது.

"தோல் இருப்பதனால்தான் மாங்காய் பழுக்கிறது பழம் பழுத்ததும் வெளித்தோலின் உபயோகம் முடிந்துவிடுகிறது.

நாம் தோலை அகற்றிவிடுகிறோம். மாயை என்னும் தோல் முடியிருப்பதால்தான் பிரம்ம ஞானத்தை அடைய முடிகிறது.

வித்யா மாயை, அவித்யா மாயை இரண்டும் மாம்பழத்தின் தோலுக்குச் சமம். இரண்டுமே தேவை.

பக்தர் - இந்த உலகம் மாயை, ஜால வித்தை, என்றால் இந்த மாயை விலகாதது ஏன்?

இராமகிருஷ்ணர் - சம்ஸ்காரங்களின் வலிமை காரணமாக மாயை விலகவில்லை. இந்த மாயா உலகில் தொடர்ந்து பல பிறவிகளில் வாழ்ந்ததன் காரணமாக மாயை உண்மை என்று தோன்றுகிறது.

சம்ஸ்காரங்களுக்கு எவ்வளவு வலிமை தெரியுமா? சொல்கிறேன் கேள்! அரசகுமாரன் ஒருவன் முற்பிறவியில் சலவைத் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்திருந்தான்.

அவன் விளையாடும்போது நண்பர்களிடம். "மற்ற விளையாட்டெல்லாம் இருக்கட்டும். நான் கவிழ்ந்து படுத்துக் கொள்கிறேன். நீங்கள் என் முதுகின்மீது டப்டப் என்று துணி துவையுங்கள்" என்று கூறினான்.

மாயை விளக்கத்தை ஒரு கதை மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

ஒரு முறை கண்ணனை வழிபட்ட நாரதர், "கண்ணா! உன் மாயை ஆற்றல் வாய்ந்தது என்கிறார்கள். அனைத்தும் உணர்ந்த

பிரம்மஞானியாகிய என்னை மாயை என்ன செய்யும்?" என்று பெருமை பேசினார்.

"நாரதா! அந்தப் பொய்கையில் சென்று நீராடிவிட்டு வா. பிறகு பேசுவோம்" என்றார் கண்ணன்.

தன் கையிலிருந்த வீணையைக் கரையில் வைத்துவிட்டுப் பொய்கையில் மூழ்கி எழுந்தார் நாரதர். அவ்வளவுதான்! அழகிய பெண்ணாக அவர் மாறி இருந்தார்! தான் யார் என்பதையே அவர் மறந்து விட்டார்!

அப்போது அந்த வழியாகக் குதிரையில் வந்த அரசன் ஒருவன் அந்தப் பெண்ணைப் பார்த்தான்.

அவள் அழகில் மயங்கிய அவன், "என்னைத் திருமணம் செய்து கொள்கிறாயா?" என்று அவளிடம் கேட்டான்.

அவனை ஓரண்கண்ணால் பார்த்த அவள் தன் சம்மதத்தை தெரிவித்தாள்.

இருவருக்கும் திருமணம் நடந்தது. அரண்மனையில் சீரும் சிறப்புமாக இருந்த அவளுக்கு இரண்டு குழந்தகைள் பிறந்தன.

திடீரென்று எதிரி நாட்டு அரசன், படையெடுத்து வந்து போர்க்களத்தில் அவளது கணவனை கொன்றுவிட்டான்.

அவளிடம் ஓடி வந்த வீரர்கள், "அரசியாரே! நம் அரசர் கொல்லப்பட்டார். எதிரிப்படை எப்போது வேண்டுமானாலும், அரண்மனைக்கு வரலாம். நீங்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டு காட்டிற்குள் சென்றுவிடுங்கள்" என்றார்கள்.

உயிர் பிழைக்கக் கருதிய அவள் இரண்டு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு காட்டிற்கு ஓடிச் சென்றாள். எதிரி வீரர்கள் அவளைத் துரத்தி வந்தார்கள்.

குழந்தைகளைப் போட்டுவிட்டு அவள் கல்லிலும் முள்ளிலும் ஓடினாள்.

வீரர்கள் துரத்தி வரும் ஓசை இப்பொழுது அவளுக்குக் கேட்கவில்லை. தான் தப்பிவிட்டதாக உணர்ந்தாள்.

“கணவரை இழந்துவிட்டு குழந்தைகளைப் பறி கொடுத்து விட்டேன். இப்போது என்னை ஆதரிப்பார் யாரும் இல்லை. பசியாலும் தாகத்தாலும் துடிக்கிறேன். என்ன வாழ்க்கை இது?” என்று அவள் அழுது புலம்பினாள்.

நடந்ததை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த கண்ணன், அந்தப் பெண்ணிற்கு பழைய வடிவத்தைத் தர நினைத்தார்.

கிழவனாக மாறி அவள் எதிரில் வந்தார். “பெண்ணே! அந்தப் பொய்கையில் நீராடிவிட்டு வா. உனக்கு நலமே விளையும்” என்றார்.

அவளும் அப்படியே செய்தாள். முழ்கி எழுந்ததும் அவள் நாரதராக ஆனாள்.

கரையேறிய நாரதர் வீணையை எடுத்துக் கொண்டு கண்ணனிடம் வந்தார்.

நடந்ததை எல்லாம் அவருக்கு உணர்த்திய கண்ணன், “இப்போது மாயையின் ஆற்றல் உனக்குப் புரிந்ததா?” என்று கேட்டார்.

“என் தற்பெருமைக்கு என்னை மன்னியுங்கள்” என்று வேண்டினார் நாரதர்.

# 19. முக்தியும் மோட்சமும்.

இராமகிருஷ்ணருடன் ஒரு மார்வாரி பக்தர் பேசிக் கொண்டிருந்தார்.

மார்வாரி பக்தர் - அய்யா! கங்கையில் உடலை உகுத்து விட்டால் முக்தி கிடைக்குமா?

இராமகிருஷ்ணர் - ஞானம் உண்டானால் முக்தி. நீ எங்கிருந்தாலென்ன்?

மோசமான இடத்தில் இறந்தாலும் சரி, கங்கைக் கரையில் இறந்தாலும் சரி, ஞானிக்கு முக்தி கிடைக்கும்.

அஞ்ஞானியைப் பொறுத்தவரை கங்கை நதிக்கரையில் இறப்பது நல்லது.

மார்வாரி பக்தர் - மகராஜ்! சாகியில் இறந்தால முக்தி ஏற்படுகிறது ஏன்?

இராமகிருஷ்ணர் - காசியில் இறந்தால் சிவதரிசனம் கிடைக்கிறது. அப்போது சிபெருமான், “என்னுடைய இந்த உருவம் மாயை வடிவம். பக்தர்களுக்காக இதைத் தாங்கியுள்ளேன். இதோ பார்! நான் அகண்ட சச்திதானந்தத்தில் கரைந்துவிடுகிறேன்” என்று கூறி, தம்முடைய வடிவத்தை சச்சிதானந்தத்தில் மறைத்துக் கொள்கிறார்.

புராணத்தின்படி சண்டாளனும், பக்தி உதயமானால் முக்தி அடையலாம்.

இறைவனுடைய பெயரையும் புகழையும் பாடினாலே போதும். யாகம், யக்ஞம், தந்திரம், மந்திரம் இவைகள் அவ்வளவு பிரயோஜனமில்லை.

கலியுகத்தில் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கும் யாகம், யக்ஞம், மந்திரம், தந்திரம் போன்ற கர்மங்களை முறைப்படி செய்வதற்கு நேரம் எங்கே இருக்கிறது? ஆகையால் நாரத பக்திதான் ஏற்றது.

கர்மயோகம் மிகவும் கடினம். பயன் கருதாமல் பணி புரியாவிட்டால் அது நம்மைக் கட்டுப்படுத்திவிடும்.

பதஞ்சலி தனது யோகசூத்திரத்தில் முக்தியை கொடுக்கும் எட்டு படிக்கட்டுகளை விவரித்துள்ளார்.

தற்காலத்தில் நிலவிவரும் அனைத்து தியான முறைகளும் யோகசூத்திரத்தை அடிப்படையாக கொண்டவைதான்.

தியானம் செய்வதன் மூலம் முக்தியை அடையலாம் என்பது பரவலாக நிலவிவரும் ஒரு கருத்து. இது தவறான கருத்து என்று வேதம் இந்த பாடம் மூலம் விளக்குகிறது.

முக்தி என்பது நமது குறிக்கோள். யோகம் என்பது நமது குறிக்கோளை அடைய உதவும் வழி. இதில் யாருக்கும் எந்த குழப்பமும் கிடையாது.

ஆனால் முக்தியென்றால் என்ன என்பதிலும் யோகமென்றால் என்ன என்பதிலும் பல தெளிவற்ற தவறான கருத்துக்கள் உள்ளன.

### யோகம் என்றால் என்ன?

யோகம் என்றால் ஒன்று சேர்வது என்று பொருள். பரமனும் நானும் எப்பொழுதும் ஒன்றுதான் என்று புரிந்து கொள்வதுதான் யோகத்தின் குறிக்கோள்.

ஆனால் நானும் பரமனும் வேறு. நான் பரமபதத்தை யோகம் செய்வதன் மூலம் அடையலாம் என்பது போன்ற பல தவறான கருத்துக்கள் நிலவி வருகின்றன.

மேலும் யோகம் என்பதற்கு தியானம் செய்வது மற்றும் யோகாசனம் என்ற உடற்பயிற்சி போன்ற தவறான பொருள்களும் பாமர மக்களிடையே வழக்கத்தில் உள்ளது.

## முக்தி என்றால் என்ன?

பிறப்பு-இறப்பு மறுபடியும் பிறப்பு என்ற சுழற்சியிலிருந்து விடுபடுவது முக்தி. நாம் செய்த பாவ புண்ணியங்களின் பலனை அனுபவிக்க நாம் திரும்ப திரும்ப பிறவிகள் எடுத்துகொண்டு வருகிறோம்.

வெற்றி-தோல்வி, வளமை-வறுமை போன்ற இருமைகள் நிறைந்த உலகில் உழன்றுகொண்டிருக்கிறோம்.

இந்த சுழற்சியிலிருந்து விடுபட்டு குறையாத இன்பத்துடன் வாழ்வதுதான் முக்தி. முக்தியடைந்தவர்களுக்கு மறுபிறவி கிடையாது என்று வேதம் கூறுகிறது.

நாம் முக்தியடைந்து விட்டோமா இல்லையா என்று நமக்கு தெரிய வேண்டும். நாம் எங்கே போகவேண்டும் என்று தெரியாமல் ஆட்டோவில் ஏறி உட்கார்ந்தால் அவன் இறக்கிவிடும் இடத்தில் இறங்கிவிட்டு அவன் கேட்கும் பணத்தை கொடுப்பதை தவிர நமக்கு வேறு வழியில்லை.

போகும் வழி தெரியவேண்டுமென்ற அவசியமில்லை. போகவேண்டிய இடம் தெளிவாக தெரிந்தால் மட்டும் போதும். அது தெரியாவிட்டால் பயணம் செய்ய வேண்டிய அவசியமேயில்லை.

முக்தி என்பது என்ன என்று தெரியாவிட்டால் யோகம் நமக்கு அவசியமில்லாத ஒன்று.

முக்தி என்றால் என்ன என்பதை நாம் வேதத்தை படிக்காமலேயே, யாருடைய உதவியுமில்லாமலேயே அறிந்து கொள்ளலாம். நாம் செய்யும் அனைத்து செயல்களின் முடிவான நோக்கம் ஆனந்தம்.

எப்பொழுதும் இன்பமாயிருப்பதே முக்தி. முக்தியென்பதற்கு இதைத்தவிர வேறு எந்த பொருளென்றாலும் அது நமக்கு தேவையில்லை.

இன்றிலிருந்து என்றும் இன்பமாயிருப்பதுதான் நமது குறிக்கோள். அதுதான் முக்தி.

## யோகம் முக்தியை கொடுக்குமா?

ஆம். கொடுக்கும். பதஞ்சலியால் விவரிக்கப்பட்ட அஷ்டாங்க யோகத்தை முறையாக செய்தால் நிச்சயமாக முக்தியை அடையலாம்.

இல்லை. கொடுக்காது. யோகம் என்ற பெயரில் கண்ணை மூடி அமர்ந்து கொண்டோ அல்லது உடலை வில்லாக வளைத்து கொண்டோ அல்லது மூச்சை அடக்கியோ நாம் எத்துணை பயிற்சி செய்தாலும் நாம் நம் நேரத்தை வீணடித்துகொண்டிருக்கிறோம் என்ற அறிவு வந்தால் வருமே தவிர முக்தி வராது.

### அஷ்டாங்க யோகம் என்றால் என்ன?

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணம், தியானம், சமாதி ஆகிய எட்டு அங்கங்கள் சேர்ந்தது அஷ்டாங்க யோகம்.

இந்த எட்டு படிகளில் சுலபமாக செய்யகூடிய ஆசனம், பிராணாயாமம், தியானம் என்ற மூன்று படிகள் மட்டும் மக்களிடையே பிரபலப்படுத்தப்பட்டுள்ளது.

அறியாமையின் காரணமாக மக்கள் இதைத்தான் முழுமையான யோகம் என்று நம்பிக்கொண்டு பணத்தையும் நேரத்தையும் விரயம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வேதத்தில் இந்த அனைத்து படிக்கட்டுக்களும் விளக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை முறையாக ஓரிடத்தில் கொடுக்கப்படவில்லை.

பதஞ்சலியின் ஒப்பற்ற யோகசூத்திரம் வேதத்தின் கருத்துக்களை முறைபடுத்தி பாமரமக்களும் புரிந்து கொள்ளும் விதத்தில் கொடுக்கிறது.

முதல் இரண்டு படிக்கட்டுக்களான யமம், நியமம் ஆகியவை என்ன என்று தெரியாமலேயே ஆசனம், பிராணாயாமம் போன்ற பயிற்சியில் ஈடுபட்டால் பலன் கிடைக்காது என்பதில் எந்த சந்தேகமும் இருக்க வேண்டாம்.

தியானம் என்பது முதல் ஆறு படிகளையும் முறையாக கடந்த பின்னர் ஆரம்பிக்க வேண்டிய ஏழாவது படி.

முக்தி பற்றி வேதாத்திரி மகரிசி.

- அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின அறமே ஞானம்.
- முக்தியை அடைந்த அளவே நமது வாழ்க்கையில் வெற்றி.
- மனம் காலியாக இருந்தால் அதுவே முக்தி.
- எள்ளுக்குள் எணணெயைப் போன்று பிரபஞ்சம் எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்து நின்று இயங்கும் ஆன்மா, ஜீவன், கடவுள், இயற்கை, சக்தி என்று பலவாறாகச் சொல்லப்படும் அரூப சக்தி நிலையை அறிவால் அறிந்து வாழ்வில் அமைதி பெறுவதே முக்தி.
- அவனை (இறைவனை) மறந்தால் நீ சிறயோன் அவனை அறிந்தால் நீ பெரியோன் அவன் நீ ஒன்றாய் அறிந்த இடம் அறிவு முழுமை. அது முக்தி.

வாழும் முறையை அறிந்து இப்பிறவியில் நிறைவான ஒரு வாழ்க்கை வாழ்பவகளே முக்தர்கள் ஆவர்.

அறிவில்முழுமை பெற்றவர்களே இத்தகைய வாழ்க்கை வாழ்பவர்கள் எல்லாம் வல்ல இறைநிலை எங்கும் எல்லாரும் ஆக இருக்கிறது என்பதை மறவாத அறிவு நிலையில் வாழ்பவர் ஆவர்.

இத்தகையவர்களே தெய்வ நிலைக்கு உயர்ந்தவர்களாகிய தெய்வர்கள் (தேவர்கள்) என அழைக்கப்டுவர்.

இதைத்தான் கீதையில் "யார் ஒருவர் எல்லா பொருட்களிலும் என்னைக் காண வல்லவரோ, அவரை விட்டு நாள் விலகுவதும் இல்லை. என்னை விட்டு அவர் நிங"குவதும் இல்லை" எனச் சொல்லப்பட்டு இருக்கிறது.

எல்லாவற்றிலும் இறைவனைக் காணும் அறிவைப் பெற்ற நிலை முக்தி எனப்படும்.

முக்தி என்ற அறிவு நிலை அடைந்தவர்கள் வாழும் காலத்தில் இயற்கை இன்பங்களாகிய புலன் இன்பங்களையும் புலன் கடந்த அனுபவமாகிய பேரின்பத்தையும் துய்த்து நிறைவு பெறுவர்.

அத்தகையவர்களின் வாழ்நாளில் நிறைவ பெறாத ஆசை என்று எதுவும் இருக்காது.

அவர்களின் ஆன்மா பாவப்பதிவுகள் நீங்கப்பெற்றுத் தூய்மை அடைந்து இருக்கும். தூய்மை அடைந்த ஜீவ ஆன்மாவே பரம ஆன்மாவாக ஆகிவிடுவதால் அறிவிலே முழுமை அடைந்த ஆன்மாக்களுக்கு இனியும் புமியில் பிறவி எடுக்க் வேண்டிய அவசியமில்லை.

அசுத்தமான நீரில் உள்ள் களங்கங்கள் நீக்கப் பெற்றால் உள்ளங்கி இருந்த சுத்தமான நீர் வெளிப்படுவது போல் நிறைவேறாத

ஆசைகளும், தீய வினைப்பதிவுகளும் (ஆன்ம களங்கம்) நீக்கப் பெற்ற ஜீவ ஆன்மாக்கள் பர ஆன்மாவாக வெளிப்படும். இதுவே ஜீவ பிரம்ம ஐக்கிய முக்தி அல்லது மோட்சம் எனப்படும்.

எடுத்த இந்த மானிட பிறிவியில் அறிவிரேல முழுமைபெற்று (முக்தி) பிறவித் தொடர் அறுப்பதற்கு (மோடசம் என்ற நிலை அடைவதற்கு) தெய்வ நிலையில் வாழும் வேதாத்திரி மகரிசி அவர்கள் தான் வாழும் வாழ்க்கை முறையை வாழ்க்கை வளக்கல்வி என்னும் மனவளக்கலையை வகுத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

இவ்வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்து, எடுத்த இப்பிறவியிலேயே முக்தி அடைந்து பிறவிப் பிணியிலிருந்து விடுதலை (மோட்சம்) பெறுவோமாக.



# 20. காமமும் அளவு முறையும்

ஒரு சமயம் ஓர் இளைஞன் மிகவும் பதற்றத்துடன் இராமகிருஷ்ணரிடம் வந்து " சுவாமி! காமம் எப்படி விலகும்? சில சமயங்களில் கீழான ஆசைகளும் வெறுக்கத்ததக்க் உணர்ச்சிகளும் என் மனதை அலைக்கழிக்கின்றன. அதனால் நான் அமைதியை இழந்து தவிக்கிறேன்" என்ற சொன்னார்.

அதற்கு இராமகிருஷ்ணர் அவனிடம், "கடவுளின் காட்சியைப் பெறாத வரையில் காமம் அடியோடு விலகுவதில்லை. அதன் பிறகும் உடல் இருக்கும் வரை அதன் சுவடு சிறிது இருக்கவே செய்யும். ஆனால் அதனால் எந்தத் தொந்தரவும் இருக்காது.

"என்னிடமிருந்து முழுமையாகக் காம வாசனை போய்விட்டதென்றா நினைக்கிறாய்? காமத்தை வென்றுவிட்டதாக நான் ஒரு சமயம் நினைத்தேன்.

அதன்பிறகு ஒரு நாள் பஞ்சவடியில் அமர்ந்திருந்தபொழுது என்னை மீறி காம உணர்ச்சி எழுந்தது.

என்னால் அதை அடக்க முடியாது போல் தோன்றியது. நான் ஆடிப் போய்விட்டேன். உடனே கீழே விழுந்து மண்தரையில் முகத்தைத் தேய்த்துக்கொண்டு அழுதபடியே அன்னை காளியிடம், "அம்மா, நான் பெரிய தவறு செய்துவிட்டேன். காமத்தை வென்று விட்டதாக இனி கருதமாட்டேன்." என்று சொல்லி முறையிட்டேன்.

நீயோ வாலிபத்தில் நிற்கிறாய். அதனால் உன்னால் அந்த வேகத்தை அடக்க முடியவில்லை. பெரியவெள்ளம் புரண்டு வரும்போது அது கரையைப் பற்றிக் கவலைப்படவா முடியும்!

கரையோ, எதுவோ வழியிலிருக்கும் எல்லாவற்றையும் அது உடைத்து கொண்டு முன்னேறுகிறது. வயலில் புகுந்து பெரும் உயரத்திற்குத் தண்ணீர் தேங்குகிறது.

"ஆனால், கலியுகத்தில் மனதினால் செய்யும் பாவம், பாவமே இல்லையெனறு சொல்லப்பட்டிருக்கிறது. ஏதோ ஒருமுறை உன் மனதில் கெட்ட எண்ணம் எழுந்ததற்காக ஏன் படபடக்கிறாய்?

உடலில் இயற்கைப்படி இந்த உணர்ச்சிகள் சில சமயம் வந்து போகத்தான் செய்யும். இதையும் மலம் கழிப்பது போன்ற சாதாரண உணர்ச்சியாகவே நினைத்துக் கொள்ளவேண்டும்.

மலம் கழிக்க வேண்டியிருக்கிறது என்பதற்காக யாராவது கன்னத்தில் கை வைத்துக் கொண்டு கவலைப்படுகிறார்களா?

"அதுபோலவே இதைப் போன்ற உணர்ச்சிகளையும் இயல்பானவையாக, அற்பமானவையாகக் கருதி, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்காதே.

"மேலும் இறைவனிடம் மன்றாடி மனமுருகப் பிரார்த்தனை செய். உறரி நாமத்தை ஜபம் செய். அவரது பெருமையில் ஈடுபடு.

கெட்ட எண்ணங்கள் வரட்டும். போகட்டும். அவற்றைக் கண்டு கொள்ளாதே. இப்படிச் செய்தால் தாமாகவே அவை கட்டுக்குள் அடங்கிவிடும்.

இந்த வகையில் ஒர் இளைஞன் மற்றொர் இளைஞனுடன் பேசுவது போல் இராமகிருஷ்ணர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியை நினைக்கும் போது யோகின் (பிற்காலத்தில் சவாமி யோகானந்தர்) நினைவு வருகிறது. புலன்களை வென்ற ஒரு சிலரில் யோகினும் ஒருவர்.

“காமத்தை எப்படி வெல்வது என்ற இதே கேள்வியை ஒரு நாள் சுவாமி யோகானந்தர் இராமகிருஷ்ணரிடம் கேட்டார்.

அப்போது யோகானந்தருக்குப் பதினான்கு அல்லது பதினைந்து வயதிருக்கும். இராமகிருஷ்ணரிடம் அப்போதுதான் அவர் வர ஆரம்பித்திருந்தார்.

அந்த நாட்களில் பஞ்சவடிக்கு அருகில் ஒரு குடிசையில் நாரயணன் என்ற உறடயோகி ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர், உறடயோகப் பயிற்சிகள் சிலவற்றைச் செய்து காட்டி மக்களைக் கவர்ந்து கொண்டிருந்தார். யோகினுக்கும் அதில் ஈடுபாடு தோன்றியது.

யோகின் கூறினார். “இந்த உறடயோகப் பயிற்சிகளைப் பழகாவிட்டால் காமத்தை அறவே வெல்ல முடியாது என்றும், கடவுளை அடைய இயலாது என்றும் நினைத்தேன்.

நான் காமத்தை வெல்வதற்குரிய வழியைக் கேட்டதும் யோகாசனம், பிராணயாமம் போன்ற ஏதாவது பயிற்சிகளை இராமகிருஷ்ணர் எனக்குக் கற்றுக் கொடுப்பார் என்று எதிர்பார்த்தேன்.

“ஆனால் இராமகிருஷ்ணரோ, “உறரி நாமத்தை நன்றாக ஜபம் செய். காமம் அழிந்து போகும்” என்று கூறினார். இந்தப் பதில் எனக்குத் திருப்தி தரவில்லை.

“இவருக்கு உறடயோகப் பயிற்சிகள் எதுவும் தெரியாது. ஆதலால் வாய்க்கு வந்த ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டார்.

உறரிநாமத்தைச் சொன்னால் காமம் ஓடிவிடுமாம்! எவ்வளவோ பேர் உறரி நாமத்ததைச் சொல்லிக் கொண்டுதானே இருக்கிறார்கள்? அவர்களிடமிருந்து காம உணர்ச்சி போயவிட்டதா என்ன?" என்று நான் நினைத்துக் கொண்டேன்.

"பிறகு ஒரு நாள் நான் காளிக்கோயிலுக்குச் சென்றபோது, இராமகிருஷ்ணரிடம் சொல்லாமல் நேராகப் பஞ்சவடியிலிருந்த உறடயோகியிடம் சென்றேன். அவர் பேசுவதை மிகவும் ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தேன்.

"அப்போது குருதேவரே அங்கு வந்தார். என்னைப் பார்த்ததும் அவர் என் கையைப் பிடித்து தமது அறைக்கு அழைத்துச் சென்று "நீ ஏன் அங்கு சென்றாய்? அங்கே போகாதே. உறடயோகப் பயிற்சிகளில் ஈடுபடுவாயானால் உன் மனம் உடலைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கும். கடவுளுக்காக ஏங்காது" என்று கூறி எச்சரித்தார்

"எங்கே நம்மிடம் வருவதை இவன் நிறுத்தி விடுவானோ என்ற எண்ணத்தில் இவர் இப்படிப் பேசுகிறார்" என்று நான் நினைத்துக் கொண்டேன்.

"நான் பெரிய புத்திசாலி" என்ற எண்ணம் எனக்கு அதிகமாக இருந்தது. ஆதலால் என் அறிவுக்கு எட்டியபடி நான் முடிவு செய்துவிட்டேன்.

ஆனால் இராமகிருஷ்ணரிடம் போவதால் அவருக்கு எந்த லாபமும் இல்லை என்பதை நான் நினைத்துப் பார்க்கவில்லை. அப்படி ஒரு குரங்கு மனம் எனக்கிருந்தது.

ஆனால் குருதேவரின் கருணைக்குத்தான் எல்லை என்பதே இல்லயே! இதுபோன்ற அற்பத்தனமான எண்ணங்கள் என் உள்ளத்தில் இருந்த போதிலும் அவர் எனக்கு அடைக்கலம் தந்தார்.

“எப்படியோ அந்த நேரத்தில் “அவர் சொன்னபடியே செய்து அதனால் என்ன ஏற்படுகிறது என்றுதான் பார்த்துவிடுவோமே!” என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது.

“ஆகவே உறரி நாமத்தை விடாமல் ஜபிக்க ஆரம்பித்தேன். என்ன ஆச்சரியம்! அவர் கூறியது போலவே, காம உணர்ச்சிகள் மெல்ல மெல்ல என்னிடமிருந்து விலகுவதை உணர்ந்தேன்.

உணவு, உறக்கம் , உழைப்பு, உடலுறவு, எண்ணம் என்ற ஐந்திலும் அளவு முறை வேண்டும் என்பது வேதாத்திரி கோட்பாடு.

காமத்தின் விளைவாக வரும் எண்ணத்தில் அளவுமுறை வேண்டும் என்கிறார் மகரிசி.

அம்மா, அப்பா இருவரது காமத்தால் எடுத்த இந்த உடம்பும், காமத்தால் உண்டானதுதானே என்று தேவிமகாத்திமியம் கூறுகிறது.

காமத்தைக் கட்டுப்படுத்த சித்தர் யோகமாகிய “காயகல்பப் பயிற்சியை” மகரிசி மானுடத்திற்குத் தந்துள்ளார்.

காமத்திற்கு அடிப்படையான விந்துவை பால்சுரப்பியிலிருந்து மேல்நோக்கி எழுப்பி விடுவதால், காமத்தை கட்டுப்படுத்தலாம். காமத்தை ஆக்க சக்தியாக மாற்றலாம். இது போன்ற இரகசியஙங்களைச் சொல்லித் தருகிறது மகரிசியின் காயகற்பப் பயிற்சி.

“வினைப்பதிவாம் சுமையை விடுத்துத் தூயமை பெறவே

நினைவாய் உடலெடுத்தேன் நிலம் மீது விழுந்த பின்னே

எனை மறந்தேன் எநதன் வினை மறந்தேன் இறைவா

உனை மறந்தேன் ஆனால் நீ உள்ளுணர் எனை மீட்டு"

- வேதாத்திரி மகரிசி.

முயற்சியும் பயிற்சியும் செய்து காமத்தை கட்டுக்குள் வைக்கலாம்.

வாருங்கள் மனவளக்கலை மன்றத்திற்கு. காயகல்பம் பயில்வோம். காம உணர்வுகளை ஆக்க உணர்வுகளாக மாற்றுவோம். . வாழ்வில் வளமும் அமைதியும் பேரின்பமும் அடைவோம்.

# 21.தேவையற்ற மீன் வியாபாரம்.

இராமகிருஷ்ணரின் சீடர் ராக்கால் (பிற்காலத்தில் சுவாமி பரம்மானந்தர்) அப்போது இளைஞர்.

ஒரு சமயம் அவர் வழியில் கிடந்த ஒரு பைசா நாணயத்தைக் கண்டெடுத்தார்.

அதை அவர் இராமகிருஷ்ணரிடம் கொண்டு வந்து கொடுத்தார்.

இராமகிருஷ்ணர் அவரிடம், "நீ ஏன் அதை எடுத்தாய்? உனக்கோ அது எந்த விதத்திலும் தேவையில்லை.

ஒருவனுக்கு மீன் தேவையில்லை என்று வைத்துக்கொள். பிறகு அவன் ஏன் மீன் சந்தைக்குப் போய் மீன் விலைப் பற்றிய பேரத்தில் ஈடுபட வேண்டும்?" என்று கேட்டார்.

சிறிய விஷயமானாலும் தேவையற்ற விவகாரங்களில் ஒரு சாதகர் கருத்து செலுத்தக் கூடாது. மகாமாயை சம்மந்தப்பட்ட இந்த உலகத்தில் மிகவும் சிறிய விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக ஒரு சாதகர் நடந்து கொள்ள வேண்டும்.

இதையே பிறகாலத்தில் துறவறம் மேற்கொள்ள இருந்த சுவாமி பிரம்மானந்தருக்கு இராமகிருஷ்ணர் இவ்விதம் எடுத்துக் காட்டினார்.

ஒரு சமயம் புகைவண்டிக்காகப் புகைவண்டி நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தார் வேதாத்திரி. அவர் அமர்ந்திருந்த இடத்திலிருந்து பார்வையை சிறிது சுற்றும் முற்றும் செலுத்தினார்.

அவர் அருகே சிறிதுதூரத்தில் ஒரு ரூபாய் நாணயம் பளிச்சென்று கண்ணில் தென்படுகிறது. அந்த நாணயம் "என்னை எடுத்துக் கொள்" என்பதைப் போன்று அவர் மனதில் உந்துவேகம் தோன்றுகிறது.

சுற்றும்முற்றும் மீண்டும் பார்த்தார். எச்சரிக்கை உணர்வாய் பக்கததில் இதற்கு யாரும் உரிமை கொண்டாடுகிறார்களா? என்று பார்க்கிறார்.

எழுந்து சென்று அதைக் கையில் எடுத்துக் கொள்கிறார். பின் தன் இடத்தில் வந்து அமர்ந்து கொள்கிறார். ஒரு நிமிடம் மனம் சிந்தனையில் ஓடுகிறது.

இந்த நாணயத்திற்கு நான் ஏன் ஆசைப்படவேண்டும். இந்த நாணயம் என்னுடையது இல்லையே. மேலும் இதுபோன்று என் சட்டைப் பையில் 300 ரூபாய்க்கு மேல் இருக்கிறது. இது யாருடைய பணமோ!

இது யாருக்கு வேண்டுமோ அவர்கள் எடுத்துக் கொள்ளட்டும். எனக்கு இது வேண்டாம் என்று மனம் சொல்கிறது. உடனே மீண்டும் அதை எடுத்த இடத்திலே வைத்துவிட்டு வந்து அமர்கிறார்.

குருஷேத்திரம் போல் ஒரு நிமிடம் மனதில் போராட்டம். சஞ்சலம். பிறகு அதைஎடுத்த இடத்திலேயே வைத்தபின்பு மனதிலே மீண்டும் பழைய அமைதி.


எண்ணத்தை எண்ணத்தால் ஆராய்கிறார். மனித சரித்திரத்தில் உள்ள விலங்கினப் பதிவாகிய பிறர் வளம் பறிக்கும் பறித்துண்ணும் பதிவை தன் மனதில் வந்ததை சிந்தனையால் விளங்கிக் கொள்கிறார்.

“பொது விதியாய் பிறாபொருளை வாழ்க்கைச்

சுதந்திரத்தைப் போற்றிக் காத்தும் பிறர்துன்பம் போக்கும்

அன்பும் வேண்டும்”

என்று பணிவான உபதேசத்தை மானுடத்திடம் வைக்கிறார்.



# 22. உண்மை ஞானம்.

ஒரு சமயம் பேருந்து நிலையத்தில் மகரிசி நின்று கொண்டிருந்தார்.

ஒரு பேருந்தின் அருகில் அதைக் கடந்து கொண்டிருந்தபோது, அவர்மீது திடீர் என “சிவப்பு மழை” பொழிந்தது.

மகரிசி அணிந்திருந்த மேலங்கி முழுவதும் திட்டுத் திட்டாக சிவப்பு நிறமானது.

மழை பொழிந்த மேகத்தை அன்னாந்து பார்க்கிறர். ஒரு வயதான அம்மையார் வாய் நிறை வெற்றிலை மென்று கொண்டிருந்தார்.

வாயில் கொள்ளததால் பாரத்தை இறக்கியதைப் பார்த்து விடுகிறார். அதே நேரத்தில் மகரிசியின் ஆடையையும் பார்த்து விடுகிறார்.

“அய்யா. தங்களைப் பார்த்தால் ஒரு மகானைப் போல் தோன்றுகிறீர்கள். உங்களுக்கு நான் அபச்சாரம் செய்து விட்டேன். என் எச்சிலைப் போய் உங்கள் மீது உமிழ்ந்து விட்டேன். அறியாமல் செய்த பிழையை மன்னித்தருள வேண்டும்” என்று உள்ளம் பதற வேண்டுகிறார்.

“அதற்கென்ன அம்மா, துடைத்துவிட்டால் போகிறது. அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம்” என்று ஆறுதல் அளிக்கிறார்கள்.

“இல்லை அய்யா! என் மனம் ஆறுதல் அடைய வில்லை. தயவு செய்து உங்கள் மேலாடையை கழட்டிக் கொடுங்கள். அதை ஒரு நிமிடத்தில் தூய்மை செய்து கொடுத்து விடுகிறேன்” என்று வேண்டுகிறார்.

“சட்டையில் எச்சில் பட்டதற்காக ஏனம்மா வருந்துகிறாய்? இந்த உடலே ஒரு பெண்ணின் எச்சத்தில் வளர்ந்து வந்தது தானே? அதை எதில் கழுவமுடியும்?” என்கிறார்.

இத்தகு உண்மை ஞானத்தைப் பற்றி இராமகிருஷ்ணர் தனது சீடர்களுக்கு ஒரு கதை சொல்கிறார். அந்தக் கதையின் பெயர் "சங்கரரும் சண்டாளனும்".

ஒரு சமயம் மாடடிக்கும் இடத்திலிருந்து ஒரு புலையன் வந்து கொண்டிருந்தான். அவன் கழுத்தில் வைத்திருந்த காவடியின் இரண்டு பக்கங்களிலும், மாமிசம் அடங்கிய இரண்டு கூடைகள் தொங்கிக் கொண்டிருந்தன.

ஆதிசங்கரர் அப்போது கங்கையில் நீராடிவிட்டு, புலையன் வந்து கொண்டிருந்த அதே வழியாக வந்து கொண்டிருந்தார்.

புலையன் தற்செயலாகத் தவறி அந்த மகானின்மீது பட்டுவிட்டான்.

அவ்வளவுதான்! சங்கரருக்கு உடனே கோபம் வந்துவிட்டது. கோபத்துடன் அவர் "அடே சண்டாளா! நீ என்மீது பட்டுவிட்டாயே!" என்று அவனைப் பார்த்துப் பலமாகச் சப்தமிட்டார்.

புலையன் அதற்குப் பதிலாக, "சுவாமி! நான் தங்கள்மீது படவுமில்லை, நீங்களும் என்மீது படவுமில்லை. தங்கள் ஆத்மா என்பது உடலா, மனமா, புத்தியா?

இவற்றுள் நீங்கள் எது என்பதை ஆத்ம விசாரனை செய்து பாருங்கள். உங்களுடைய உண்மையான சொரூபம் எது என்பதை என்குச் சொல்லுங்கள்.

இந்த உலகம் எந்தச் சத்துவ ரஜஸ் தமோ குணங்களால் ஆக்கபட்டிருக்கிறதோ. அந்த மூன்று குணங்களில் எந்த ஒரு குணத்தோடும் உண்மையான ஆத்மாவிற்கு எந்தவித்திலும் சம்மந்தம் கிடையாது என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே!" என்று சொன்னான்.

இதைக் கேட்ட சங்கரர் மௌனியானார்.

இராமகிருஷ்ணர் சொன்ன இந்தக் கதையின் மூலம் சில உண்மைகளை நாம் தெரிந்து கொள்கிறோம்.

ஞானமொழி பாமர மக்கிளடமிருந்து வெளிப்பட்டாலும். சிரத்தை பொருந்திய சாதகர்கள் அதை அப்படியே கிரகித்துக் கொண்டு விடுவார்கள்.

மனத்தூய்மையுடைய சாதகன் அபூர்வமாகத் தன் இலட்சியத்தை மறந்து போனாலும், வாழ்க்கையில் நிகழும் எதாவது ஒரு சாதாரண நிகழ்ச்சியின் மூலமும் விழிப்படைந்து, உடனே தன் இலட்சியத்திற்குத் திரும்பிப் போய்விடுவான்.

அப்படி எதாவது ஒரு வாய்ப்பை வழங்குவதன் மூலம் இறைவனே அவர்களை இரட்சிக்கிறார்.

# 23.சர்வம் சக்திமயம்.

உலக வழக்குப்படி சொல்வதானால் இராமகிருஷ்ணருக்குத் திருமணம் ஆகியிருந்தது.

ஆனால் அவரோ, சாதாரணமாகத் திருமணம் செய்து கொண்டிருப்பவர்களைப் போலத் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவில்லை.

ஆகவே திருமணமான அவர். மற்றவர்களைப் போல ஏன் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுத் தமது மனைவியுடன் வாழவில்லை என்ற கேள்வியை ஓர் அன்பர் இராமகிருஷ்ணரிடம் கேட்டார்.

அதற்குப் இராமகிருஷ்ணர் பின்வருமாறு பதிலைச் சொன்னார்.

ஒரு நாள் வினாயகப்பெருமான் ஒரு பூனையோடு விளையாடிக் கொண்டிருந்தார்.

அப்போது அவருடைய கைநகம் பூனையின் முகத்தில் பட்டு ஒரு சிறிய கீறலை உண்டாக்கியது.

சிறிது நேரத்திற்குப் பிறகு வினாயகர் வீட்டுககு வந்தார். அப்போது தமது தயாகிய பார்வதிதேவியின் கன்னத்தில் விரலால் கீறிய அடையாளம் ஒன்று இருப்பதைப் பார்த்தார்.

அதைப் பார்த்ததும் "உலகின் தயாகிய அம்பிகைக்கு முகத்தில் கீறல் உண்டாக்கி ஊறு விளைவிக்கக் கூடியவர் யாராக இருக்கக்கூடும்? என்ற வியப்பு அவருக்கு ஏற்பட்டது.

"தாயே! உன் கன்னத்தில் இந்த வடு எப்படி ஏற்பட்டது?" என்று கேட்டார்.

ஜகன்மாதா பதில் சொன்னாள். "குழந்தாய் இது நீ செய்த காரியம்தான். உன் கைநகத்தின் கீறலால் ஏற்பட்ட வடுதான் இது,"

தேவியின் பதிலைக் கேட்ட வினாயகப் பெருமான் திடுக்கிட்டுப் போனார்.

வியப்பு மேலிட அவர், "எப்படியம்மா! உன்னை நான் ஒரு போதும் கீறியதாக எனக்கு நினைவு இல்லையே" என்று கேட்டார்.

"குழந்தைாய்! இன்று காலையில் நீ ஒரு பூனையைக் கீறயதை மறந்துவிட்டாயா?"

"ஆமாம், கீறினேன். ஆனால் உன் கன்னத்தில் வடு எப்ப ஏற்பட்டது?"

“குழந்தாய்! இந்த உலகில் உள்ள எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன். நானே உலகமாக ஆகியிருக்கிறேன். எல்லா உயிர்களாகவும் பொருள்களாகவும் சகல சிருஷ்டியாகவும் நானே விளங்குகிறேன். ஆகவே நீ யாரை துன்புறுத்தினாலும் உண்மையில் அது என்னைத் துன்புறத்துவதாகவே அமையும்.”

பார்வதிதேவியின் பதிலைக் கேட்டதும் வினாயகப் பெருமானுக்குச் சொல்ல முடியாத ஆச்சரியம் ஏற்பட்டது.

அதோடு தாம் ஒருவரையும திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை என்று உறுதியாக முடிவு செய்தார்.

ஏனென்றால் அவர் யாரைத் திருமணம் செய்துகொள்ள முடியும்? ஒவ்வொரு பெண்ணும் அவருடைய தாயே அல்லவா?

இந்தப் பெரிய உண்மையை மனதில் கொண்ட வினாயகப் பெருமான யாரையுமே திருமணம் செய்து கொள்ளவில்லை.

இந்தக் கதையைச் சொல்லிவிட்டு இராமகிருஷ்ணர் சொன்னார் - “நானும் வினாயகரைப் போலவே இருக்கிறேன்.

ஒவ்வொரு பெண்ணும் சாட்சாத் ஜகன்மாதாவாகிய தேவியாக இருப்பதை நான் பார்க்கிறேன்.

இறைவனுக்கு அடுத்த இடத்தில் பெண்கைளை வைத்துப் பெருமைப் பாராட்டியவர் வேதாத்திரி மகரிசி. பெண்களை இறைசொரூபமாகப் பாவித்து மதிப்புக் கொடுத்தவர் மகரிசி.

- பிரபஞ்ச உற்பத்தியில் உயிரினத் தோற்றங்கள் யாவும் இயற்கை பெண்ணினத்திடம் தானே ஒப்புவித்திருக்கிறது? அது பெண்ணினத்திடம் உள்ள பெருமை.
- பெண் வயிற்றிலுருவாகிப் பின்னும் மந்த பெண் கொடுத்த பால் உண்டே வளர்ந்து மேலும் பெண் துணையால் வாழுகின்ற பெருமை கண்டு பெண்மைக்கே பெரு மதிப்பு தந்து உள்ளோம்.
- எந்த வீட்டில் பெண்கள் மகிழ்ச்சியாக இருக்கிறாளோ அந்த வீட்டில் திருமகள் வசிப்பாள்.

- நம் நாட்டின் பண்பாட்டின்படி பெண்கள் இயற்கையிலேயே தியாகிகள்.
- பெண்கள் கணவன் வீட்டிற்கு வரும்போதே தாய்தந்தை பிறந்த வீட்டுச் சூழ்நிலை எல்லாவற்றையும் துறந்துதான் வருகிறார்கள்.
- கற்பு, தியாகம், அன்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, தூய்மை, ஒற்றுமை ஆகிய குணங்களின் மொத்த உருவம்தான் பெண்.
- பெண் துணையால் வாழ்கின்றோம். பெண்மையின் பெருமையை உணர்வோம்.

- பெண்கள் ஆண்களுக்கு அடிமையும் அல்லர். உணர்ந்தவர்களும் அல்லர். சமமானவர்களுமல்ல. ஆனால் இயற்கையமைப்பாலும் சமுதாய அமைப்பிலும் பெண்கள் ஒரு சிறப்பு நிலையுடையவர்கள் என்பதை அனைவரும் உணர்ந்து ஆண்களும் பெண்களும் ஒருங்கிணைந்த உயர்கருத்தில் வாழ வேண்டும்.

மனித குலத்தில் உள்ள எல்லா ஆண்களுக்கும் பெண்கள் தயாகவே இருக்கிறார்கள் என்பதை உணர்த்தியவர்கள் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும் ஆவார்கள்.


ஞானமும் வாழ்வும்
அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி

## 24.இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்கதான் தாள்......

இராமகிருஷ்ணர் (பக்தர்களிடம்) - தாயைக் காணாது குழந்தை எப்படிக் கதறுகிறது?

தாயைப்பிரிந்து அழும் குழந்தையிடம் இனிப்பையோ மிட்டாயையோ கொடுத்துச் சற்றுத் தேற்ற நினைத்தால் அது அவற்றை வேண்டாம் என்க

எந்தப் பொருளாலும் அந்தக் குழந்தையைத் தாயை மறக்கும்படிச் செய்ய் இயலாது.

“எனக்கு எதுவும் வேண்டாம். நான் அம்மாவிடம்தான் வோவேன்” என்று குழந்தை பிடிவாதம் பிடிக்கும். இப்படிப்பட்ட மன ஏக்கம் வேண்டும்.

ஆகா! குழந்தையின் மனநிலைதான் என்ன! அது “அம்மா, அம்மா என்று பத்தியம் பிடித்தது போல் ஆகிவிடுகிறது.

அதனால் தாயை மறக்க முடிவதில்லை. யாருக்கு வாழக்கையில் இன்பங்கள், சுகம் முதலியன அலுத்துப் போய்விட்டனவோ, எதுவும் பிடிக்கவில்லையோ - பணம், காசு, பெண், புகழ், உடலின்பம் எதுவும் பிடிக்கவில்லையோ அவர்கள் ஏக்கம் கொண்ட உள்ளத்ததுடன் குழந்தையைப் போல் “அம்மா. அம்மா” என்று கதறுகின்றனர்.

அவர்களது கதறலைக் கண்டு இறைவனாகிய தாய், எல்லா வேலைகளையும் உதறிவிட்டு ஓடி வருகிறாள்.

இதுதான் உள்ளத்தின் ஏக்கம். எந்த வழியில் சென்றாலும், இந்து, முகம்மதியம், கிறஸ்துவம், சாக்தம், பிரம்ம சாமாஜம் ஆகிய

எந்த வழியில் சென்றாலும், உள்ளத்தில் இறைவனுக்காக இந்த ஏக்கம் ஏற்படுவது அவசியமானது.

இறைவன் நமது நெஞ்சில் வீற்றிருப்பவன். உள்ளத் துடிப்பு இருக்குமேயானால் தவறான வழியில் சென்றாலும்கூட பாதகமில்லை.

இறைவனே நம்மைச் சரியான வழியில் நடத்திச் செல்வான். எல்லா வழிகளிலும் பிழைகள் இருக்கின்றன.

> எல்லோரும் "எனது" கடிகாரம் சரியான மணி காட்டுகிறது" என்று நினைக்கின்றனர். ஆனால் எந்தக் கடிகாரமும் சரியான மணியைக் காட்டுவதில்லை.

இருந்தாலும் எந்த வேலையும் நின்று போவதில்லை. உள்ளத்தில் இறைவனை அடையவேண்டும் என்ற ஏக்கம் இருக்குமேயானால் நல்லாரிணக்கம் என்ற சத்சங்கம் தானாகவே ஏற்படுகிறது.

நல்லரிணக்கத்தால் தனது கடிகாரத்தைச் சற்று சரியாக அமைத்துக் கொள்ள முடிகிறது.

(பங்கிமைப் பார்த்து) மனிதனுடைய கடமை என்ன?

பங்கிம் (சிரித்தாவாறே) - என்னைக் கேட்டால் உண்பது. உறங்குவது. இனபம் நுகர்வது என்று சொல்வேன்.

இராமகிருஷ்ணர் - (வெறுப்புடன்) சே! நீ ஒரு மட்டமான ஆள். இரவு பகலாக நீ எதைச் செய்து கொண்டு வருகிறாயோ அதுதான் உன் வாயிலிருந்து வருகிறது.

எதை உண்கிறானோ அந்த ஏப்பம்தான் வரும். முள்ளங்கி தின்றால் முள்ளங்கி ஏப்பம் வருகிறது. இளநீர் சாப்பிட்டால் இளநீர் ஏப்பம். இரவு பகலாகப் பெண் பொன் இவற்றில் உழலுகிறாய்.

இதனால்தான் இப்படிப்பட்ட வார்த்தைகள் உன் வாயிலிருந்து வெளிவருகின்றன. இடைவிடாமல் உலகப் பொருட்களைச் சிந்திப்பதால் கணக்குப் பார்க்கும் மனநிலை ஏற்படுகிறது.

மனிதன் வஞ்சகனாகிறான். இறைவனைப் பற்றி நினைத்தால் மனிதன் கபடம்மற்ற மனம் கொண்டவனாகினான்..

இறைவனுடைய காட்சி பெற்றவனால் இத்தயை வார்த்தைகளை ஒருபோதும் பேச முடியாது.

இறைவனைப் பற்றிய சிந்தனை இல்லாமல் வெறும் கல்வித் தேர்ச்சியினால் என்ன பயன்?

விவேக-வைராக்கியம் இல்லை என்றால் படித்து என்ன பயன்? பெண், பொன் இவற்றில மனம் ஈடுபட்டிருக்கும் பொழுது கற்றிவினால் என்ன பயன் வரும்?

கழுகு மிக உயரப் பறக்கும். ஆனால்அதன் பார்வை கீழே தரயில் கிடக்கும் அழுகிய மாமிசத்தின் மீது படிந்திருக்கும்

மிகவும் படித்தவன் உலக நூல்களையெல்லாம் படித்திருப்பான். சமஸ்கிருத சுலோகங்களை அப்படியே ஒப்பிப்பான். புத்தகங்கள் எழுதியிருப்பான்.

ஆனால் பெண்ணிடம் பற்றுக் கொள்வான். காசு, பணம், புகழ் இவற்றை வாழ்க்கையின் நோக்கம் என்று நினைப்பான். அப்படிப்பட்டவன் பண்டிதனா?

இறைவனிடம் மனநாட்டம் கொள்ளாத பண்தன் என்ன பண்டிதன்? கடவுளிடம் பக்தி கொண்டவனைப் பார்த்துச் சிலர். “இவன் ஒரு பைத்தியம். எப்பொழுது பார்த்தாலும் “இறைவா, இறைவா!” என்கிறான்” என்று எண்ணக்கூடும்.

“அவனுக்கு மூளை கெட்டுவிட்டது. இதோ பார்! நாம் எவ்வளவு புத்திசாலியாக இருக்கிறோம்? பணம், புகழ், உலக சுகம்

இவற்றை எப்படியெல்லாம் அனுபவிக்கிறோம்!” என்ற பெருமை பேசுவார்கள்..

காகம் தன்னைப் புத்திசாலி என்று நினைத்துக் கொள்கிறது. ஆனால் அதிகாலையில் எழுந்தவுடன் முதல் வேலையாக அசுத்தத்தை உட்கொள்ளுகிறது.

காகத்தைப் பார்! எப்படிக் கத்துகிறது! எவ்வளவு தந்திரம் அதற்கு!

ஆனால் யார் இறைவனை இடைவிடாமல் நினைக்கிறார்களோ. பொருட் பற்று, பெண், பொன் என்ற ஆசைகள் தங்களிடமிருந்து அடியோடு மறை வேண்டுமென்று இரவு பகலாம் இறைவனை வேண்டுகிறார்களோ, யாருக்கு உலகச் சுகங்கள் கசப்பைத் தருகின்றனவோ, யார் இறைவனின் பாதகமலங்களைத் தவிர வேறு எதையும் விரும்புவதில்லையோ. அவர்கள் நிலை அன்னப் பறவையின் நிலைக்குச் சமம்.

அன்னப்பறவையின் முன்பு பாலும்தண்ணீரும் கலந்து வைத்தால் அது தண்ணீரை நீக்கிவிட்டுப் பாலை மட்டும் பருகுகிறது.

அன்னப் பறவையின் தன்மையைக் கவனித்தருக்கிறாயா? அது ஒரே திசையை நோக்கி, நேராகச் செல்லும.

தூய பக்தனின் போக்கும் இது போன்றதுதான். அவன் இறைவனை நோக்கி நேராகச் செல்கிறான். அவன் வேறு எதையும் பார்ப்பதில்லை. எதையும் விரும்புவதில்லை.

வேதாத்திரி மகரிசி சிறுவயது முதற்கொண்டே இறைசிந்தனையில் முழ்கியிருந்தார். கேள்விகளைக் கேட்டு அதற்கான விடையைத் தேடினார்.

தான் அறிந்த உண்மைகளை “அன்பொளி” கைப்பிரதியில் எழுதி கூடுவாஞ்சேரி புகைவண்டி நிலையத்தில் இலவசமாக விநியோகிப்பார்.

அதைப் படித்த ஒருவர் “என்ன எவ்வளவு பெரிய விஷயங்களை எளிமையாக இலவசமாக கொடுத்துப் போகிறார்” என்று பிரமித்தார்.

அங்குள்ள புகைவண்டி நிலைய ஸ்டேசன் மாஸ்டரிடம் “ யார் இந்த மனிதர்? “ எனக் கேட்டார்.

“அது . ஒரு பைத்தியம். அதற்கு வேறு வேலை இல்லை” என்று பதில் வந்தது.

இறைசிந்தனையுடன் உலாவிய அந்த பைத்தியத்தின் பின்னால்தான் இப்போது லட்சக்கணக்கான பைத்தியங்கள் சுற்றுகின்றன.


“ மனிதனின் மறுமுனை கடவுள். கடவுள்தான் நீயாக வந்திருக்கிறாய் என்ற உணர்வுடன் எப்போதும் இரு. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாழினைப் பற்றிக் கொண்டிரு” என்பது மகரிசியின் வைரவரிகளாகும்.

# 10. கடவுளைக் காணலாம்

கடவுளைக் காணலாம் என்கிறார் வேதாத்திரி மகரிசி.

கடவுளைக் காணமுடியுமா என்றால் காணமுடியும். எந்த கண்ணால் பார்க்க வேண்டுமோ, எந்த நோக்கத்தோடு பார்க்க வேண்டுமோ, அப்படிப் பார்த்தால் காணலாம்.

ஒரு செயல் செய்கிறோம். எந்தச் செயல் செய்தாலும் ஒரு




விளைவு இருக்கிறதல்லவா?

கையைத் தட்டினேன். சத்தம் வந்தது. கையைத் தட்டினவரைக்கும் தான் என்னுடைய முயற்சி.

சப்தம் நான் செய்தேனா,ஒலியை நான் செய்தேனா, நான் கொண்டு வந்தேனா? - இல்லவே இல்லை.

இருப்பில் இருந்து. என்னுடைய செயலினால் குவிந்தது, காது கேட்கின்ற அளவுக்குக் குவிந்தது, அவ்வளவு தான் சொல்லலாம். ஆகவே இறைவன் இல்லாத இடமே இல்லை.

நீ எந்தச் செயலைச் செய்தாலும் அதற்கு விளைவாக வருபவனும் இறைவன் தான். அதுதான் இறைவனுடைய செயலே.

அந்தச் செயல் அதனுடைய அனுபவத்தை வைத்துக் கொண்டு நல்ல செயலாக இருக்க வேண்டும் என்று சிந்தனையோடு திட்டமிட்டுச் செய்வோமானால் நலமே விளையும்.

இல்லை, புலனளவில் கவர்ச்சியாகி மயக்கத்திலே ஏதோ வேகத்திலே செய்கின்ற போது இன்பமும் வரலாம், துன்பமும் வரலாம்.

இன்பம் வேண்டும், அமைதி வேண்டும் என்றால் அதற்கு இறையுணர்வு, அறநெறி இரண்டும் வேண்டும்.

கடவுளைக் காணலாம் என்பதை இராமகிருஷ்ணர் ஒரு கதையின் மூலம் விளக்குகிறார்.

குரு ஒருவரை, அவருடைய சீடன் கேட்டான், "குருவே, இறைவனைக் காணும் வழியை எனக்குச் சொல்லுங்கள்", என்று.

அவரும், "என்னுடன் வா, காட்டுகிறேன்", என்று கூறி, அந்த சீடனை அருகிலிருந்த ஒரு ஏரிக்கு அழைத்துச் சென்றார்.

இருவரும் தண்ணீரில் இறங்கினர். திடீரென்று, குருவானவர், சீடனின் தலையைப் பிடித்துத் தண்ணீருக்குள் அழுத்தினார். சில நிமிடங்கள் கழித்துதான் அவனை விடுவித்தார். மூச்சுத் திணறிக் கொண்டிருந்த சீடன், ஒருவழியாக விடுபட்டு எழுந்து நின்றான்.

"எப்படி இருந்தது?", என்று குரு கேட்டார்.

"என்னால் மூச்சே விட முடியவில்லை. தவித்துப் போய் விட்டேன். செத்து விடுவேன் என்றே நினைத்தேன்", என்றான் சீடன்.

"இதைப் போலவே சுவாசத்தை இழந்தாற்போல இறைவனுக்காக எப்போது தவிக்கிறாயோ, அப்போது அவனைக் காண்பாய்", என்றார், குரு.

# 26.ஆசைகள் பற்றி அருளாளர்கள்.

ஆசை என்பது ஒரு எண்ணம். ஆசை என்ற எண்ணத்தை விரும்பம், அவா, பற்று, இச்சை, வேட்கை, காமம், காமம், வேண்டுதல் எனப் பலவாறாக அழைக்கிறார்கள்.

மனிதன் உயிர் வாழ்வதால் பசி, தாகம், உடல் வெப்ப ஏற்றத்தாழ்வு, கழிவுப் பொருட்களின் உந்துவேகம் போன்ற இயற்கை துன்பங்கள் ஏற்படுகின்றன.

உயிர் வாழ்தல் என்ற காரணம்தான் ஆசைக்கு மூல காரணமாகிறது. இவற்றின் காரணமாகத் தேவையும் ஆசையும் ஏற்படுகின்றன.

ஆசையின் மறுமலர்ச்சியே பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வுதாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற ஆறு தீய குணங்கள்.

மிகக் கவனமாக முயன்று எப்படியோ ஒரு விதமாக இந்த உலகியல் ஆசைகளைக் கடந்து விட்டால் அவை கருணை, தயை போன்ற போர்வைகளில் நம்மையும் அறியாமல் நம்முள் புகுந்துவிடும்.

மனதின் இத்தகைய பசாங்குகளை எடுத்து விளக்கி, "நாம் எப்போதும் விழிப்பாக இருந்து ஆசைகளின் வலையில் விழாமல் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்" என்று இராமகிருஷ்ணர் சொல்வது வழக்கம்.

இராமகிருஷ்ணரிடம் சென்ற ஆண், பெண் இரு பாலரும் அவரது இனிய இயல்பாலும், கனிவாலும், துளியும் காமக் கலப்பற்ற பேரன்பாலும் கவரப்பட்டார்கள்.

ஆகவே வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இராமகிருஷ்ணரிடம் சென்று அவரது அன்பில் திளைக்க அவர்கள் ஒவ்வொருவரும் விரும்பினார்கள்.

தாங்கள் சென்றது மட்டுமின்றி தங்களுக்குத் தெரிந்த பலரையும் அவர்கள் இராமகிருஷ்ணரிடம் அழைத்துச் சென்றனர்.

ஒரு நாள் மலை, ஒரு பெண்மணியும் அவளது ஒன்றுவிட்ட சகோதரியும் அந்தச் சகோதரியின் நாத்தனாரும் இராமகிருஷ்ணரைத் தரிசிக்கும் பொருட்டு தட்சிணேசுவரத்திற்குச் சென்றார்கள்.

அவர்கள் இராமகிருஷ்ணரின் அறைக்குச் சென்று அவரை வணங்கிவிட்டு அமர்ந்தனர்.

வழக்கம் போல் முதலில் அவர்களிடம் நலன் விசாரித்துவிட்டு இராமகிருஷ்ணர் பேச ஆரம்பித்தார்.

இறைவனிடம் பக்தி செலுத்துவது தான் வாழ்க்கையின் குறிக்கோள் என்பது குருதேவரின் அன்றைய உரையாடலின் முக்கிய கருத்தாக இருந்தது.

இறைவனிடம் பக்தி செலுத்துவது அவ்வளவு சுலபமல்ல என்பதை விள்க்கிய இராமகிருஷ்ணர் தொடர்ந்து கூறினார்.

இறைவனிடம் ஒருவர் எளிதாகச் சரணடைந்துவிட முடியுமா? மகாமாயையின் வழிகள் மனிதனின் சிற்றறிவுக்கு எட்டாதவை! கடவுளை எளிதில் அடைய அவள் விட்டுவிடுவாளா என்ன?

உலகில் பற்று ஏற்படுவதற்கு உறவினர்கள் என்று யாருமே இல்லாதவனாக ஒருவன் இருந்தாலும், அவனிடம் ஒரு பூனையைக் கொடுத்து அதனிடம் பற்றுக் கொள்ளும்படி மகாமாயை செய்து விடுகிறாள்.

அவனும் அந்தப் பூனையே முழு உலகமும் என்று நினைத்து அதற்கு வேண்டிய பாலுக்காக அலைந்து திரிந்தபடியே, “நான் என்ன செய்வது? இது பாலையும் மீனையும் தவிர வேறு

எதையும் சாப்பிட மாட்டேன் என்கிறதே!" என்று சொல்லிக் கொண்டு அதைப் பராமரிப்பதிலேயே வாழ்நாளைச் செலவிட்டு விடுகிறான்.

இராமகிருஷ்ணர் இன்னும் ஒரு உதாரணம் சொல்கிறார்.

விதவை ஒருத்தி இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவளுடைய குழந்தைகளும் இறந்துவிட்டார்கள். சொந்தபந்தம் என்று சொல்லிக் கொள்ளவும் அவளுக்கு வேறு யாரும் கிடையாது. இருக்கும் ஏதோ ஓரிருவர் கூட விதவைகள்.

வீட்டை எடுத்துக் கொண்டால், சில பகுதிகள் சிதிலமடைந்து விட்டன. மற்ற பகுதிகளும் இன்றோ நாளையோ இடிந்து விழும் நிலையில் இருக்கின்றன.

மாடிச் சுவர்களில் ஆலமரச் செடிகள் முளைக்க ஆரம்பித்து விட்டன. அவற்றின் இடையே, அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பசலைக்கீரைக் கொடிகளும் கூரையின் மேல் படர்ந்துள்ளன.

அந்தப் பெண்ணின் மனம் முழுவதும் பசலைக் கீரையைப் பறிப்பதிலும், பொறியல் செய்து உண்பதிலுமேயே இருக்கிறது.

இப்படி ஒரு சம்சாரத்தை உருவாக்கி, அந்த விதவைகள் அதிலேயே உழன்று கொண்டிருப்பார்கள். அவர்கள் ஏன் இறைவன் திருவடிகளில் சரணடைவதில்லை?

அதற்கு இது அல்லவா சரியான நேரம்? ஆனால் அவர்கள் அப்படிச் செய்யவே மாட்டர்கள்.

திருமணமானதும் கணவனை இழந்த ஒருத்தி இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவளுக்குக் குழந்தைப் பேற்றுக்கும் கூட வழியில்லை. அவள் ஏன் கடவுளைச் சரணடையக் கூடாது?

ஆனால் அப்படிச் செய்ய மாட்டாள்! அவள் தன் சகோதரனின் வீட்டுக்குக் காவலாக இருப்பாள்.

கூந்தலை அள்ளி முடிந்து கொண்டு சாவிக் கொத்தைப் புடைவைத் தலைப்பில் கட்டிக் கொண்டு கண்டிப்பான பார்வையுடன் எல்லோருக்கும் உத்திரவு போட்டுக் கொண்டு வீட்டில் இருப்பவர்களை ஆட்டி வைத்துக் கொண்டிருப்பாள்.

அவளது கெடுபிடியும் ஆர்ப்பாட்டமும் அக்கம்பக்கத்தாரைக் கூட அருகில் வரவிடாமல் செய்து விடும்.

“என்ன செய்வது, நான் மட்டும் இங்கு இல்லை என்றால் என் சகோதரனுக்கு ஒருவேளை உணவுகூடக் கிடைக்காது!” என்றெல்லாம் சொல்லிக் கொண்டு திரிவாள்.

ஆ! இவளெல்லாம் பெண்தானா! தன்னுடைய நிலையை அவள் ஏன் நினைத்துப் பார்க்க கூடாது?

வந்திருந்த மூன்று பெண்களும் இராமகிருஷ்ணர் கூறியதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருத்தி அன்றுதான் முதல் முறையாக குருதேவரிடம் வந்திருந்தாள். குருதேவர் தற்செயலாகக் கூறுவதுபோல் பேசினாலும் அது அவளையே குறிப்பது போலிருந்தது.

ஏனென்றால் அப்போது அவளும் குருதேவர் தமது உதாரணத்தில் குறிப்பிட்ட விதவையைப்போல தன் சகோதரன் வீட்டில் இருந்துகொண்டு அதிகாரம் செய்பவளாக இருந்தாள்.

அவளைப் பற்றி குருதேவரிடம் யாரும் முன்பே சொல்லவில்லை.

தாமாகவே அவர் இந்த உதாரணத்தைக் கூறி, ஆசைகள் மனிதனை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கின்றன, எப்படி பல்வேறு நிலைகளில் ஆசை செயல்படுகிறது என்பதை விள்ககினார்.

இராமகிருஷ்ணரின் சொற்கள் அந்தப் பெண்ணின் உள்ளத்தில் ஆழப் பதிந்திருக்கும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

"ஆசையை ஒழிக்கச் சொன்ன பெரியவர்கள் அந்த ஆசை ஒழிப்பை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு திட்டத்தை தரவில்லை." என்கிறார் மகரிசி. மகரிசியின் ஆசைச் சிந்தனைகளை சிந்திப்போம்.

இறைவனை அடைய வேண்டும் என்ற ஒரு வேகம் கொண்ட ஆசையை அந்த இறைவனை அடையக்கூடிய வழியிலே திருப்பி விடாததனால், அங்கே போய் அதற்கு ஒரு இணைப்புக் கொடுக்க முடியாததனால், வாய்ப்பு இல்லாததனால், வழிகாட்டக் கூடியவர்களோடு தொடர்பு கொள்ளாததனால் இந்த தேக்கமுற்ற ஆசை எந்தப் பொருள் கண்மீதுபடுகிறதோ, எந்தப் பொருள் நம் கருத்திற்கு எட்டுகிறதோ, எந்த இன்பத்தில் நாம் தொடர்பு கொள்கிறோமோ, அதுவே வேண்டும், அது இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று அங்கேயே வளர்கிறது.

மலையில் புறப்படுகிறது ஓடை. சிறுகச் சிறுகப் பெரிதாகி ஆறாக வருகிறது.

குட்டை, குளம், ஏரி, அணைக்கட்டு எல்லாம் தாண்டியும் மேலும் ஓடுகிறது.

ஏனென்றால் கடைசியாகக் கடலிலே கலந்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்.

எங்கெல்லாம் இருந்த வேகம், தடுக்க முடியாத வேகம், தடுத்தாலும் நின்று நின்று, மீண்டும் பெருக்கெடுத்து வந்த வேகம் கடலிலே கலந்த பிறகு எங்கே போயிற்று.

அங்கே அதை அடைய வேண்டும் என்ற போது கடலிலேதான் பிறந்தது அது.

கடலிலேயிருந்து ஆவியாகி, மேகமாகி. மழை பொழிந்து மீண்டும் கடலை நோக்கித்தான் வரவேண்டும் தண்ணீர் எங்கேயிருந்தாலும்.

அதேபோன்று எந்த ஜீவனாக இருந்தாலும், அது இறைநிலையை நோக்கியேதான் போய்க் கொண்டிருக்கிறது.

அதனால் புலன்கள் அளவிலேயே விடும்போது அந்த நோக்கத்தை இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும் என்று வருகிறது.

அந்த இன்னும் வேண்டும் என்பது, மனிதனிடத்தில் வந்த ஆறாவது அறிவுக்குத்தான் இறைநிலையை அடைய வேண்டும் என்ற வேகம் அதிகரிக்கிறது.

ஆகையால் மனிதனிடம்தான் ஆசை பேராசையாக மாறுகிறது. மனிதன் தான் தடுக்க வேண்டும். உணர்ந்து தடுக்க வேண்டும்.

ஆகவே ஆசையை ஒழித்து விட முடியாது. ஒழிக்கவும் கூடாது. ஒழிக்க முடியாது. அந்த எண்ணத்தையே ஒழித்து விட வேண்டும்.

ஆசை நிறைமனமாக மாறிய உடனே மிச்சப் பொருள் சேர வேண்டிய இடத்திற்குச் சேரும்போது ஈகையாக மாறிவிடுகிறது.

தனக்கு போதும் என்ற அளவு எண்ணிய உடனே மனம் நிறைந்து போகிறது. இன்னும் வேண்டும் என்ற ஆசை போய்விட்டது.

அதற்கு அடுத்தப்படியாக மீதம் உள்ளது மற்றவர்களுக்குச் சேரட்டும் என்றபோது ஈகையாக மாறிவிடுகிறது.

அனுபவிக்காமல் சேர்த்து வைத்திருக்கக்கூடிய ஆசைகள் எவ்வளவோ, அந்த அளவுக்கு மனிதனுடைய மனம் வீழ்ச்சி அடையும்.

பலவீனம் வரும். செயலற்றுப் போகும். மனஇறுக்கம் Depression என்று சொல்லக்கூடிய சோர்வு உண்டாகும். ஏமாற்றம் உண்டாகும். அந்த முறையில் மனிதன் மதிப்பற்றுப் போகிறான்.

வேதாத்திரி மகரிசி தான் ஆசையை முறைப்படுத்திக் கொள்வதற்கு ஒரு நடைமுறைப் பயிற்சித் திட்டத்தை வகுத்துத் தந்துள்ளார்.

இது மனவளக்கலையில் சொல்லித் தரப்படுகிறது. விருப்பமும் முயற்சியும் உடையவர்கள் நச்சயம் வெற்றி பெறலாம்.

அதுதான் ஆசை ஒழுங்கு என்ற தற்சோதனைப் பயிற்சி.

# 27.தியானம் எப்படி இருக்க வேண்டும்?

இராமகிருஷ்ணர் - நான் ஆன்மிக சாதனைகளில் ஈடுபட்டிருந்த அந்த நாட்களில் தியானம் செய்யும்போது, என் அருகில் ஒருவன் கையில் சூலம் ஏந்தி உட்கார்ந்திருப்பதைத் தெளிவாகக் கண்டேன்.

“இறைவனுடைய பாத கமலங்களில் உன் கருத்தைச் செலுத்தாவிட்டால், இந்தச் சூலத்தினால் உன் மார்பை இரண்டாகப் பிளந்து விடுவேன்” என்று கூறி அவன் என்னை பயமுறுத்துவது வழக்கம்.

அன்னை பராசக்தியின் கருணையால் சில சமயங்களில் என் மனம் நித்திய நிலையிலிருந்து இறங்கி லீலை நிலைக்கு வரும்.

வேறு சமயங்களில் லீலை நிலையிலிருந்து நித்திய நிலையை நோக்கிச் செல்லும்.

லீலை நிலைக்கு என் மனம் இறங்கி வரும்போது, சீதாராம உருவத்தை இரவு பகலாகத் தியானத்தபடியே இருப்பேன்.

சீதாராமரின் காட்சி தொடர்ந்து அப்போது எனக்குக் கிடைத்தது வந்தது.

சாத்வீக சாதகன் மனமுருகி அருள் தாகத்துடன் இறைவனைக் கூவி அழைக்கிறான். அல்லது அவருடைய புனிதமான நாமத்தை இடைவிடாமல் ஜபம் செய்கிறான்.

இறைவனிடமிருந்து அவன் எந்த வகையான பயனையும் எதிர்பார்ப்பதில்லை.

ஆழ்ந்த தியானத்தில் வெளி உணர்வு மறைந்துவிடுகிறது.

வேடன் ஒருவன் ஒரு பறவையைக் குறி வைக்கிறான். அப்போது அவன் அருகில் ஒரு திருமண ஊர்வலம் செல்கிறது.

அதில் பலர் செல்கிறார்கள். மேளதாளங்கள், குதிரை வண்டி, மாட்டு வண்டி இப்படியாக என்னென்னவோ சென்று கொண்டிருக்கின்றன.

ஆனால் வேடனுக்கோ இதுபற்றி எதுவும் தெரிவதில்லை. தனதருகில் இப்படி ஒரு பெரிய ஊர்வலம் சிறிது நேரம் சென்றது என்பதையே அவன் அறிய மாட்டான்.

ஒருக் குளக்க்ரையில் ஒருவன் தனிமையில் உட்கார்ந்து கொண்டு மீன் பிடிக்கிறான். நீண்ட நேரத்திற்குப் பிறகு தூண்டிலில் சிறிது அசைவு ஏற்படுகிறது.

இடையிடையே அந்தத் தூண்டில் தண்ணீரில் சிறிது ஆழ மூழ்குகிறது. இந்த நிலையின் மீன் பிடிப்பவன் தூண்டிலை மேலே இழுக்க முயற்கிறான்.

அப்போது வழிபோக்கன் ஒருவன் அவன் அருகில் வந்து, “அய்யா, பானர்ஜி என்பவரின் வீடு எங்கே இருக்கிறது என்று சொல்கிறீர்களா?” என்று கேட்கிறான்.

அதற்கு மீன் பிடிப்பவனிடமிருந்து பதிலே இல்லை. அப்போது அவன் தூண்டிலை மேலே இழுப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கிறான்.

வழிப்போக்கனோ திரும்பத் திரும்ப உரத்த குரலில், “அய்யா! பானர்சிஜியின் வீடு எங்கே என்று சொல்ல மாட்டீர்களா?” என்று கேட்கிறான்.

மீன் பிடிப்பவனுக்கு வெளி உணர்வே இல்லை. கை நடுங்குவதுபோல் அசைகிறது. அவன் பார்வை முழுவதும் தூண்டில் மீது மட்டுமே நிலைத்திருக்கிறது!

இந்த நிலையில் வழிப்போக்கன் வெறுப்படைந்து அங்கிருந்து சென்று விடுகிறான். வெகுதூரம் சென்று விடுகிறான்.



அந்த சமயம் தூண்டில் முள் மூழ்குகிறது. உடனே மீன் பிடிப்பவன், மீனும் தூண்டிலுமாக மீனை வெளியே எடுக்கிறான்.

பிறகு முகத்தில் வியர்வைளைத் துடைத்துக்கொண்டு உரத்த குரலில் அந்த வழிப்போக்கனைக் கூப்பிடுகிறான்.

“அய்யா, இங்கே வாருங்கள்” இவ்விதம் மீன் பிடிப்பவன் நீண்ட நேரம் கூப்பிட்ட பிறகு வழிப்போக்கன் திரும்பி வருகிறான்.

அருகில் வந்ததும், “என்ன அய்யா, ஏன் என்னைக் கூப்பிடுகிறீர்கள்?” என்று கேட்கிறான்.

அதற்கு மீன் பிடிப்பவன், “நீ என்னிடம் என்ன கேட்டாய்? என்று வினவுகிறான்.

அந்த வழிப்போக்கன், “முன்பு எத்தனை தடவை உன்னைக் கேட்டேன்? இப்போது என்ன கேட்டேன் என்று கேட்கிறாயே?” என்கிறான்.

“தூண்டில் முள் அவ்போது தண்ணீரில் மூழ்கியிருந்தது. எனவே என் மனம் அதில் ஒன்றி இருந்தது. என் காதில் நீ கேட்டது ஒன்றும் விழவில்லை” என்கிறான் மீன் பிடிப்பவன்.


தியானத்தில் இது போன்ற குவிந்த மனநிலை ஏற்படுகிறது. அந்த நிலையில் சாதகன் எதையும் பார்ப்பதில்லை. எதையும் கேட்பதில்லை. தொட்டால் கூட உணர்வதில்லை.

இந்த நிலை ஒரு வீட்டின் வெளிக் கதவைத் தாளிடுவது போன்றது. ஓசை, சுவை, நாற்றம், ஊறு, ஒளி ஆகிய ஐம்புலன்களும் இதனால் வெளியே நின்று விடுகின்றன.

முதன் முதலில் தியானம் பழகும் போது புலன்களின் விஷயங்களெல்லாம் மனக்கண்முன் நிற்கும்.

ஆனால் ஆழ்ந்த தியானத்தில் அவைகள் மனதில் தோன்றுவதில்லை. அப்போது அவைகள் வெளியிலேயே வீழ்ந்து கிடக்கும்.





தியானம் பழகும்போது நான் எவ்வளவு ஆன்மீக காட்சிகளைப் பார்த்திருக்கிறேன்!

வண்டி நிறையப் பழம், விலை உயர்ந்த சால்வைகள், தட்டு நிறைய இனிப்பு, பெரிய மூக்குத்தி அணிந்த இரண்டு அழகிய பெண்கள் எல்லாம் என் கண்முன் காட்சியளிக்கும்.

அப்போது நான் என் மனதைக் கேட்பேன், "மனமே, நீ எதை விரும்புகிறயா? நீ எதாவது இன்பம் அனுபவிக்க விரும்புகிறயாயா?"

என் மனம், "இல்லை. இறைவனின் பாத கமலங்களைத் தவிர வேறு எதையும் நான் விரும்பவில்லை" என்று உடனே பதிலளிக்கும்.

பெண்களின் உள்ளும், புறமும், கண்ணாடி அறையில் வைக்கபட்டிருக்கும் பொருள்களைப் போலத் தெளிவாகத் தெரிந்தன. நரம்புகள், ரத்தம், மலம், மூத்திரம், எச்சில் இவை எல்லாம் பெண்ணின் உடலுக்குள் இருப்பதைக் கண்டேன்.

ஒரு முறை நான் வில்வ மரத்தடியில் தியானம் செய்து கொண்டிருந்தேன்.


அப்போது, பாவம் என் முன் ஒரு மனிதனின் உருவமெடுத்து எத்தனை விதமான ஆசைகளைக் காட்டியது தெரியுமா?

ஓர் ஆங்கிலேய வீரனைப் போல் அது தோன்றியது. பணம், பொன், பெயர். புகழ், சிற்றின்பம், பலவித சித்திகள் இவைகளையெல்லாம் எனக்குக் கொடுக்க அது விரும்பியது.

நான் உடனே அன்னை காளியிடம் பிரார்த்தனை செய்தேன். இப்போது....நான் உங்களுக்கு ஒரு பரம ரகசியத்தைச் சொல்கிறேன், கேளுங்கள்.

அன்னை காளி எனக்குக் காட்சி தந்தாள். அவளிடம் நான், "தாயே (பாவத்தின் வடிவமான) அவனைக் கொன்று விடு" என்று கூறினேன்.

அன்னையின் அந்த அற்புதமான உருவம்-அந்த புவனமோகினி உருவம்-என் மனக்கண் முன் இப்போதும் தெரிகிறது. அவளுடைய பார்வையில் உலகமே அசைந்தாடுவது போலத் தோன்றியது.



“ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி, நுட்பம், சக்தி இவை யதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலே நிலைத்து விடும். ஆழ்ந்து ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கைமுறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.”

- வேதாத்திரி மகரிசி

மனதை ஒரு நிலைப்படுத்த முதலில் மனதை வளப்படுத்த வேண்டும். அலைபாயும் மனதை உயிரில் ஒடுக்க பயிற்சி எடுக்க வேண்டும். இந்தப் பயிற்சி மனவளக்கலையில் சொல்லித்தரப்படுகிறது.

உணர்ச்சி நிலையில் இருக்கும் மனதை அமைதி நிலைக்கு கொண்டு வருவதே தியானம். தியானம் எப்படி இருக்க வேண்டும்?

மனதை ஒன்றி, ஒன்றி ஒரு நிலைப்படுத்தி பழக்க வேண்டும். பழகப் பழகப் பழக்கம் விளக்கமாகி விடும். தியானமே வாழ்க்கையாகி விடும்.







# 28. கடவுள் கண்காணிக்கிறார்.

இராமகிருஷ்ணர் நுட்பமான வேதாந்த உண்மைகளைக் கதைகளின் வாயிலாகவும், மிகமிக எளிமையான உதாரணங்கள் மூலமாகவும் விளக்கியிருக்கிறார்.

மக்களுக்கு எதைச் சொன்னால் இரசிப்பார்களோ, சுவையாக இருக்குமோ, அவற்றை இராமகிருஷ்ணர் தமது உதாரணங்களிலும் கதைகளிலும் சொல்லவில்லை.

மக்களுக்கு எது தேவையோ, எது உண்மையான நலனை அவர்களுக்குத் தருமோ, அவற்றையே இராமகிருஷ்ணர் தமது உதாரணங்களிலும், கதைகளிலும் சொல்லியிருக்கிறார்.

கேட்பவர்களைச் சிரிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவோ, எதையாவது பேசிப் பொழுதைப் போக்க வேண்டும் என்பதற்காகவோ இராமகிருஷ்ணர் இந்த உதாரணங்களையும் கதைகளையும் சொல்லவில்லை.

உலக மக்களின் உள்ளம் உயர வேண்டும் என்பதற்காகவே, உயர்ந்த ஓர் உண்மையை விளங்க வைப்பதற்காக, இராமகிருஷ்ணரிடமிருந்து எழுந்த எழிலமிக்க உதாரணங்களும் கதைகளும் அற்புதமானவை.

மனிதனும் தெய்வமும் ஒன்றுதான். என்ன மூலத்திலிருந்து பின்னப்பட்டு வந்த நிலைதான் மனிதன்.

அதனால் தான் மூலம் பின்னத்தை கண்காணித்து வருகிறது. இதனை இராமகிருஷ்ணர் மிக எளிமையாக விளக்குகிறார்.

அது ஒரு பெரிய செல்வந்தருடைய வீடு. அதில் உள்ள ஒரு பெரிய அறையில், செல்வந்தரை சந்திக்க வருபவர்கள் சந்தித்து பேசுவது வழக்கம்.

அந்த பெரிய அறைக்கு மேலே மூன்று சிறிய அறைகள் இருந்தன. அந்த சிறிய அறைகளின் ஜன்னல்களில்இருந்த திரை சீலைகளின் வழியாக, செல்வந்தரை சந்திக்க யார் யார் வருகிறார்கள், பெரிய அறையில் என்னென்ன நடக்கிறது என்பதை பார்க்க அந்த வீட்டிலிருந்த பெண்களால் பார்க்க முடியும்.

ஆனால் செல்வந்தரை காண வருபவர்களுக்கு அந்த பெண்களைப் பார்க்க முடியாது.

அதுபோல நம் எல்லோரிடமும் இறைவன் குடி கொண்டிருக்கிறார். ஆனால் நம்மால்தான் நம்முள் இருக்கும் இறைவனை காண முடிவதில்லை.

நாம் எண்ண எண்ணுகின்றோம். என்ன பேசுகிறோம். என்ன் செயல்கள் செய்கிறோம் என்பதையெல்லாம் பார்தத்து நம் கர்ம வினைகளுக்கேற்ப பலன்களை இறைவன் கொடுத்து வருகிறார்.

ஆகவே நாம் எல்லா சூழ்நிலைகளிலும் சத்தியத்தைக் காத்து, தர்ம வழியில் நடந்தால் தர்மதேவதை என்றென்றும் நமக்கு பாதுகாப்பு கவசமாக இருந்து நம்மை பாதுகாப்பான் என்பதில் சந்தேகமில்லை."

இந்தக் கருத்தைத்தான் வேதாத்திரி மகரிசி "செயல்விளைவுத் தத்துவம்" என்று மானுடத்திற்குச் சொல்லிக் கொடுத்துள்ளார்கள்.

"இறையாற்றலின் தன்மைகளையும் சிறப்புக்களையும் அறியாமலோ, அலட்சியம் செய்தோ, உணர்ச்சிவயத்ததால் தன்முனைப்பு கொண்டோ அளவு மீறியும், முறைமாறியும்மன

ஆற்றல் செயல்புரியும் போது. அச்செயலுக்கேற்ப ஏற்படும் துல்லியமான விளைவுதாம் “செயல் விளைவு நீதி” என்று வழங்கப்படுகிறது என்கிறார்கள் மகரிசி.

இந்த தத்துவத்தைத்தான் “கடவுள் நம்மைக் கண்காணிக்கிறார்” என்று உதாரணத்தின் மூலம் இராமகிருஷ்ணர் தருகிறார்.

“செயல்விளைவத்தத்துவத்தை இறைநீதி” என்று எண்ணி, எல்லா ஆற்றலையும் இயக்குகின்ற பேராற்றலாகிய இறை ஆற்றலே மன ஆற்றலாகவும் செயல்புரிகின்றது.

ஜீவன்களிடமிருந்து எழும் செயலுக்குத் தக்கவாறு வருகின்ற விளைவைத் தருவது இறையறிவாகும். இதனை மகரிசி ஒரு கவியில்

“தப்புக் கண்கிட்டுத் தானொன்றை எதிர்பார்த்தால்
ஒப்புமோ இயற்கை விதி? ஒழுங்கமைப்பிற்கேற்றபடி
அப்போதைக்கப்போதே அளிக்கும் சரி விளைவை
எப்போதும் கவலையுற்று இடர்படுவார் இதையுணரார்”

என்று சிறப்பாக விளக்கியுள்ளார்கள்.

எங்கும் நீக்கமற இறையாற்றல் இருப்பதால், எந்த இடத்திலும் அதற்கு முரணான செயல் செய்யும் போதெல்லாம் துன்பமும், அதற்கு ஒத்துழைக்கும் போதெல்லாம் இன்பமும் வெற்றியும் வருகிறது.

“கல்லார் கற்றார் செயல்விளைவாய்
காணும் இன்ப துன்பமவன்”

என்று இறைவன் நமக்கு கர்ம வினைகளுக்கேற்ப பலன்களை தந்து கண்காணித்து வருகிறார்.



# 29.என் நிலமும் உன் நிலமும்

இராமகிருஷ்ணர் தனது சீடர்களுடன் வயற்புறமாகச் சென்று கொண்டிருந்தார்கள்.

ஒரு வயலில் இருவர் கயிறால் அளந்து கோடு போட்டுக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டார்கள்.

"இருவரும் ஏதோ அளந்து கொண்டிருக்கிறீர்களே? என்ன விஷயம்?" என்று இராமகிருஷ்ணர் கேட்டார்.

"இவன் என்னுடைய தம்பி, இந்த நிலம் எங்களுடைய சொத்து. இன்ற முதல் எங்கள் இருவர் குடும்பமும் தனித்தனியாகப் பிரிந்து விட்டது. அதனால் வயலையும் இரண்டாகப் பிரிக்கிறோம். இந்தப் பகுதி என்னுடையது" என்று அண்ணன் கூறினான்.

இராமகிருஷ்ணர் சிரித்தார்.

"நீங்கள் எதற்கு சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"இது என்னுடையது. அது உன்னுடையது என்று நீங்கள் கூறினீர்கள். இதைக் கேட்டு பகவான் சிரித்திருப்பார்.

நிலைத்த தன்மையோ அல்லது சதந்திரமோ இல்லாத ஜீவன் தன்னுடையது என்று சொந்தம் கொண்டாடினால் பகவான் சிரிப்பார் அல்லவா?"

இராமகிருஷ்ணர் கூறியது அந்த எளிய விவசாய சகோதரர்களுக்கு விளங்கவில்லை. உடன் வந்த சீடர்களுக்கு விளங்கியது. சீடர்கள் அந்தச் சகோதரர்களுக்கு விளக்கினார்கள்.

"சகோதரா, நீ இம்மண்ணுலகில் பிறக்கும் பொழுது எதையும் கொண்டு வரவுமில்லை. போகும் பொழுது எதையும் கொண்டு போகவும் முடியாது.

அப்படி இருக்கும்பொழுது பிரிவும், எனது உனது என்ற பேதமும் எதற்கு?" என்று கூறியதும் சகோதரர்கள் இருவரும் சண்டையின்றி ஒற்றுமையாக வாழ்வதாக வாக்களித்து, என் நிலமும் உன் நிலமும் ஒன்றெனக் கூறினார்கள்.

"மண்ணுலகம் யாவருக்கும் சொந்தம் என்ற

மனிதரெலாம் உணாந்தால்மண் ணாசை ஏது?"

- வேதாத்திரி மகரசி

வேதாத்திரி மகரிசி இக்கருத்துப் பற்றி இன்னும் மிகவும் எளிமையாக கூறுகிறார்.


மனிதன் பிறக்கிறான், வாழ்கிறான், மரிக்கிறான், வாழும் காலத்தில் மண்ணின் மீதே உலாவி, மண்ணில் விளையும் பொருள்களை ஆகாரமாக உண்டு, மண்ணிலேயே மறைந்தும் விடுகிறான்.


இதனால் வாழும் காலத்தில் இந்தப் பெரிய உலகமே ஒவ்வொருவருக்கும் சொந்தமாகவே இருக்கிறது. இந்த உண்மையை மறந்து, ஒரு குறிப்பிட்ட இடத்தை மட்டும் தனதெனக் கொண்டு அறிவில் குறுகி நிற்பது ஓர் மயக்கமே என உணர்ந்தால், மண்ணாசை என்பது இருக்காது.


சமூகம் ஒவ்வொரு மனிதனையும் உருவாக்கியது, பண்படுத்தியது, காப்பாற்றுகிறது.

ஒவ்வொரு மனிதனும் அறிவாலும் உடலாலும் சமூகத்திற்கு நன்மையான முறையில் தொண்டு புரிய வேண்டியது முதற்கடமை என்பதை உணர்ந்து கொண்டால், மண், பொன் முதலான பணத்தின் மீது பேராசை கொள்வது ஏற்படுமா?


ஞானமும் வாழ்வும்
அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி


வேதாத்திரி மகரிஷி
வாழ்வில் 100
சுவையான நிகழ்ச்சிகள்


வேதாத்திரி மகரிஷி
பற்றி
100 அறிஞர்கள்
மன்னார்குடி பானுகுமார்


வேதாத்திரி மகரிசியின்
வாழ்வை வளமாக்கும்
எண்ணங்கள்

# 30. ஏன் அவதரித்தார்கள்?

(அவதாரப்புருஷர்கள் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும்.)

ஆயிரமாயிரம் ஆண்டுகளின் பழமை வேர்களைத் தமக்குள் வைத்துக் கொண்டு, எதிர்வரும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கான -நாளை விதைகளையும்- தமக்குள் உயிர்ப் பித்தப்படி மகான்கள் அவதரிக்கிறார்கள்.

“அவதாரம்” என்ற வடமொழிச் சொல் “இறங்கி வருதல்” என்று பொருள்.

கடவுள்- மனித நிலைக்கு இறங்கி வந்து, அதாவது மனிதனாகப் பிறந்து, மனிதகுலம் உய்ய வழி காட்டுகிறார்கள்.

இது பற்றி பகவத் கீதை (4.7.-9), தேவி மகாகாத்மியம் ((11.54,55) போன்ற நூல்கள் -விபரமாகவும் சிறப்பாகவும் கூறுகின்றன.

இறைவன் எதற்காக இறங்கி வர வேண்டும்? ஏன் மனிதனாகப் பிறக்க வேண்டும்? தாம் இருந்த இடத்திலிருந்தே. இருக்கின்ற நிலையிலிருந்தே வழிகாட்ட- அவரலால் முடியாதா?

முடியும், ஆனால் “கருணை காரணமாக” அவர் இறங்கி வருகிறார் என்பதே -இதற்குரிய பதிலாகும்.

இதுகுறித்த பரம்பரைக் கதை ஒன்று உண்டு. ஒருமுறை அக்பர் சக்கரவர்த்தியிடம் -அவரது அமைச்சர்களுள் முக்கியமான ஒருவரான பீர்பால் -அவதார தத்துவம் பற்றி கூறினார்.

அக்பர் அனைத்தையும் கேட்டுவிட்டு , நாம் மேலே கேட்ட கேள்விகளை- பீர்பாலிடம் கேட்டார். பீர்பால் உடனடியாகப்- பதில் எதுவும் சொல்லவில்லை.

ஆம். கடவுள் இருந்த இடத்திலிருந்தே -நினைப்பதை நடத்துகின்ற ஆற்றல் பெற்றவர்தான்” என்று பட்டும்படாமலும் பதில் கூறினார்.

ஆனால் -அவதார தத்துவத்தைச் -சக்கரவர்த்திக்குச் சரியாகப் புரிய வைப்பதற்கான தருணத்தை -எதிர்நோக்கிக் காத்திருந்தார்.

ஒருநாள் சக்கரவர்த்தி, அவரது குடும்பத்தினர், மந்திரிகள், சேனாதிபதிகள் ஆகியோர் படகில்- உல்லாசப் பயணம் புறப்பட்டனர்.

பீர்பாலும் -அந்தப் படகில் இருந்தார். படகு -யமுனையின் நடுப்பகுதியில் சென்றது. அப்போது பீர்பால், சிறுவனாக இருந்த இளவரசனைத்- திடீரென்று தூக்கி நதியில் போட்டுவிட்டார்.

படகிலிருந்த அனைவரும்- வெலவெலத்து திகைத்து நிற்க, சக்கரவர்த்தி- மறுகணமே நதியில் குதித்தார். தொடர்ந்து - படைவீரர்களும் மற்றவர்களும்- நதியில் குதித்தனர்.

சிறிது நேரத்தில்- சக்கரவர்த்தி இளவரசனையும் மீட்டுக் கொண்டு- படகில் வந்து சேர்ந்தார். அந்த நேரத்தில்- நிலைமை எப்படி இருந்திருக்கும் என்பதை -நம்மால் ஊகிக்க முடியும். பீர்பால் உயிரிழப்பது உறுதி -என்பதில் ஐயம் இல்லை.

ஆனால் -அறிவாளியும் மேதையுமான பீர்பால்- ஏன் இத்தகைய ஒரு காரியத்தைச் செய்தார் என்பதை அறிய- சக்கரவர்த்தி விழைந்தார்.

“சக்கரவர்த்தி என்னை மன்னிக்க வேண்டும்” என்ற பீடிகையுடன் -ஆரம்பித்தார் பீர்பால்.

தொடர்ந்து, “இத்தனை சேனைகளும் படைகளும் இருக்க- இளவரசனைக் காப்பாற்ற- தாங்கள் ஏன் நதியில் குதிக்க வேண்டும்? படைவீரர்களிடம் ஆணையிட்டுவிட்டு- படகில் அமைதியாக உட்கார்ந்திருக்கலாமே?” என்று கூறினார்.

சக்கரவர்த்திக்கு எல்லாம் விளங்கியது. அவதார தத்துவத்தைத் -தமக்கு உணர வைப்பதற்காகவே- பீர்பால் இத்தகையதொரு காரியத்தைச் செய்தார் என்பதைப் புரிந்து கொண்டார் அக்பர்.

இறைவன்- உயிர்கள் மீதுள்ள அளவற்ற கருணை காரணமாகவே அவதரக்கிறார்.

மானுடத்தின் மீது கொண்ட கருணை காரணமாகப் -பூமியில் அவதரித்தவர்கள் இராமகிருஷ்ணரும் வேதாத்திரியும்.

ஒரு சாதாரண மனிதனையும் -மகானையும் -அவதாரத்தையும் இனம்கண்டு கொள்ள வேண்டும்.

அவதார புருஷர்கள் -உலகிற்கு ஒரு செய்தியுடன் வருகின்றனர். அவர்கள் வாழும்போது -ஒரு சிலர் மட்டுமே -அவர்களை அடையாளம் காண முடிகிறது.

ஆனால் -அவர்கள் மறைந்தபின் அவர்களின் வாழ்வும் செய்தியும் -புதுவேகத்துடன் பொங்கியெழுந்து -உலகையே ஆட்கொள்கின்றன.

ஆன்மீகம் மட்டும் அல்ல, சமயம், சமுதாயம், அரசியல், பொருளாதாரம், கலை , விஞ்ஞானம் என்று -ஒவ்வொரு துறையிலும்- அவை புகுந்து, அவற்றிற்கு ஒரு பரிணாமத்தைக் கொடுக்கின்றன.

இராமகிருஷ்ணர், வேதாத்திரி மகரிசி வாழ்க்கை அத்தகைய ஒன்று. இன்று அவர்கள் பெயரால் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளைக் காண்கின்ற யாரும்- இந்த உண்மையைப் புரிந்து கொள்ள இயலும்.

அது மட்டுமல்ல. அவதார புரஷர்கள் -தங்கள் செய்தியை மனிதகுலம் முழுமைக்கும் பரப்புவதற்காக- ஒரு பதிய பரம்பரையை உருவாக்கி விட்டுச் செல்கின்றனர்.

இன்று -உலகெங்கும் அறியப்படுகிகின்ற ராமகிருஷ்ண மடம் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் என்னும் இரட்டை இயக்கங்கள் - பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் -சுமார் 16 இளைஞர்களைத் துறவிகளாக்கி, அவர்கள் மூலம் ஆரம்பித்து வைத்த புதியதோர் -ஆன்மீகப் பரம்பரையின் தொடர்ச்சிகளே.

அவ்வாறே - இன்று உலகெங்கும் அறியப்படுகின்ற அறிவுத்திருக்கோயில் மற்றும் மனவளக்கலை மன்றங்கள் என்னும் இரட்டை இயக்கங்கள்- அருட்தந்தை வேதாத்திரிமகரிசி- ஆயிரமாயிரம் பேராசிரியர்களை உருவாக்கி, அவர்கள் மூலம் ஆரம்பித்து வைத்த புதியதோர் -ஆன்மீகப் பரம்பரையின் தொடர்ச்சிகளே.

நாட்டில் எங்காவது குழப்பம் நேர்ந்தால் -அதனைச் சீர்செய்வதற்கு- முதலில் மன்னன் சிப்பாயை அனுப்புவான்., சிப்பாயால் அடக்க முடியாத நிலை என்றால்- சேனாதிபதியை அனுப்புவான்.

அவனாலும் முடியாவிட்டால்- மந்திரியை அனுப்புவான். நிலைமை கட்டுப்பாட்டை மீறுவதுபோல் தோன்றினால், தானே நேரடியாகச் சென்று -நிலைமையை ஆராய்ந்து சீர்ப்படுத்தி வருவான்.

அப்படி அரசனே வருது போன்றதுதான் அவதாரம். சிப்பாய், சேனாதிபதி போன்றவர்கள்- சாதாரண மகான்கள்.நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறார்கள்.

அவதாரப் புருஷர்கள் மறைவதில்லை. வான்காந்தத்தில் இருந்து கொண்டு- மானுடத்தை வழிநடத்திச் செல்கின்றனர். அவர்கள் நம்மை வழிநடத்துகிறார்கள்.

பக்தி, முக்தி, ஞானம் . பணம், பதவி, உலக சுகங்கள் என்று எதை வேண்டுமானாலும்- கேளுங்கள். கேட்பதை நீங்கள் பெறுவிர்கள்.

மானுடத்தின் பிரார்த்தனைகளை- அவர்கள் கேட்கிறார்கள். அவர்களை வழி நடத்துகிறார்கள். அவர்களின்- ஆசைகளை நிறைவேற்றுகிறார்கள். இதயதாகத்துடன் அழைப்பவர்கள் அவர்களைக் காண்கிறார்கள்.


ராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும்- இன்றும் வாழ்கிறார்கள், நமது பிரார்த்தனைகளைக் கேட்கிறார்கள் என்பது நம்மில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சுகிறது.

நம்பிக்கை - வாழக்கையில் நமது முதல் தேவை அதுதான். முற்றிலும்- இன்பமயமாகவே வாழ்க்கை அமைவதில்லை. துன்பங்கள், கவலைகள், பிரச்சனைகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள் இவை இல்லாத வாழ்க்கை இருக்க இயலாது.

உலகின் துணை எதுவும் உதவ முடியாத அந்த வேளைகளில்- நாம் அண்ணாந்து பார்ப்பதற்கு ஒருவர் வேண்டும்.

அவர் கருணைமயமானவராக இருக்க வேண்டும். நமது குற்றங்குறைகளைப் பாராமல்- நமக்குப் புகலிடம் அளிப்பவராக இருக்க வேண்டும்.

அத்தகைய ஒருவராக திகழ்கிறார்கள் இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும். இவர்கள் நமக்கு வாழ்க்கையில் நம்பிக்கை ஒளியாகத் திகழ்கிறார்கள்.


ஒளிமயமான
எதிர்காலம்
அருள்தந்தை
வேதாத்திரி மகரிஷி
அவர்களின் உரை

# 31. இவர்களல்லவோ மகான்கள்.

இன்றைக்கு 150 ஆண்டுகளுக்கு முன்னர் நமது பாரத தேசத்தில் ஓர் ஆன்மீகப் பேரொளி தோன்றியது. அவர் தாம். ராமகிருஷ்ணர்

இராமகிருஷ்ணருக்குப் பின்- 50 ஆண்டுகளுக்குப் பிறகு- நமது தமிழகத்தில் ஒரு ஆன்மீகப் பேரலை தோன்றியது. சுவாமி விவோகனந்தர் அனுமானித்த -அந்த சென்னை பேரலைதான் வேதாத்திரி மகரிசி.

இந்த ஆன்மீக ஜோதிகள், ஆன்மிக வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாமல்- இருளில் தட்டுத்தடுமாறிக் கொண்டிருந்த -லட்சோபலட்ச மக்களுக்கு ஆண்டவனை அடையும் வழியை- காட்டினார்கள்.


ஆண்டவன் உண்டா? என்று சில பேர் சந்தேகப்படுவார்கள். சில பேர் கேட்பார்கள்.

அப்படிப்பட்டவர்கள்- நம் இராமகிருஷ்ணர் மற்றும் வேதாத்திரி மகரிசி வாழ்க்கையைப் படித்துப் பார்த்தால், “கடவுள் ஒருவர் மட்டுமே உண்மை. மற்றவை அனைத்தும்- இந்த உலகில் அர்த்தமற்ற சங்கதிகள்” என்ற உண்மை- உள்ளங்கை நெல்லிக்கனி போலவும் உணர்வார்கள்.

“கடவுளைக் கண்ட ஞானிகள் இந்த உலகத்திலே எவ்வளவோ போர் இருந்திருக்கிறார்கள்.

ஆனால், கடவுளை மற்றவர்களுக்குக் காட்டக் கூடியவராக இருந்தவர் -நம் தட்சிணேசுவர மகான். கடவுள் தத்துவத்தை

பாமரனுக்கும்- எளிதாக உணர வைத்தவர் நம் கூடுவாஞ்சேரி மகான்



வேதாத்திரி மகரிசி.

ஒரு நடிகரோ,நடிகையோ, அரசியல்வாதியோ, எழுத்தாளரோ, பணக்காரரோ, பேச்சாளரோ வந்தால், மக்கள் அந்தக் கவர்ச்சியிலே மயங்கி -அங்கே போய் விழுவார்கள்.

ஆனால் இது போன்ற கவர்ச்சி எதுவமே இல்லாத நிலையிலும் -மக்கள் இந்த மகான்களை மதித்தார்கள். மதிக்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம்? அவர்களிடம் இருந்த அப்பழுக்கற்ற, பரிசுத்தத்திற்கே இலக்கணமாக அமைந்த அவர்களது வாழக்கைதான்- அதற்குக் காரணமாகும்.

ஆன்மீக வாழ்க்கையில் -சமத்துவ மனநிலைக்கு மிகவும் முக்கியத்துவம் உண்டு.

இது பற்றிப் -பலருக்கும் தெரியாது. சிலருக்குத் தெரிந்திருந்தாலும்- அதை நடைமுறை வாழக்கையில் -பின்பற்றுவதற்குப் பெரிதும் போராடுபவர்களாக இருப்பார்கள்.

இராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசி இருவருமே எப்போதும் சமத்துவ நிலையிலேயே இருந்தார்கள்.

மண்ணையும் பொன்னையும் கங்கையில் எறிந்து “கல்லும் மண்ணும் ஒன்றே” என்று- இராமகிருஷ்ணர் சொல்லியிருக்கிறார்.

"பணம் என்று நச்சு" என்று- பணத்தை சொல்லி -அதன்படி வாழ்ந்தும் காட்டியவர் மகரிசி.

காமமும் காஞ்சனமும்- அதாவது பெண்ணாசையும் பொன்னாசையும் -ஞான வாழ்க்கைக்குப் பெரும் இடையுறுகள் என்று இராமகிருஷ்ணர்- அடிக்கடி தமது சீடர்களுக்கு உபதேசிப்பது வழக்கம்.

மூவாசையை எப்படி வெல்வது? ஆசையை எப்படி சீரமைப்பது? என்று- பாடத்திட்டமே வகுத்து பயிற்சி அளித்து வருபவர் வேதாத்திரி மகரிசி.

சிவமும் சக்தியும் ஒன்றே என்பதை -இராமகிருஷ்ணர் பின்வருமாறு சொல்வது வழக்கம்.

"பிரம்மத்துக்கும் சக்திக்கும் சொல் அளவில்தான் வேறுபாடே தவிர- உண்மையில் இல்லை. நெருப்பும் அதன் உஷ்ணமும், பாலும் அதன் வெண்மையும், மணியும் அதன் ஒளியும் ஒன்றானவை போல. பிரம்மமும் சக்தியும் ஒன்றேயாகும். ஒன்றில்லாமல்- மற்றொன்றை நினைக்க முடியாது. அல்லது அவை இரண்டையும்- வேறுபடுத்த முடியாது.

வேதாத்திரி மகரிசியோ- மெய்ஞான விளக்கத்தோடு விஞ்ஞானத்தையும் சேர்த்து விளக்கினார்.

இருப்பும் இயக்கமும்- அதாவது சிவமும் சக்தியும்- ஒன்றே. சுத்தவெளியின் அசைவே- சக்தி. மிகவும் எளிமையாக புரிய வைத்தார்.

சர்வமும் சிவமயம் என்பது- இராமகிருஷ்ணருக்கு வெறும் வார்த்தையாக இல்லாமல்- அனுபவமாக ஆகியிருந்தது. இதைப்பற்றி- அவரே பின்வருமாறு சொல்லியிருக்கிறார்.

"ஒரு நாள் சிவபூஜையின்போது- வில்வதளங்களைச்- சிவலிங்கத்தின் மீது போட்டுக் கொண்டிருந்தேன்.

அந்தச் சமயத்தில்- ஜகத் முழுவதும் சிவசொருபமாக- எனக்குத் தோன்றயது. . அவ்விதம் காண்பதற்கு- நான் எந்த முயற்சியும் செய்யாதிருந்தபோதே -அந்தத் தோற்றம் என் கண்முன் உண்டாயிற்று.

அன்றையிலிருந்து -சிலிங்கத்தின் மூலமாகச் சிவபெருமானை - நான் வழிபடுவது முடிவவுற்றது.

ஒரு நாள்- பூப்பறித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று ஒவ்வொரு பூச்செடியும் -சர்வ வியாபகனுக்கு அணியப்படும் பூக்கொத்தாக உணரப்பட்டது. அதிலிருந்து- நான் புஷ்பம் கொய்வது நின்று விட்டது."

வேதாத்திரி மகரிசியோ- அசையும் பொருளையும்- அசையாப் பொருளையும்- சுத்தவெளியின் அம்சமாகப் பார்த்ததுடன்- அதை மானுடத்திற்கு- எளிமையாக புரியும்படி விளக்கி வைத்தார்.

ஒரு சமயம்- அமெரிக்க மண்ணில் -மலர்களைப் பார்க்கிறார். தன்னை அறியாமல்- இறைத்தத்துவம் பாடலாக பரிணமிக்கிறது.

"மலரே மலரே நீயார் எனக்கேட்டாய்

மணமும் அழகும் வண்ணமும் என்

பலவாறான நினைவகற்றிப்

பார்க்க உன்னில் ஆழ்ந்து விட்டேன்"

"இயற்கை அழகை ரசிக்கும்- உன்

எண்ணம் மிகமிக உயர்ந்துளது

செயற்கை மயக்கம் தெளிந்தறிவு

செம்மை பெற என் கதை சொல்வேன்"

“மலரே! நீயார் எனக் கேட்டாய்

மறை பொருளான தெய்வமே நான்

சிலரே அறிவார் இவ்வுண்மை

சிந்தனை செய்ய வல்லவர்கள்”

என்று -இறைநிலையே- தானாக வந்து உள்ளதை- அப்பாட்டில் பாடிவைத்தார்.

மதுர்பாபுவோடு- இராமகிருஷ்ணர் காசியாத்திரை மேற்கொண்டார்.

வழியில்- தேவ்கர் என்ற இடத்தில் மக்கள் வறுமையிலும் பசியிலும் வருந்துவதைக் கண்டு- பரமகம்சர் பதறுகிறார்.

அந்த ஏழை எளியோருக்கு உதவும்படி மதுர்பாபுவிடம் கூறினார். மதுர்பாபு தயங்கினார்.

அந்த ஏழை மக்களுக்கு நிவாரணம் தந்தாலன்றி- இராமகிருஷ்ணர் காசியாத்திரைக்கு வர மாட்டார் என்பது புரிந்தது.

பின்னர்- மதுர்பாபு, இராமகிருஷ்ணர் குறிப்பிட்ட மக்களுக்கெல்லாம் உணவும் உடையும் பணமும் தந்தார்.

அவ்விதம் தந்த பிறகே- மேற்கொண்டு காசி யாத்திரைப் பயணத்தைத் தொடர- இராமகிருஷ்ணர் சம்மமதித்தார்.

ஒரு நாள்- தனது அறுந்து போன செருப்பை தைக்க -சாலையில் அமர்திருந்து செருப்பு தைக்கும் ஏழைத் தொழிலாளியிடம்- மகரிசி கொடுத்தார்,

ஏழைத் தொழிலாளியின்- வயிறு ஒட்டியிருந்தது. வருமானம் இல்லாததால்- முதல் நாள் இரவும், காலையிலும் அவன் சாப்பிடாததை அறிந்தார். அவரது- உள்ளம் வாடியது.

எத்தனையோ ஏழைகள்- ஒரு வேளை உணவு உட்கொண்டும்.- சிலசமயம்- அதுவும்கூட இன்றியும்- பட்டினி கிடக்கும் போது- நான் மட்டும் இரண்டு வேளை- ஏன் சாப்பிட வேண்டும்.

ஒரு வேளை மட்டும்-சாப்பிட்டால் போதாதா? என்று வினவி - அதையே முடிவாக ஏற்றார்.

அன்று இரவு- உணவு உட்கொள்ளவில்லை. தனது 23 வயதில் இரவு உணவை விட்டவர்- வாழ்நாள் முழுவதும் இதைக் கடைப்பிடித்தார்.

சிறிய சிறிய உதாரணங்களின் மூலம்-இந்த மகான்கள் அருளிய உபதேசங்களையும்- ஒன்றன்பின் ஒன்றாக அவர்கள் பெற்ற ஆன்மீக அனுபவங்களையும்- நாம் சிந்திக்கும் போது -"சமானமில்லாத பரமஞானிகள் இவர்கள். ஆகா! இவர்களல்லவோ மகான்கள்!" என்ற எண்ணமே நம் உள்ளங்களில் நிறைகிறது.

# 30.பேலூர் மடமும் ஆழியாறும்.

இந்தியா ஒரு ஆன்மிக பூமி. கோடான கோடி வருடங்கள் கோடான கோடி ரிஷிகளாலும், யோகிகளாலும், சித்தப் புருஷர்களாலும் வழிநடத்தப்படும் பூமி இது. இங்கு காலத்திற்கு ஏற்ப மகான்கள் பிறப்பெடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணரின் கடைசி நாட்களில் தொண்டைப் புற்றுநோய் அவரைத் தாக்கியது.

அவருடைய சீடர்கள் அவரை கல்கத்தாவின் அருகில் உள்ள காசிப்பூர் என்ற இடத்தில் தோட்டவீட்டில் வைத்து வைத்தியம்,சேவை செய்தனர்.



1885 டிசம்பர் 11ஆம் நாளிலிருந்து 1886 ஆகஸ்டு 15 வரை இங்கு தங்கினார்.ஸ்ரீராமகிருஷ்ணரின் 1886 ஆகஸ்ட் 16 அன்று மகா சமாதி அடைந்தார். 

நோயாளியாக இராமகிருஷ்ணர் எங்கு படுத்திருந்தாரோ அதே அறையில் அவரது அஸ்திகளையிட்ட தாமிரப் பாண்டமொன்றை வைத்து சீடர்கள் வழிப்பட்டு வந்தனர்.

அவற்றில் ஒரு பகுதியை காக்குர்கார்ச்சி என்ற இடத்தில் புமிக்கு இடடுப் பின்னர் அங்கோர் ஆலயமும் எழுப்பினர்.

அஸ்திகளின் சில பகுதிகள் உறரித்துவாரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களில் கங்கயில் கரைக்கப்பட்டன்.

எஞ்சிய அஸ்தியை வெகுகாலம் கழித்து பேலூரில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் அற்புதமான பிரதான மடம் நிறுவப்பட்டபோது ,அங்கு சுவாமி விவேகானந்தர் நிரந்தரமாக வைத்தார்.

“ஐயனை இங்கு வைத்துவிட்டேன். இங்கேயே அவர் நிரந்தரமாக வாழ்வார் “ என்று உள்ளமுருகிய விவேகானந்தர் கூறினார்.

தன் குருநாதருக்காக சுவாமி விவேகானந்தரால் எழுப்பப்பட்ட ஆலயம்தான் பேலூர் இராமகிருஷ்ணர் ஆலயம்.

பேளுரில் உள்ள இராமகிருஷ்ணர் கோவில் ( பேளுர் - மடத்தின் பாரம்பரிய பெயர்) தான் அகில உலக ஸ்தலங்கலில் முக்கியமான ஸ்தலமாகும்.

சுவாமி விவேகானந்தர் தன் குருவின் இராமகிருஷ்ணன் பெருமைகளை மக்கள் கண்ணோட்டத்திற்கு கொண்டு வந்த ஒரு உன்னத ஸ்தலமாகும்.

அவர் சிகாகோ நகரில் தன் உரையை கொடுப்பதற்கு முன், பண்டைய கலாச்சாரங்களின் பெருமையை உணர்வதற்காக விவேகானந்தர் நிறைய வரலாற்று சிறப்பு மிக்க இடங்களைக் கண்டார்.

சுவாமி விவேகானந்தருடைய ஆன்மீக தொண்டர்கள் அவரை உத்திரப்பிரதேசம், டெல்லி, ராஜஸ்தான், குஜராத், மகாராஷ்டிரா, கேரளா, கர்நாடகா, தமிழ்நாடு போன்ற இடங்களுக்கு இட்டுச் சென்றனர்.

அப்போது விவேகானந்தர் தாஜ்மகால், பெத்தபூர் சிக்கிரி அரண்மனைகள், திவான் ஜகாஸ் அரண்மனைகள், ராஜஸ்தானில் உள்ள பழமை மிகுந்த கோவில்களை கண்டார்.

மேலும், குஜராத், மகாராஷ்டிரா, தமிழ்நாடு போன்ற கோவில்களில் கண்ட சிற்பக் கலையால் மனதளவில் மிகவும் ஈர்க்கப்பட்டு உள்ளார்.

அவருடைய அமெரிக்கா மற்றும் ஐரோப்பா பயணத்தின் போது அங்குள்ள கட்டிடக்கலையில் உள்ள நுணுக்கங்களாலும் பண்டைய நாகரீகத்தின் வளர்ச்சியாலும் மிகவும் கவரப்பட்டார் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவைகலுக்கெல்லாம் மரியாதை செய்யும் பொருட்டும், நன்றி தெரிவிக்கும் எண்ணத்தாலும் தம் உன்னதமான குருவான இராமகிருஷ்ணன் புகழ் உலகம் முழுவதும் பரவ தானும் முயல வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது.

அது விவேகானந்தரின் ஆசையாகவும் மாறி இருந்தது. அவர் தம் குருவிற்காக அமைக்கவிருக்கும் கோவிலானது, அனைத்து கோவில்களின் கலைத் திறனையும், வெவ்வேறு மதத்தில் உள்ள கோட்பாடுகளையும் ஒன்றிணைப்பதாக இருக்க வேண்டும் என்று எண்ணினார்.

இதனால் எம் மதத்தவர் இக்கோவிலுக்கு வந்தாலும் அவரவர் மதம் சார்ந்த கோவிலுக்கு வந்தது போல் இருக்க வேண்டும் என்று எண்ணினார்.

இதனால் நாட்டில் மதத்தால் ஏற்படும் பிரிவினைகள் களைந்து சகோதரத்துவம் பெருகி தம் குருவின் எண்ணத்தை நிலை பெற வேண்டும் என்று எண்ணினார்.



(கல்கத்தா, பேலூரில் உள்ள இராமகிருஷ்ண மடம்)

1. கர்பா மந்திரா என்னும் இடத்தில் இராமகிருஷ்ணரின் சிலையை பளிங்கு கற்களைப் கொண்டு அமைத்து, அதை தாமரை மலர் வடிவத்தில் மேடை அமைத்து, அதில் 'பிரம்மி ஹன்சா' என்னும் மந்திரங்களையும் அதில் பொறித்தார்.

2. 'பந்தர்' - (புனித கட்டுரைகளின் கருவூலம்) என்ற பீடம் கர்பா மந்திரா பீடத்திற்கு பின் அமைத்து உள்ளார். அதில் 'ஷியான் கக்ஷா' (நினைவூட்டும் கருவறை) என்றும் தம் சீடர்களின் பெருமைகளையும் பொறிக்கப்பட வைத்துள்ளார். தர்மத்திற்காக உணவுக் கூடம் தனியாக கர்பா மந்திராவிற்கு பின் புறத்தில் அமைத்துள்ளார்.

3. சிலையை செய்ய 'சல்கியா' (பேளூர் மடத்திற்கு 4 கி.மீ. தெற்கே

உள்ள இடம்) ,என்னும் இடத்திலிருந்து தச்சர்களை வரவழைத்து உயர் ரக பர்மா தேக்கு மரத்தால் செய்யப்பட்டுள்ளது.

4. கர்பா மந்திரா பீடத்தை 27 சதுரடி பரப்பளவில் சுமார் ஒரு மீட்டர் அழுத்தம் உடையதாக நிறுவியுள்ளார்.

5. உறுதியான கற்களைக் கொண்டு செங்கற் கற்கள், சுண்ணாம்பு கற்கள், கான்க்ரீட் கலவைகள் கொண்டு கர்பா மந்திராவை அமைத்துள்ளார்.

6. சுருக்கியை( செங்கற் பொடி) அங்கேயே தயாரித்து, மணலை மட்டும் ஹூக்லி மாவட்டத்தில் உள்ள பாண்டா என்னும் இடத்திற்கு அருகில் இருக்கும் 'மாக்ரா' என்னும் இடத்தில் இருந்து கொண்டு வரப்பட்டது.

7. மேற்கூரை சுண்ணாம்பு கற்களாலும், செங்கல் மற்றும் சிமெண்ட் கான்க்ரீட் கொண்டும் அமைத்து, அவற்றை தாங்குவதற்கு செறிவூட்டப்பட்ட இரும்புத் தூண்களை அமைத்துள்ளார்.

8. கர்பா மந்திராவின் தளமும், நாட் மந்திராவின் தளமும் வெள்ளை மற்றும் கருப்பு நிறத்திலான பளிங்கு கற்களைக் கொண்டு அமைத்துள்ளார்.

9. நாட் மந்திராவும், கர்பா மந்திராவும் தனித்தனியாகத் தான் கட்டப்பட்டது. இவை இரெண்டும் இணைந்திருந்தாலும் பார்வையாளர்களுக்கு இணைந்திருப்பதாக தெரியாது.

10. கர்பா மந்திரா மற்றும் நாட் மந்திராவின் கதவுகளும் ஜன்னல்களும் பர்மாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தேக்கு மரத்தால் ஆனது. சைனாவின் தச்சர்களைக் கொண்டு மர வேலைகள் அனைத்தையும் செய்தார். இவற்றை முறையாக பொருத்துவதற்காக மும்பையில் இருந்து ஆட்களை வரவழைத்து

கணிசமான கூலி கொடுத்து வேலையை முடித்தார்.

11. துத்தநாகத்தால் (copper) செய்யப்பட்ட மின்விளக்குகளை கோவிலின் பீடத்தில் அமைத்தது அங்குள்ள ஆட்களே.

12. கோவிலின் தோராய செலவு 1935 ல் 6 இலட்சமாகும். ஆனால் 1938 ல் முடியும் போது 8 இலட்சத்தை தொட்டது. இவற்றுக்குரிய அனைத்து செலவுகளும் போற்றுதலுக்குரிய இரெண்டு அமெரிக்க அன்பர்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

முப்பது ஆண்டுகள் கழித்து சுவாமி விவேகானந்தரின் மறைவிற்கு பின் இராமகிருஷ்ணரின் அடுத்த நேரடி சீடரான சுவாமி விஜயானந்தாவிற்கு திருவாளர் Martin Bern company யின் உதவியால் அவருக்கு அளிக்கப்பட்டது. இந்த கம்பெனி கல்கத்தாவில் உள்ள புகழ்பெற்ற கட்டிட கலையின் கம்பெனி ஆகும்.

M.J. Jerald brown உடன் கலந்து ஆலோசிக்கும் போது கட்டிடக்கலையின் கம்பெனியான Martin Bern கம்பெனியிடம் சுவாமி விவேகானந்தரின் மூன்று கோட்பாடுகளின் படி தான் கோவில் அமைக்க வேண்டும் என்று ஆணித்தரமாக கூறி விட்டார் சுவாமி விஜயானந்தா.

1. நாட் மந்திரா (வாழ்த்தும் சபை) மற்றும் கர்பா மந்திரா (கலைக் கூடம்) இவை இரெண்டும் ஹிந்து கலாச்சாரத்தில் இருந்து விலகாமலும், மேலும் கிறித்துவ சமயத்தாரின் தேவாலயம் போலவும் இணைப்பாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறினார்.

2. கர்பா மந்திராவிற்கு மேற் கூரை இசுலாம் முறைப்படி அமைய வேண்டும் என்றும் கூறினார்.

3. மற்ற கலை நுணுக்கங்கள் அனைத்தும் ஹிந்து தத்துவத்தை

கொண்டதாக கட்டிடக்கலை அமைய வேண்டும் என்றும் கூறினார்.

கட்டுமான நிபுணர்களால் இரெண்டு திட்டங்களும் பரிசீலிக்கப்பட்டு முடிவில் இந்திய முறையே தேர்ச்சி பெற்றது.

ஸ்ரீராமகிருஷ்ணரின் கோவிலுக்கு முதல் கல் நாட்டிய பெருமை சுவாமி சிவானந்தவையே சாரும். இது இராமகிருஷ்ணரின் பிறந்த தினமான மார்ச் மாதம் 13 ஆம் தேதியன்று நிறுவப்பட்டது.

தற்போது உள்ள பீடத்தின் கல்லை சுவாமி விஜயானந்தரால் நிறுவப்பட்டது. இது 30 மீட்டர் தொலைவில் தெற்கே உள்ள பீடமாகும். கடந்த 16 ஜூலை 1935 ல் நிறுவப்பட்டது. 14 ஜனவரி 1938 ல் கட்டிடம் முழுதுமாக நிறைவடைந்தது.



ராமகிருஷ்ண இயக்க குருவின் உறைவிடம்!ஜனவரி 08,2013
1

வில்வ மரத்திற்குத் தென்மேற்கில் சில அடி தூரத்தில் அமைந்துள்ள கட்டிடம் ராமகிருஷ்ண இயக்கத்தின் குரு வசிக்கும் இடமாகும். அவர் மடத்தில் இருக்கின்ற நாட்களில், காலையிலும் மாலையிலும் குறிப்பிட்ட நேரங்களில் அவரது தரிசனம் பெறலாம். அவர் வாழும் கட்டிடத்தின் கீழ்ப் பகுதி வங்க நாடக உலகினரின் நன்கொடையால் கட்டப்பட்டதாகும். எனவே அந்தப் பகுதி, வங்க நாடக உலகின் தந்தை என்று போற்றப்படுபவரும் ஸ்ரீராமகிருஷ்ணரின் சீடருமான கிரீஷ் சந்திர கோஷின் நினைவாக கிரீஷ் நினைவில்லம் என்று வழங்கப்படுகிறது. மாடிப் பகுதி பின்னர் கட்டப்பட்டது. இங்கிருந்து கங்கையை நோக்கிச் சென்றால் வருவது சமாதி பீடம்.

--

விவேகானந்தர் கோயில்!ஜனவரி 08,2013
1



விவேகானந்தர் கோயில் இரண்டு அடுக்குள் உடையது. மாடியில் பிரணவக் கோயில், கீழே விவேகானந்தர் கோயில். கோயில் கட்டும் காலத்தில் இந்த இடம் பள்ளமாக இருந்ததால் கீழ்க்கோயில் நிலமட்டத்திற்குக் கீழே உள்ளது.

சுவாமி விவேகானந்தர் திருமேனியை எரித்த இடத்தில் இந்தக் கோயில் கட்டப்பட்டுள்ளது. சுவாமிஜியே இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்.

நீங்கள் ஒரு நடை பேலூர் செல்லுங்கள்.. வேறு கிரகத்திற்குச் சென்று விட்ட உணர்வுதான் கிடைக்கும். அசாதாரண கிரகம் அது. அங்கு அந்த மகான்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்வீர்கள்.

பொள்ளாச்சி வால்பாறை சாலையில் ஆழியாறு ஆனைமலைக்கு அடிவாரத்தில் இருபது ஏக்கர் நிலப்பரப்பில் ஏறக்குறைய 50 லட்ச ரூபாய் செலவில் அறிவுத்திருக்கோயிலும் குடில்களும் பேரரங்குகளும் உண்ணும் இடமும் சமையல் கூடமும் மருத்துவ நிலையமும் மகரிசியின் எண்ணத்தில் உருவாகியது. அறிவுத்திருக்கோயில் அருட்தந்தையால் நிர்மானிக்கப்பட்டு ஆழியாறில் 08-02-2004ல் தொடங்கப்பட்டது.



ஓங்கார வடிவில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோயில் நான்கு பகுதிகளைக் கொண்டது. 1. அன்பகம். 2. அறிவகம். 3. அருளகம். 4. அருள் குருவகம்.

**அன்பகம்:**

திருக்கோயிலுக்கு வருகின்றனவர்களை அமர்த்தி மனித வாழ்வின் நோக்கம் நோக்கத்தை ஈடேறச் செய்லயவல்ல வழிகளான தற்சோதனை முறைகள் தியான முறை கடவுள் பற்றிய கருத்து ஆகியன பற்றிய விளக்கம் தரப் பொறுகிறது. கூட்டுத் தியானம் ஐந்து வேளையும் நடத்தப்படுகிறது.

**அறிவகம்:**

குண்டலினி தவப்பயிற்சகள் நான்கு படிகளில் தரப் பேறுகின்றன. அவற்றுள் முதல் மூன்று நிலைகளாகிய ஆக்கினை சாந்தி துரியம் ஆகியன இந்த அறையில் கொடுக்கப்படுகின்றன.

**அருளகம்:**

குண்டலினி தவப்பயிற்சியின் உச்சக்கட்ட பயிற்சியாகிய துரியாதீத தவப்பயிற்சி இங்குக் கொடுக்கபப் படுவதோடு அப்பயிற்சியைப் பெற்றவர்களைக் கொண்டு காலை மாலை கூட்டுத் தவமும் இவ்வறையில் நிகழ்தப் பெறுகின்றது. துரியாதீத தவப்பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே இவ்வறையில தவம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

**அருட்குருவகம்:**

அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிசி அவர்கள் வாழ்ந்த இல்லம் இப்போது நினைவிடமாக அமைந்துள்ளது.

**மணிமண்டபம்:**

வேதாத்திரி மகரிசியின் சமாதி இங்கு அமைக்கப்பட்டுள்ளது. பலநூறு அன்பர்கள் ஓரே நேரத்தில் தவம் செய்யகிறார்கள். நாள்தோறும் ஐந்து வேளையும் இங்கு தவம் நடத்தப்படுகிறது.

வள்ளலார் குடில்

சித்த மருத்துவ இல்லமாகத் திகழ்கின்றது.

**குடில்கள்:**

போகர்– திருமூலர் –காளங்கி நாதர் என்ற மூன்று சித்தர்களின் பெயர்களால் விளங்கும் மூன்று குடில்கள் உள்ளன. இன்னும் பல குடில்கள் உள்ளன.

**பேரரங்கு:**

ஆடிட்டோரியம் என்றைக்கப்படும் இப்பேரரங்கு கூட்ட அரங்காய் தங்கும் விடுதியாய் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதைத்தவிர அன்பர்கள் தங்குவதற்கு இரண்டு பெரிய அமைதி நிலையங்களும் உள்ளன.

இதைத்தவிர பெரிய சமையற்கூடம். டைனிங்– உண்ணும் இடமும் அமைந்துள்ளன.

**நாட்பணிகள்:** காலை **5. 15.** க்குச் சமித்துதுகளையும் பசுநெய் பச்சரிசி பசுஞ்சாணி வரகிட்ட ஆகியவற்றை இட்டு அன்பகத்தில் ஓமப் புகை எழுப்பப்பட்டுகிறது. இப்புகை நச்சுக் காற்றினையும் நச்சு எண்ண அலைகளையும் அழிக்கவல்லது என்பது மகரிசி அவர்களின் கருத்து என்பதனை உலக சமாதானம் **(1957)** என்ற நூல் கூறும். இதனை இன்றைய அறிவியல் ஆராய்ச்சி ஒத்துக் கொள்கின்றது

பயிற்சி:

ஆண்டு முழுவதும் – இங்கு – மகரிசியின் அகத்தாய்வு பயிற்சிகள் – காயகல்ப பயிற்சிகள் – உடற்பயிற்சிகள் – பிரம்மஞானப் பயிற்சி – பேராசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கானப் பயிற்சி – மௌன நோன்பு நடைபெற்று வருகின்றன.

பதினெட்டு சித்தர்களும் பதுங்கி இருக்கும் ஞானக்கடல். அருள் என்னும் மனம் கொண்டு தேடினால் அகதப்படுவார்கள். நம் கருமையத்ததைத் தூய்மை செல்வார்கள்.

அவர் வாழ்ந்த சக்திவாய்ந்த ஆற்றல் களம்தான் ஆழியாறு.

ஆழியாறில் நீங்கள் உலா வரும் போது உங்களுக்குள் ஒரு சுத்திகரிப்பு தானே நிகழ்கிறது. மனவளக்கலையை பயின்றால் அந்த சுத்திகரிப்பு உங்களுக்குள் நீடித்து நிலைக்கிறது.

சுவர்களற்ற எல்லைக் கோடுகளற்ற, பேதமற்ற, ஆக்கப் புர்வமான உணர்வலைகளை எழுப்பும் சக்தியைக் காற்று மையத்தில் ஸ்தூலமாக கொண்ட கரகத்தை உங்களால் கற்பனை செய்ய முடியுமானால் நீங்கள் ஒரு நடை ஆழியார் செல்லுங்கள்.. அதை நிஜம் என்று உணர்வீர்கள்.

வேறு கிரகத்திற்குச் சென்று விட்ட உணர்வுதான் கிடைக்கும். அசாதாரண கிரகம் அது.

# ஞான வள்ளல்கள்




ராஜம் பதிப்பகம்Ebook

# துணைநின்ற நூல்கள்

1. ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகள், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
2. ஸ்ரீராமகிருஷ்ணரின் கேள்வி, பதில், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
3. அமுதத் துளிகள், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை
4. பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
5. *The Gospel of Sri Ramakrishna* (English)
6. *The Gospel of Sri Ramakrishna* (English) II
7. *Sri Ramakrishna Upadesh Mozighal* (Tamil)
8. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் மாத இதழ்கள், ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
9. ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள். ஸ்ரீராமகிருஷ்ணமடம், சென்னை.
10. அன்பொளி மாத இதழ்கள்
11. தர்மச் சக்கரம் மாத இதழ்கள்.